இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 96 | வள்ளுவர் ஆண்டு 2048 | மாசி 18 வியாழக்கிழமை 02.03.2017

## டெங்கு அதிகரிப்பை உடனடியாகத் தடுக்க கட்டுப்பாட்டு வாரம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

நாட்டில் டெங்கின் தாக்கம் அதிகரித்து வருவதையடுத்து நடுவண் சுகாதார அமைச்சின் டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவினர் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தை எதிர்வரும் 29ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் நான்காம் திகதி வரை மேற்கொள்ளுமாறு அறிவித்துள்ளனர். >> 24

# எவர் எதிர்த்தாலும் புதிய அரசமைப்பு உருவாகியே தீரும்

## அமைச்சர் ராஜித திட்டவட்டம்



கொழும்பு, மார்ச் 2

புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும் என்பதே அரச தலைவருக்கான தேர்தலில் அரசு கொடுத்த வாக்குறுதியாகும். எவர் எதிர்த்தாலும் பொது வாக்கெடுப்புடன் புதிய அரசமைப்பு கொண்டு வரப்படும். இவ்வாறு அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது: >> 24



9 வருடங்களின் பின்னர் சொந்தக் காணிகளுக்குள் பெரும் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் நேற்றுக் காலடி எடுத்து வைத்தனர் பிலக்குடியிருப்பு மக்கள்.

# 30ஆம் நாளில் முடிவுக்கு வந்தது பிலக்குடியிருப்புப் போராட்டம்

முல்லைத்தீவு, மார்ச். 2

பிலக்குடியிருப்பு மக்கள் ஆரம்பித்த அறவழி 'ஓயாத போராட்டம்' நேற்று 30 ஆவது நாளில் அவர்களது சொந்தக் காணிக்குள் 9 வருடங்களின் பின்னர் காலடி எடுத்து வைத்ததுடன் முடிவுக்கு வந்தது. காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை என்று குழப்பநிலை தோன்றியிருந்தாலும். வான்படையினருடன் மீண்டும் நடந்த பேச்சுக்களைத் >> 24

## பன்றிக் காய்ச்சல் அறிகுறி இருப்பின் உடனடியாகவே சிகிச்சை பெறுங்கள்

### வடக்கு சுகாதாரப் பணிப்பாளர் நேற்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 2

பன்றிக் காய்ச்சல் எனப்படும் எச்1என்1 என்ற இன்புளுவென்சா வ்வரஸ் தொற்றுக்கான பின்வரும் அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாகச் சிகிச்சை பெறுங்கள். நோயை ஆரம்பத்தில் கண்டறிந்து சரியான சிகிச்சை வழங்குவதன் மூலமாக உயிரிழப்பைத் தடுக்கலாம். >> 24

## கேப்பாபிலவில் நேற்று ஆரம்பித்தது போராட்டம்



முல்லை., மார்ச். 2

பிலக்குடியிருப்பு மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டு அவர்களது போராட்டம் நேற்று முற்றுப் பெற்றுள்ள >> 22

## வயாவிளான் ராணுவ முகாம் முன்பாக நேற்று கவனவீர்ப்பு

### மயிலிட்டி, தோலகட்டிப் பகுதிகளை உடனடியாக விடுவிக்குமாறு கோரி



யாழ்ப்பாணம், மார்ச் 2

வலி. வடக்கில் பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள மயிலிட்டி, வயாவிளான் தோலகட்டிப் பகுதிகளை விடுவிக்குமாறு கோரி இராணுவ முகாம் முன்பாகக் கவனவீர்ப்புப்போராட்டம்முன்னெடுக்கப்பட்டுள்ளது. >> 24

## எச்1என்1 நோய்த் தொற்றுக்கு யாழில் 42 பேருக்குச் சிகிச்சை

### ஆயினும் ஒன்பது பேருக்கு மட்டுமே பன்றிக் காய்ச்சல்

யாழ்., மார்ச் 2

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த மாத (பெப்ரவரி) புள்ளிவிவரங்களின்படி, பன்றிக் காய்ச்சல் எனப்படும் எச்1என்1 நோய்த் தாக்கத்துக்கென 42 நோயாளர்கள் சிறப்புச் சிகிச்சை பெற்றுள்ளனர். அவர்களில் 9 நோயாளர்கள் மட்டுமே பன்றிக்காய்ச்சல் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதிப் >> 24

## உண்மை அறியும் ஆணைக்குழு தேவையற்றது

### சிவில் அமைப்புக்கள் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 2

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு இப்போது தேவையில்லாதது. அதனைத் தமிழ் மக்கள் கோரவுமில்லை. இந்த >> 24

## இலங்கைக்கு அவகாசம் வழங்கப்படல் அவசியம்

### ஜெனிவாவில் பிரிட்டன் வலியுறுத்தல்

ஜெனிவா, மார்ச் 2

இலங்கை இணை அனுசரணை வழங்கி ஏற்றுக்கொண்ட தீர்மானத்தை நடைமுறைப்ப டுத்துவதற்கு இலங்கைக்குக் கால அவகாசம் வழங்கப்படவேண்டும் என்று, ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் பிரிட்டன் கோரியுள்ளது. >> 23

## இணங்கிய விடயங்களை ஆராயும் வழிநடத்தல் குழு

யாழ்ப்பாணம், மார்ச் 2

கடந்த காலங்களில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுப் பொதிகள், அனைத்து முதலமைச்சர்களும் இணங்கிய விடயங்களை உள்ளடக்கி, வழி நடத்தல் குழுவின் கடந்த அமர்வில் முன் வைக்கப்பட்ட அறிக்கையை >> 24

## புதுக்குடியிருப்பு முகாமை அகற்றுவதற்கு ஏற்பாடுகள்

### 27ஆவது நாளாக முடிவேதுமின்றி தொடர்கிறது மக்கள் போராட்டம்



முல்லைத்தீவு, மார்ச் 2

புதுக்குடியிருப்பில்நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் தமது முகாமை இடமாற்றுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். காணிக்குள் கால் பதிக்கும்வரை >> 22

### இலங்கை மீதான செயற்பாடு;

## மனித உரிமைச் சபையை பாராட்டியது அமெரிக்கா

ஜெனிவா, மார்ச் 2

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை முன்னெடுத்துள்ள செயற்பாடுகளை அமெரிக்கா பாராட்டியுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 34ஆவது கூட்டத் தொடர்நடைபெற்று வருகின்றது. அமெரிக்காவில் ஆட்சி மாற்றம் >> 23




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிலக்குடியிருப்புப் போராட்டத்துக்குக் கிடைத்தது வெற்றி







விடுவிக்கப்பட்ட காணிகளில் தங்கியிருக்கும் மக்கள் கொட்டில் அமைக்கத் தொடங்கியுள்ளனர்

## அரசியல்வாதியின் அடாவடிக்கு ஆதரவாகவுள்ளனர் பொலிஸார்

### மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஊடகவியலாளர் நேற்று முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 2
பெரும்பான்மை இன அரசியல் கட்சியைச் சேர்ந்தவரின் அடாவடிகளுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றனர் என்று குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தில் உதயன் பத்திரிகையின் செய்தியாளர் நேற்று முறைப்பாடு செய்தார்.

காரைநகரைச் சேர்ந்த தியாகராஜா துவாரகேஸ்வரன் உதயன் பத்திரிகையின் செய்தியாளர் ந.லோகதயாளனுக்கு அச்சுறுத்தல் விடுத்தும் அவதூறு ஏற்படுத்தும் வகையில் தனது முகநூலில் கருத்துக்களைப் பதிவிட்டும் வந்தார். இது தொடர்பில் அவர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரி கடந்த ஜனவரி 31ஆம் திகதி யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் செய்தியாளர் ந. லோகதயாளன் முறைப்பாடு செய்தார். எனினும் குறித்த முறைப்பாடு தொடர்பில் வர்த்தகர் மீது யாழ்ப்பாணம் பொலிஸார் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கூட்டு அரசில் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் என்று தெரிவித்து வரும் துவாரகேஸ்வரன் மீதான முறைப்பாட்டுக்கு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறும் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என்று கோரியே செய்தியாளரினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டது.

தியாகராஜா துவாரகேஸ்வரன் என்ற முகநூலின் ஊடாக வடக்கு மாகாண முதலமைச்சர் உள்ளிட்ட அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், அலுவலர்கள் உள்ளிட்டோருக்கு அவதூறு ஏற்படும் வகையில் பதிவுகள் இடப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டப்பட்டது. (வ-105)

## டெங்குக் காய்ச்சலால் பெண் நேற்றுச் சாவு

அம்பாறை, மார்ச் 2
டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த அட்டாளைச்சேனையைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயொருவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார் என அந்தப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் ஏ.எல். அலாவுதீன் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் இவர் செவ்வாய்க்கிழமை சேர்க்கப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக் காலை சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

ஆதம்பாவா சம்சுனா (வயது-36) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (து-ய)

## காணி அதிகாரி மீது சூடு; கைதான நபர் விடுதலை

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்டப் பணிப்பாளர் நேசக்குமார் விமல்ராஜ் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு சந்திவெளிப் பிரதேசத்தில் வைத்து, சந்தேகத்தின்பேரில், மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸாரினால் இவர் கைது செய்யப்பட்டார்.

24 மணித்தியாலங்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த இவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து பொலிஸாரினால் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார். (முன்னர் வந்த செய்தி 13ஆம் பக்கத்தில்) (து-ய)

## பிணைமுறி மோசடி மகிந்தவே காரணம்

### கூறுகிறார் அமைச்சர் ராஜித

கொழும்பு, மார்ச். 2
2015 ஆம் ஆண்டுக்குரிய அனைத்துப் பிணை முறிகளுக்குமான மத்திய வங்கியின் வர்த்தமானி அறிவித்தலில் ஜனவரி மாதம் முதலாம் திகதி மகிந்த ராஜபக்ச கைச்சாத்திட்டிருந்தமையே சிக்கலுக்குக் காரணமாகுமென அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவு [illegible] கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

'மத்திய வங்கியின் வர்த்தமானி விவகாரத்தில் உண்மையில் என்ன நடந்தது என்று பத்திரிகையாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில், பொதுவாக மத்திய வங்கிப் பிணை முறி விநியோகத்தின்போது அதனை ஒவ்வொன்றாக வர்த்தமானியில் வெளியிடவேண்டும். அதில் நிதி அமைச்சர் கைச்சாத்திடவேண்டும். 2013 ஆம் ஆண்டிலிருந்து ஒரு வருடத்திற்குரிய அனைத்துப் பிணைமுறி தேவைகளுக்குமான வர்த்தமானி ஒரே தடவையில் வெளியிடப்பட்டுள்ளதுடன் அதில் நிதி அமைச்சர் கைச்சாத்திடவில்லை. இது ஏன் என்று தெரியாது? ஏன் இந்த மரபில் மாற்றம் ஏற்பட்டது என்று தெரியவில்லை.

2015 ஆம் ஆண்டுக்கான அனைத்துப் பிணை முறிகளுக்குமான வர்த்தமானி அறிவித்தல் ஜனவரி முதலாம் திகதி வெளியிடப்பட்டுள்ளது. அப்போது நிதி அமைச்சராக இருந்த முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச மூன்று வருட வழமைக்கு மாறாக அதில் கைச்சாத்திட்டுள்ளார். 2016 ஆம் ஆண்டுக்குரிய பிணை முறிகளுக்கான வர்த்தமானி அறிவித்தலில் அப்போதைய ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் கைச்சாத்திடவில்லை. இதுதான் குழப்பத்துக்குக் காரணமாகும்-என்றார். (து-ூ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஞ்சன் – இந்திக இடையே மோதல் நிலை

கொழும்பு, மார்ச். 2
திவுலப்பிட்டிய பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க மற்றும் ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக அனுருத்த ஆகியோருக்கு இடையே நேற்று உச்சக்கட்ட மோதலொன்று இடம்பெற்றுள்ளது.
திவுலப்பிட்டிய பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தின்போது பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக அனுரத மற்றும் திவுலப்பிட்டிய பிரதேச செயலாளர், பொலிஸ் அதிகாரிகள் உட்பட பல அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.
இந்த கூட்டத்தின்போது, திவுலப்பிட்டிய பகுதியில் இடம்பெற்ற மண் அகழ்வு தொடர்பாகக் கலந்துரையாடப் பட்டது. இதன்போது ரஞ்சன் ராமநாயக்க மற்றும் இந்திக இடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டதோடு இருவரும் மோதிக்கொள்ளும் அளவுக்குச் சென்றனர்.
அருகில் இருந்த அதிகாரிகள் இருவரையும் தடுத்து நிறுத்தினர்.
இருவரும் நேருக்கு நேராகக் கடுமையான சொற்பிரயோகங்களை பறிமாறிக்கொண்டதோடு இடையிடையே மோதிக்கொள்ள எத்தனித்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# போலி நாணயத் தாள் வைத்திருந்த நபருக்கு இரு வருடக் கடூழியம்

## யாழ்ப்பாண மேல்நீதிமன்றம் தீர்ப்பு

யாழ்ப்பாணம். மார்ச்.2
போலி நாணயத் தாள்களை உடைமையில் வைத்திருந்தார், தான் வைத்திருப்பது போலி நாணயத்தாள் என்று தெரிந்தும் அதை உபயோகப்படுத்தினார் என்ற இரண்டு குற்றச்சாட்டுக்களுக்காக யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதால், அவருக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.
இந்த வழக்கு நேற்று யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப் பட்டபோதே நீதிபதி இவ்வாறு தீர்ப்பளித்தார்.
கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் வை. ஆர். 5232053 என்ற இலக்கமுடைய போலி 5ஆயிரம் ரூபா நாணயத் தாளை உடைமையில் வைத்திருந்தார் என்றும், ஆர் 5232063 என்ற இலக்கமுடைய மற்றுமொரு போலி 5ஆயிரம் ரூபாத் தாளைப் போலியாகப் புனையப்பட்ட தாள் என்று தெரிந்தும் அதை உபயோகப்படுத்தினார் என்றும் குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் கடந்த 2012 ஆண்டு கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
இந்த வழக்கின் விசாரைணைகள் கிளிநொச்சி நீதிவான் மன்றில் இடம்பெற்றன. 2016ஆம் ஆண்டு வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது. மேல் நீதிமன்றில் குறித்த வழக்கு தொடர்ச்சியாகத் திகதியிடப்பட்டு நடைபெற்றுவந்த நிலையில் நேற்று விசாரணைக்காக எடுத்து கொள்ளப்பட்டது.
கடந்த வழக்குகளில் குற்றவாளி தனது குற்றத்தை ஒப்புக்கொள்ளாத நிலையில், அவர் இப்போது குற்றத்தை ஒப்புக்கொள்கிறார் என்று அவரது சட்டத்தரணி நேற்று மன்றில் தெரிவித்தார்.
இதனை அடுத்துக் குற்றவாளிக்கு முதலாவது குற்றச்சாட்டுக்கு 5 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 2 வருடக் கடூழியச் சிறைத் தண்டனையும், தண்டப் பணமாக 5ஆயிரம் ரூபாவும், தண்டப் பணம் செலுத்தத் தவறின் 1வருடக்கடூழியச்சிறைத்தண்டனையும் இரண்டாவது குற்றச்சாட்டுக்கு 5வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 2வருடக் கடூழியச் சிறைத் தண்டனையும், தண்டப் பணமாக 5ஆயிரம் ரூபாவும், தண்டப் பணம் செலுத்தத் தவறின் 1வருட கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார் யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன்.

*பின்னணி*
பரந்தனில் அமைந்துள்ள ஸ்ரார் உணவகத்தில் சுப்பிரமணியம் இராதகிருஷ்ணன் என்பவர் கொள்வனவு செய்த பொருள்களுக்கு இராமச்சந்திரன் சதீஸ்குமார் என்பவர் பணம் கொடுத்தபோதே அவர் கொடுத்த பணம் போலியானது, பொய்யாகப் புனையப்பட்டது என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தார்.
இந்த வழக்கின் ஆரம்ப கட்ட விசாரணைகள் கிளிநொச்சி நீதிவான் மன்றில் நடந்தன. கடந்த 2016 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதி இந்த வழக்கின் குற்றப்பத்திரம் சட்டமா அதிபரினால் யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது.
(த-21-ரி)

# இணங்கிக் கொண்ட விடயங்களிலிருந்து நழுவுகிறது இலங்கை

## பிரிட்டன் நாடாளுமன்றத்தில் காரசாரமான கருத்துகள் முன்வைப்பு

கொழும்பு, மார்ச். 2
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை இணங்கிக் கொண்ட விடயங்களிலிருந்து நழுவுவது, பின்வாங்குவது தொடர்பில் பிரிட்டன் நாடாளுமன்றத்தில் காரசாரமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.
பிரிட்டன் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமர்வில், தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் தலைவரான கன்சர்வேட்டிவ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜேம்ஸ் பெரி விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றினார்.
'இலங்கையில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும், 2015 ஆம் ஆண்டு அரசு வழங்கிய பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் பாதுகாப்பு, நல்லிணக்கம் தொடர்பான வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. போர்க்குற்றங்கள் தொடர்பான நீதிப் பொறிமுறைகளை உருவாக்குவது குறித்த கால அட்டவணை எதையும் இலங்கை கொண்டிருக்கவில்லை. பன்னாட்டு நீதிபதிகள், சட்டவாளர்கள், வழக்குத் தொடுநர்களை அனுமதிக்க முடியாது என்று மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் தெளிவான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். அவர்கள் முற்றிலும் உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றையே அமைக்கப்போவதாகக் கூறியுள்ளனர். இலங்கை இராணுவத்தைப் பாதுகாப்போம் என்று மூத்த அமைச்சர்கள் கூறியுள்ளனர்' என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜேம்ஸ் பெரி சுட்டிக்காட்டினார்.
இதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சருமான ஹியூகோ ஸ்வயர், மைத்திரிபால சிறிசேன - ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு நுட்பமான சமநிலை பேண முயற்சிக்கின்றது. இலங்கையில் கூட்டு அரசு இல்லாவிட்டால், எந்த முனையிலும் முன்னேற்றத்தைப் பார்த்திருக்க முடியாது. நாங்கள் கூறுகின்ற எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்று வாதிடுவதற்கும் முன்பாக, இலங்கையின் உள்நாட்டு அரசியல் நிலவரங்கள் குறித்து பரந்தளவிலான புரிதல் இருக்கவேண்டியது அவசியம் என்றார்.
இந்த விவாதத்தில் உரையாற்றிய அயலுறவுத்துறை மற்றும் பொதுநலவாய விவகாரங்களுக்கான அடிநிலைச் செயலர் ரொபியாஸ் எல்வூட், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 2015 ஆம் ஆண்டு தீர்மானத்தில் உறுதியளித்தபடி பல வாக்குறுதிகளை இலங்கை இன்னமும் நடைமுறைப்படுத்தவில்லை. வாக்குறுதிகளை நிறைவேற்ற மேலும் கால அவகாசம் தேவைப்படுவதாக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.
2015ஆம் ஆண்டு தீர்மானத்தின் தொடர்ச்சியாகத் தீர்மானத்தைக் கொண்டுவருவது குறித்து இலங்கையுடனும், மூலத் தீர்மானத்தை முன்வைத்திருந்த ஏனைய நாடுகளுடனும் பிரிட்டன் கலந்துரையாடி வருகிறது. எஞ்சியுள்ள வாக்குறுதிகளை இலங்கை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்ற வழிகாட்டும் கொள்கையின் அடிப்படையிலேயே எமது கலந்துரையாடல்கள் அமையும். ஐ.நா. மனித உரிமைகள் சபையில் உயர் மட்டப் பேச்சுக்கள் மற்றும் திட்ட நிதியை வழங்குவதன் மூலம், இலங்கையின் முன்னேற்றங்களை ஊக்குவிக்க வேண்டும்.
அரசமைப்பு மறுசீரமைப்பில் அரசு முன்னேற வேண்டும். காணிகள் மீள ஒப்படைக்கப்பட வேண்டியது மிகவும் முக்கியம். காணாமற்போனோர் பணியகத்தை உருவாக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், அதற்குத் தேவையான நிதியை வழங்குதல் மற்றும் அதனை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இலங்கை எடுக்க வேண்டும் - என்றார்.
(த-5)

# நீதிமன்ற வளாகத்தில் 2 துப்பாக்கிகள் மீட்பு

## கல்கிசைப் பொலிஸார் நடத்திய சோதனையின்போது

கொழும்பு, மார்ச். 2
கல்கிசை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு துப்பாக்கிகள் மற்றும் 10 துப்பாக்கி ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கல்கிசை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போதே இவை மீட்கப்பட்டுள்ளன.
இவற்றில் சீனாவில் தயாரிக்கப்பட்ட பிஸ்டலும், அதற்குப் பயன்படுத்தப்படும் நான்கு ரவைகளும், ரிவோல்வர் ஒன்றும் அதற்குப் பயன்படுத்தப்படும் ஆறு ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரியந்த ஜெயக்கொடி குறிப்பிட்டுள்ளார்.
துப்பாக்கிகள் ஏதேனும் தாக்குதலுக்காக அங்கு மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (த-5)

## சிறையில் கொல்லப்பட்டோரில்

# 16 பேரின் குடும்பங்களுக்கு தலா ரூ. 20 லட்சம் நட்டஈடு

கொழும்பு, மார்ச். 2
2012ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற குழப்பநிலையின் போது சுட்டுக் கொல்லப்பட்ட 27 பேரில், 16 பேரின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பில் ஆராய்ந்த மூவரடங்கிய குழுவினரின் பரிந்துரைக்கு அமைய, அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் நட்டஈடுவழங்கும் யோசனையை முன்வைத்திருந்தார்.
இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த கைதிகளின் குடும்பங்களுக்குத் தலா 20 லட்சம் ரூபாவும், காயமடைந்தவர்களுக்கு 5 லட்சம் ரூபாவும் இழப்பீடாக வழங்க யோசனையில் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.
2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9ஆம் திகதி வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதலில், 27 சிறைக் கைதிகள் உயிரிழந்ததோடு, சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் கைதிகள் 20 பேர் காயமடைந்தனர். இந்த விடயம் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட குழுவினால் உயிரிழந்த 27 பேரில் 16 பேரின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்கப் பரிந்துரைக்கப்பட்டது. ஏனைய 11 பேரும் தப்பிச் செல்ல முற்பட்ட காரணத்தால் கொல்லப்பட்டமையால் அவர்களின் குடும்பங்களுக்கு நட்டஈடு கொடுக்கத் தேவை இல்லை என கூறப்பட்டுள்ளது. (த-5)

# ராஜிதவுக்கு எதிராக மகிந்த அணியினர் இரு முறைப்பாடு

கொழும்பு, மார்ச் 2
மகிந்த ஆதரவு அணியினர் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராக இரண்டு முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளனர்.
இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடி விசாரணை ஆணைக் குழுவிலும் குற்றவியல் விசாரனைப் பிரிவிலும் இந்த முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
அமைச்சர் ராஜித சேனாரத்ன கடந்த அரசில் கடற்றொழில் அமைச்சராக இருந்தபோது இடம்பெற்ற மோசடி தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த ஒரு முறைப்பாட்டைச் செய்துள்ளார்.
கேள்விகோரல் நடைமுறைகளை மீறி மருந்து இறக்குமதி செய்தமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி. சொய்ஸா மற்றைய முறைப்பாட்டைச் செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-4)


# தோட்டத் தொழிலாளர்கள் இரவு பகலாக போராட்டம்

கொழும்பு, மார்ச் 2
தோட்டக் காணியைத் தனியாருக்கு விற்பனை செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தும் கண்டி, உன்னஸ்கிரிய, எயாபார்க் தோட்டத் தொழிலாளர்கள் இரண்டாவது நாளாகவும் நேற்று இரவு - பகலாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
அவர்களது போராட்டத்துக்குப் பல்வேறு அமைப்புகளும் ஆதரவு வழங்கி வருகின்றன.
நேற்று மதியம் போராட்டக் களத்துக்குச் சென்ற உதவித் தொழில் ஆணையாளர், தொழிலாளர்களுடன் பேச்சு நடத்தினார். தொழிலாளர்களின் அனுமதியின்றித் தோட்டக் காணிகள் தனியாருக்கு வழங்கப்படாது என்ற உறுதிமொழியையும் எழுத்து மூலம் வழங்கினார். ஆனால், 5 அம்சக் கோரிக்கை பற்றிக் கவனம் செலுத்தப்படவில்லை.
இதனால் தீர்வு கிடைக்கும்வரை போராடப் போவதாக தொழிலாளர்கள் அறிவித்தனர். இதையடுத்து இன்று முற்பகல் 10.30 மணிக்கு கொழும்பில் முக்கிய சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர். குறித்த பேச்சில் தமக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு கிடைக்காவிட்டால் போராட்டம் தொடரும் என்று தொழிலாளர்கள் அறிவித்துள்ளனர். (த4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகளவு படையினர் வடக்கில் இனி தேவையில்லை

## அத்துரலிய ரத்ன தேரர் அறிவுரை



கொழும்பு, மார்ச் 2

"போர் நிறைவடைந்துள்ள நிலையில் சீருடை அணிந்து ஆயுதம் ஏந்திய படையினரை வடக்கில் அதிகளவில் நிலைநிறுத்த வேண்டிய தேவை இல்லை" இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபைக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். காணிகளை வழங்குவது தொடர்பில் தேசிய கொள்கையொன்று உருவாக்கப்பட வேண்டும். வறிய மக்களுக்கு காணிகள் வழங்கப்படுவதை எதிர்க்கவில்லை. செல்வந்தர்கள் அரசியல்வாதிகளுக்கு காணிகள் வழங்கப்படக் கூடாது.

முன்னாள் தலைமை அமைச்சர் டி.எஸ் சேனநாயக்க மகாவலி காணிகளை வழங்கினார். அதன் பின்னர் எவரும் காணிகளை வழங்கவில்லை. போர் நிறைவடைந்துள்ள நிலையில் சீருடை அணிந்து ஆயுதம் ஏந்திய படையினரை வடக்கில் அதிகளவில் நிலைநிறுத்த வேண்டிய தேவையில்லை.

சீருடை மற்றும் அயுதங்கள் இல்லாத பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்றார். (வ-4)

# மகிந்தவின் பெயருக்கு ஏற்பட்ட களங்கத்தை அழித்துவிட முடியாது

## கூறுகிறார் அசாத் சாலி

கொழும்பு, மார்ச் 2

முன்னாள் அரச தலைவர் மகிந்தவின் பெயருக்கு ஏற்பட்ட களங்கத்தை எத்தனை சலவை செய்தாலும் அழிக்க முடியாது. அவருக்காக அவரது அணி வக்காலத்து வாங்குவதால் ஒன்றும் நடக்கப் போவதில்லை.

இவ்வாறு தேசிய ஐக்கிய முன்னணி யின் தலைவர் அசாத் சாலி தெரிவித்தார். அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில், அவர் இவ்வாறு தெரிவித்தார். மகிந்தவின் பெயருக்கு ஏற்பட்ட களங்கத்தை எத்தனை சலவை செய்தாலும் அழிக்க முடியாது என்பதற்குப் பிணைமுறி விடயம் நன்கு பதிலளித்துவிட்டது. அந்தக் களங்கத்தை மறைக்கக் கூட்டுஎதிரணியினர் நாடாளுமன்றத்தைக் கூட்டச் சொல்வது மிகவும் வேடிக்கையான விடயம் என்றும் அவர் கூறினார். (த-4)

# 9 இந்திய மீனவர்கள் நேற்றிரவு சுண்டிக்குளம் கடலில் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 2

சுண்டிக்குளம் கடற்பரப்புக்குள் அத்துமீறிய இந்திய மீனவர்கள் 9 பேர் நேற்றிரவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர் பயன்படுத்திய படகும் கடற்படையினரால் தடுத்துவைக்கப்பட்டது.

இந்தியா இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் ஓர் படகில் கிளிநொச்சி, சுண்டிக்குளம் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டனர். அவர்களை நேற்றிரவு கடற்படையினர் கைது செய்தனர்.

இந்திய மீனவர்கள் 9 பேரும் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு இன்று கொண்டுவரப்பட்டு நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ101)

### மரண அறிவித்தல்

## திருமதி தங்கரத்தினம் செல்வரத்தினம்



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கரத்தினம் செல்வரத்தினம் 01.03.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும் நந்தினி, சாந்தினி, சபேசன், இரத்தினராசா ஆகியோரின் பாசமிகு தாயாரும் அருமைத்துரை ஜெயசிங்கம், சுகந்தி, சந்திரரூபி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2017) வியாழக்கிழமை புதிய செம்மணி வீதி கல்வியங்காட்டில் பி.ப. 3 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதிய செம்மணி வீதி,
கல்வியங்காடு.

தகவல்
குடும்பத்தினர்.

# அடைக்கலம் தந்த இலங்கையர்களுக்கு உதவி வழங்க

## ஸ்னோவ்டன் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 2

தமக்கு உதவி வழங்கிய இலங்கையர்களுக்கு உதவுமாறு அமெரிக்காவில் பல்வேறு இரகசிய தகவல்களை அம்பலப்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட எட்வட் ஸ்னோவ்டன் கோரிக்கைவிடுத்துள்ளார்.


ஹொங்கொங்கில் தமக்கு உதவிய இரண்டு இலங்கைக் குடும்பங்களுக்கு உதவுமாறு டுவிட்டர் மூலம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

"எனக்கு உதவிய இலங்கையர்களை கொழும்பின் புலனாய்வு பிரிவினர் பின்தொடர்கின்றனர். அவர்களுக்கு முடிந்தவர்கள் உதவியளிக்க வேண்டும். இலங்கைப் புலனாய்வுப் பிரிவினர் சித்திரவதைகளில் ஈடுபடுபவர்கள் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது" என்று ஸ்னோவ்டன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த இலங்கையர்களை பின்தொடரவில்லை என்று இலங்கைக் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ-4)




# யாழ். நகர் வணிகர்களிடம் பணம் பறிக்கும் கும்பல் சிசிரிவி கமராவில் சிக்கியது



யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ்ப்பாண நகரில் காரில் வந்து நூதனக் கொள்ளையில் கும்பல் ஒன்று ஈடுபடுகின்றது என்று வணிகர்களால் குற்றஞ்சாட்டப்பட்டது. அந்தக் கும்பல் யாழ். நகர் வியாபார நிலைய சி.சி.ரி.வி கமராவில் சிக்கிவிட்டது என்று தெரிவிக்கப்பட்டது. நூதனக் கொள்ளையில் ஈடுபட்ட கும்பலைச் சேர்ந்தவர்கள் தான் சி.சி.ரி.வி காணொலிப் பதிவில் உள்ளனர் என்று அவர்களால் பாதிக்கப்பட்ட வணிகர்கள் அடித்துக் கூறுகின்றனர்.

யாழ்ப்பாண நகரிலுள்ள வியாபார நிலையங்களில் பொருள்கள் வாங்குவது போன்று பாசாங்கு செய்து பணத்தைப் பறிக்கும் நூதனக் கொள்ளையில் அவர்கள் ஈடுபட்டு வந்தனர்.

யாழ். நகர் வணிகர் ஒருவர் தெரிவித்ததாவது:

சொகுசுகாரில் நான்கு பேர் வருகை தந்தனர். அவர்களில் 2 பேர் எனது கடைக்குள் வந்தனர். ஏனைய இருவர் அருகில் உள்ள வியாபார நிலையத்துக்குள் சென்றனர். அவ்வாறு வரும்போது அவர்கள் மிகவும் வசதியானவர்கள் போன்றே காட்சியளித்தனர். அதனால் அவர்கள் மீது எந்தவிதமான சந்தேகமும் ஏற்படவில்லை.

வந்தவர்களில் ஒருவர் என்னிடம் இரண்டாயிரம் ரூபா நாணயத்தாளை வழங்கி 100 ரூபா அலைபேசி ரீலோட் செய்து கொண்டார். மிகுதிப் பணம் ஆயிரத்துத் 900 ரூபாவை நான் அவரிடம் வழங்கினேன். அவ்வாறு வழங்கிய சமயம் உடனடியாகவே மாற்றிய பணம் 100 ரூபா நாணயத்தாள் உள்ளது.

2 ஆயிரம் ரூபா நாணயத்தாளைத் திரும்பத் தாருங்கள் என்றார். 2 ஆயிரம் ரூபாத் தாளை மீள வழங்கியதும் அவர்கள் வெளியேற முற்பட்டார். எனினும் நான் முதல் வழங்கிய ஆயிரத்துத் 900 ரூபா பணத்தைத் திரும்பத் தரவில்லை என்று அவரிடம் கேட்டேன். அது வழங்கப்படவில்லை என்று அவர் மறுத்து விட்டார். மிகுதிப் பணம் வழங்கியதா இல்லையா என்பது தொடர்பில் சி.சி.ரி.வி. கமராவில் பரீட்சிப்போம் எனக் கேட்டபோது, அவர்கள் இருவரும் வெளியேறி காரில் சென்று விட்டனர். வியாபாரப் பணத்தை எண்ணிப்பார்த்போது நான் பணம் இழந்தமை உறுதியானது என்றார். (வ-4,101)

# இறைச்சிக் கடைக் குத்தகை உடன்படிக்கை திடீர் நீக்கம்

## யாழ். மாநகர சபை நிர்வாகத்துக்கு எதிராக மேல் நீதிமன்றில் வழக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ்ப்பாணம் குருநகர் சந்தையில் இறைச்சிக் கடை நடத்துவதற்காக வழங்கிய குத்தகை உடன்படிக்கையை யாழ்ப்பாண மாநகர சபையினர் நிறுத்தியுள்ளனர். அவ்வாறு நிறுத்தப்பட்ட உத்தரவுக்கு எதிராகத் தாக்கல் செய்த மனு, ஆட்சேபனைக்காக யாழ். மேல் நீதிமன்றால் ஒத்திவைக்கப்பட்டது.

இறைச்சிக்கடையை குத்தகைக்கு எடுத்த நபர், தனக்கு வழங்கப்பட்ட உடன்படிக்கைப் யாழ்ப்பாண மாநகர சபையால் நிறுத் தப்பட்டுள்ளது. அந்த இறைச்சிக் கடையை தனக்கு மீளவும் குத்தகைக்கு வழங்குமாறு கோரி யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்திருந்தார். அந்த மனு வை பரிசீலித்த மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் எதிர் மனு தாரரான யாழ்ப்பாண மாநகர சபையினரை ஆட்சேபனை தெரிவிக்குமாறு கட்டளையிட்டார். ஆட்சேபனைக்காக எதிர்வரும் ஏப்ரல் 5ஆம் திகதி வரை வழக்கு மேல் நீதிமன்றால் ஒத்திவைக்கப்பட்டது. இந்த இறைச்சிக்கடையிலிருந்து கடந்த ஜனவரி மாதம் 7ஆம் திகதி பொதுச் சுகாதார பரிசோதகர்களால் 20 கிலோ கிராம் இறைச்சியை பயன்பாட்டுக்கு உதவாத நிலையில் கைப்பற்றப்பட்டது. அந்தக் கடை நடத்துநருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் வழக்குத் தொடரப்பட்டது. குறித்த கடைக்காரர் குற்றத்தை ஒப்புக்கொண்டு 5 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்தினார். அதன் பின்னர் யாழ்ப்பாண மாநகர சபை நிர்வாகம், தாம் வழங்கிய குத்தகை உடன்படிக்கையை உடனடியாக நீக்குவதாக இறைச்சிக் கடை நடத்தியவருக்கு அறிவித்தது. பெப்ரவரி மாதம் 9ஆம் திகதிக்கு முன்னர் அவர் தனது உடமைகளுடன் கடையைவிட்டு வெளியேறி கடையை மாநகர சபையிடம் ஒப்படைக்குமாறு யாழ்ப்பாண மாநகர சபை நிர்வாகம் கேட்டிருந்தது.

யாழ்ப்பாண மாநகர சபை நிர்வாகம் தமது அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்துகின்றது சபை நிர்வாகம் விதித்த தடை உத்தரவை நீக்க வேண்டும் என்று மனு தாரர் யாழ். மேல் நீதிமன்றிடம் கோரியுள்ளார். (வ-4,ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாக்காலி கால்நடைகளை பிடிக்கும் பணியில் யாழ். மாநகர சபை

யாழ்ப்பாணம், மார்ச் 2
யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலியாக நடமாடும் கால்நடைகளைப் பிடிக்கும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

நல்லூர் பகுதியில் நேற்றுக் காலை இரண்டு மாடுகள் பிடிக்கப்பட்டு யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் கட்டி விடப்பட்டுள்ளன. பிடிக்கப்பட்ட மாடுகளை உரியவர்கள் அடையாளம் காட்டி ஏழு நாள்களுக்குள் பெற்றுக் கொள்ள முடியும் என்று மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

"உரிமை கோரப்படாதுவிடின் அந்த மாடுகள் மாநகராட்சி மன்றத்தால் ஏலத்தில் விற்கப்படும். யாழ்ப்பாண மாநகராட்சி மன்றப் பகுதியில் கட்டாக்காலிகளாக நடமாடும் கால்நடைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுகின்றன. இந்தக் கால்நடைகளால் விபத்துக்களும் ஏற்படுகின்றன.

கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தும் விதத்தில் அவற்றை உடனடியாகப் பிடிக்கும் பணியை மாநகராட்சி மன்றம் ஆரம்பித்துள்ளது" என்று ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (வ-17)

# டெங்கு நோய்த் தொற்று தென்மராட்சியில் தீவிரம்

## பெப்ரவரியில் மட்டும் 100 பேர் பாதிப்பு

தென்மராட்சி, மார்ச் 2
தென்மராட்சி பிரதேசத்தில் பெப்ரவரி மாதத்தில் மட்டும் 100 பேர் டெங்கு நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதாரத் திணைக்கள புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

சாவகச்சேரி வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை ஆகியவற்றில் கடந்த மாதம் சிகிச்சை பெற்ற நோயாளர்களில் 105 பேருக்கு டெங்கு நோய்த் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. இவர்களில் 100 பேர் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். 5 பேர் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள்.

கடந்த ஜனவரி மாதம் டெங்கு நோய்த் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்ற 84 பேரில் 5 பேர் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள். ஏனையோர் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்.

டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளானவர்களின் குடியிருப்புகள் உட்பட சுற்றாடலில் டெங்கு நுளம்பை அழிக்கும் புகை யூட்டல் நடவடிக்கைகள் சாவகச்சேரி நகர சபை மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (வ-9)

# கால்கோள்விழா இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 2
நவாலி தெற்கு அ.மி.த.க.பாடசாலையின் கால்கோள் விழா இன்று வியாழக்கிழமை மு.ப.10.30 மணிக்கு அதிபர் க.ஸ்ரீநந்தகோபன் தலைமையில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி பி.செல்வின் இறேனியஸ், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்வி அலுவலர் ச.சிவானந்தராசா, கௌரவ விருந்தினராக நவாலி தெற்கு கிராம அலுவலர் பு.நிருபன் ஆகியோர் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

# தீவகத்தில் திருடப்படும் கால்நடைகளை கடத்தப் பயன்படுத்திய வான் சிக்கியது



யாழ்ப்பாணம், மார்ச்.2
யாழ்ப்பாணம், தீவகத்தில் திருடப்படும் கால்நடைகளைக் கடத்தப் பயன்படுத்தப்பட்டது என்று தெரிவித்து ஹைஏஸ் வாகனமும் அதிலிருந்து மீட்கப்பட்ட 6 ஆடுகளும் ஊர்காவற்துறை நீதிவான் மன்றின் உத்தரவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது:

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் கடந்த வாரம் அதிகாலை 5 மணியளவில் சந்தேகத்துக்கிடமான வகையில் ஓர் வான் நடமாடியுள்ளது. அந்த வானின் சில்லு ஒன்று காற்றுப்போன நிலையில் சாலையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டது. அதன் சில்லைக் கழட்டுவதற்கான சாவிகள் இன்றி அதில் பயணித்தவர்கள் அலைந்துள்ளனர்.

சந்தேகத்துக்கிடமான வான் ஒன்று சாலையோரத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. அதில் பல இளைஞர்கள் உள்ளனர் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் கிடைத்தது. சம்பவ இடத்துக்குப் பொலிஸார் சென்றனர். பொலிஸார் வருவதை அவதானித்த ஆறு இளைஞர்கள் வானில் இருந்து குதித்துத் தப்பித்துவிட்டனர்.

அவர்கள் கைவிட்டுச் சென்ற வான் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துவரப்பட்டது. வானில் ஆறு ஆடுகளும் இருந்தன. வான் மற்றும் ஆடுகள் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றின் உத்தரவில் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள குறித்த வானின் இலக்கத் தகட்டின் அடிப்படையில். அதன் உரிமையாளரை இனம் காணும் முயற்சிகள் இடம்பெறுகின்றன. குறித்த வான் புத்தளம் பகுதியைச் சேர்ந்த ஒருவரின் பதிவிலேயே உள்ளது என்றனர். (வ-101)

# வடக்கிலுள்ள முகாம்களை அகற்றவேண்டும் ராணுவம்

## ஜனநாயக போராளிகள் கட்சி வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 2
தேசிய பாதுகாப்புக்குப் புலிகளால் அச்சுறுத்தல் இல்லை. இராணுவ முகாம்களை வடக்கில் இருந்து அகற்ற வேண்டும்.

இவ்வாறு ஜனநாயக போராளிகள் கட்சி வலியுறுத்தியது.

அந்தக் கட்சியின் பத்திரிகையாளர் சந்திப்பு நேற்று புதன்கிழமை யாழ்.நகரப்பகுதியில் உள்ள சுபாஸ் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

அதில் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

தமிழ் மக்கள் தன்னாட்சி அதிகாரத்தைக் கொண்டு சுயமாக சிந்திக்கக் கூடிய நிலை உருவாக வேண்டும். மக்கள் தமது உரிமைக்காகப் போராடி ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டு எழ வேண்டும்.

நாம் அரசியல்வாதிகள் மீது குற்றஞ்சாட்டவில்லை. தமிழ் மக்களின் உணர்வுகளை மீறிச் செயற்பட வேண்டாம். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் உறுதியான நிலைப்பாட்டிடைக் கொண்டு வரமுடியாமல், இறுக்கான நிபந்தனைகளைக் கூறமால் பாரதூரமான விளைவுக்குக் கொண்டு செல்ல முனைகின்றார்கள். இது தமிழ் மக்களுக்கு இழைக்கும் துரோகம்.

முன்னாள் போராளிகளுக்கென ஒரு கட்சி உருவாக்கப்பட்டுள்ளது. 2 வருட காலமாக ஜனநாயக போராளிகள் கட்சி செயற்பட ஆரம்பித்துள்ளது. இனிமேல் போராளிகள் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

எமது கருத்துக்களைச் சொல்வதற்கு எமக்கு சுதந்திரம் இருக்கின்றது. தமிழ் மக்களை ஒன்றிணைத்து செயற்படுத்த வேண்டும். தமிழ் மக்கள் மத்தியில் மாற்றம் நிகழ வேண்டும். ஒவ்வொருவரின் எண்ணத்தில் இருந்து மாற்றங்கள் உருவாக வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைகளை புலிகள் பேசினார்கள். 2009 ஆம் ஆண்டுக்குப் பிறகு நாம், தமிழ் மக்களுக்காக குரல்கொடுக்க அரசியல் கட்சியாக செயற்பட ஆரம்பித்துள்ளோம். தமிழ் மக்களின் மீதான ஆபத்துக்களை குறைப்பதற்கு யதார்த்தமான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். வடக்கில் இராணுவ முகாம்கள் அதிகமாக காணப்படுகின்றன. இராணுவ முகாம்களை உடனடியாக அகற்ற வேண்டும்." என்று தெரிவிக்கப்பட்டது. (ற-106)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ



சங்கானை நிகரையம்பதி
அருள்மிகு சாமுண்டாதேவி
சமேத ஞானவைரவப்
பெருமான் ஆலய அலங்கார உற்சவ
நான்காம் திருவிழா
விஞ்ஞாபனம்

எம்பெருமான் மெய்யடியார்களே !
03.03.2017 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஸ்நபன அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று பகல் 12.30 மணிக்கு மகேஸ்வர பூசை (அன்னதானம்) நடைபெறும். தொடர்ந்து மாலை 6.00 மணிக்கு வசந்த மண்டப பூசை ஆரம்பமாகி விசேட சாத்துப்படியுடன் வடலியூர் கோவிந்தசாமி குழுவினரும். கோண்டாவில் சச்சிதானந்தம் குழுவினரும் இணைந்து மேளவாத்தியம் முழங்க சாமுண்டாதேவி சமேதராய் உள்வீதி வலம் வந்து மின் ஒளிகளால் அலங்கரிக்கப்பட்ட இரட்டைக் குதிரை வாகனத்தில் எழுந்தருளி வெளிவீதி வலம் வரும் வேளை

விசேட நிகழ்வாக
நீர்கொழும்பு பெண்டம்வாண வேடிக்கை குழுவினரின் வாணவேடிக்கைகள் சகிதம் வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.

விசேட நிகழ்ச்சியாக
" நாத கான இசைச் சங்கமம் "
இரவு 9.00 மணிக்கு இடம் பெறும்.

நாதஸ்வரம்
ஈழ நல்லூர் நாதஸ்வர கானவினோதன், நாதஸ்வரவித்வான் P.S.பாலமுருகனும்
கோண்டாவில் நாதஸ்வர சக்கரவர்த்தி V.K.பஞ்சமூர்த்தி குமரனும்,

தவில்
ஈழநல்லூர் மெய்ஞானபாலன், தவில்வித்வான் P.S.செந்தில்நாதனும்,
இணுவில் தவில் இளவரசன் விபூர்னனும் இணைந்து வழங்குவர்.

அடியார்கள் அனைவரும் வருகை தந்து அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து எம்பெருமானின் அருளாசிகளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நிகரை வீதி, சங்கானை.
நான்காம் திருவிழா உபயகாரர்கள்.

## தவறிவிட்டது

சிவஸ்காந்தன் குருபரன் என்பவரின் தேசிய அ.அ (941783171v). மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் பல்கலைக்கழக அனுமதி அட்டை என்பன அடங்கிய பேர்ஸ் K.K.S வீதிக்கும் யாழ் புகையிரத நிலையத்துக்கு மிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

076 615 6417, 076 888 5339

## வேலையாள்கள் தேவை

உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை. தங்குமிடம் வழங்கப்படும்.
இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்

| | |
|---|---|
| சமையல் உதவியாளர் | - 02 |
| சிற்றுண்டி தயாரிப்பாளர் | - 02 |
| உணவு பரிமாறுபவர் | - 04 |
| ரொட்டி தயாரிப்பாளர் | - 02 |
| அப்பம் போடுபவர் | - 01 |

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்

0772299675

# வலிகாமம்கிழக்கு பிரதேசசபை

## கோப்பாய் உப அலுவலகம்

## ஆதனப் பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் கிழக்கு பிரதேசசபை கோப்பாய் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 06, வச்சாவளை ஒழுங்கை, ஆதன இலக்கம் 41.43 என்ற இலக்கத்தைக் கொண்டதும்"கிரியமந்தனை"நிலப்பரப்பு 24 உம் கொண்ட கிராமசேவையாளர் பிரிவு : J /260, கோப்பாய் தெற்கு. கோப்பாயில் அமைந்துள்ள ஆதனத்தில் உரிமையாளர் பெயர் வி.முத்துக்குமாரசாமி என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

வலிகாமம் கிழக்கு பிரதேசசபை கோப்பாய் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 06, அதிகாரி ஒழுங்கை, ஆதன இலக்கம் 09,11 என்ற இலக்கத்தைக் கொண்டதும்"கஞ்சாறிசீமா" நிலப்பரப்பு 16 உம் குழி17உம் கொண்ட கிராமசேவையாளர் பிரிவு: J /260 கோப்பாய் தெற்கு, கோப்பாயில் அமைந்துள்ள ஆதனத்தில் உரிமையாளர் பெயர் வி.முத்துக்குமாரசாமி என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த இவ்விரு ஆதனங்களும் முத்துக்குமாரசாமி 07.05.83 இல் மரணசாதனம் எழுதாமல் தனது ஆதனங்களை விட்டு இறந்துள்ளார். இவ் ஆதனத்தை முத்துக்குமாரசாமி வன்னியசேகரமும்.வன்னியசேகரம் புனிதவதியும் தந்தையார் இறந்தபின்பு ஏறக்குறைய 30 வருடங்களுக்கு மேலாக தமது ஆட்சியிலும் உடமையிலும் இருப்பதால் தாமே சட்டப்படி உரித்தாளர்கள் ஆவோம் என பிரசித்த நொத்தாரிஸ் இலங்கை குடியரசின் யாழ்ப்பாண மேல்நீதிமன்ற வலய பிரசித்த நொத்தாரிஸ் இராசேந்திரன் வசந்தசேனன் முகதாவில்10131 இலக்க 2014.08.15 ஆந் திகதியவெளிப்படுத்தல் உறுதியின் படி வெளிப்படுத்தியுள்ளனர்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் கிழக்குப்பகுதி கோப்பாய் கோவில் பற்று கோப்பாய் தெற்கு இறை "கிரியமந்தனை" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 24உம், உத்தரவு பெற்ற நில அளவையாளர் ம.சிற்றம்பலத்தால் 26.08.2007 திகதிய 2113ஆம் இலக்கத்தில் தயாரித்த படத்தில் துண்டுகள் 1.2.3 என காட்டப்பட்டது.

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் கிழக்குப்பகுதி கோப்பாய் கோவில் பற்று கோப்பாய் தெற்கு இறை"கஞ்சாறிசீமா" நிலப்பரப்பு 16உம் குழி17உம் கொண்ட உத்தரவு பெற்ற நில அளவையாளர். சிற்றம்பலத்தால் 09.03.2014 ஆந்திகதிய 3705ஆம் இலக்கத்தில் தயாரித்த படத்தில் துண்டுகள் 1,2,3 என காட்டப்பட்டுள்ளது.


இவ்வாதனங்களானது முத்துக்குமாரசாமி வன்னிய சேகரம், முத்துக்குமாரசாமி மகள் புனிதவதி என்ற பெயருக்கு ஆதனப் பதிவேட்டில் பதிவது தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது முத்துக்குமாரசாமி வன்னியசேகரம். முத்துக்குமாரசாமி மகள் புனிதவதி என்பவர்கள் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வ தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகிழக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என் பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

யு.ஜெலீபன்
செயலாளர்
வலிகிழக்கு பிரதேசசபை புத்தூர்.
02.03.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி ம.வியின் காணியில் ஒரு ஏக்கரை ராணுவம் விடுவிக்கும்

## அளவீட்டுப் பணி ஆரம்பம்



கிளிநொச்சி, மார்ச் 2

இராணுவத்தினரின் 571 ஆவது படைப் பிரிவின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சி மகா வித்தியாலயத்துக்குச் சொந்தமான 4 ஏக்கர் காணியில் ஒரு ஏக்கர் காணியை விடுவிப்பதற்கு நேற்று அள வீட்டு நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இந்தக் காணி மாவட்டச் செயலகத்தின் ஊடாகக் கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களத்திடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டு பின்னர் பாடசாலை நிர்வாகத்திடம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

2009ஆம் ஆண்டு இடம்பெற்ற போரின் இடப்பெயர்வுகளை அடுத்து இராணுவத்தினர் கிளிநொச்சி மகாவித்தியாலயத்துக்கு அண்மையில் உள்ள காணிகளை அபகரித்துச் சுற்று வேலி அமைத்தனர். இதன்போது கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் 4 ஏக்கர் காணியும் இராணுவத்தால் அபகரிக்கப்பட்டிருந்தது.

மீள்குடியேற்றத்தை அடுத்து குறித்த காணி தொடர்பாக மீள்குடியேற்ற அமைச்சர் முதல், மாவட்டச் செயலாளர் வரை பலருக்கும் தெரியப்படுத்தப்பட்டது. அண்மையில் வடக்கு மாகாண முதலமைச்சர் இந்தக் காணியின் நிலை தொடர்பில் நேரில் சென்று பார்வையிட்டிருந்தார்.

கடந்த திங்கட்கிழமை கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும், அரச தலைவருக்கும் இடையில் இடம்பெற்ற காணி விடுவிப்பு தொடர்பான கலந்துரையாடலின்போது, இந்தக் காணி தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் காணியை விடுவிக்குமாறு அரச தலைவர் இராணுவத் தளபதிக்கு கட்டளையிட்டதாகக் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கூட்டமைப்பின் தலைவர் தெரிவித்திருந்தார். இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பாடசாலையின் 4 ஏக்கர் காணியில் கணிசமான அளவை விடுவிப் பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளாக நேற்று முன்தினம் மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்திருந்தார். இதற்கான அளவீட்டுப் பணிகள் நேற்றுப் புதன்கிழமை இடம்பெறும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் காணி அளவீட்டுப் பணிகள் நேற்று முற்பகல் 11 மணியளவில் முன்னெடுக்கப் பட்டன. 'பாடசாலை பௌதிக வளங்களை அதிகரிப்பதற்கான காணி வசதி இன்மை தொடர்பில் எம்மால் தொடர்ச்சியாக சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதிக மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க இடவசதி போதாத நிலை காணப்பட்டது. விடு விக்கப் படவுள்ள காணியில் ஆரம்ப பிரிவை நகர்த்துவதற்கான திட்டம் ஏற்கனவே காணப்படுகின்றது' என்று பாடசாலை அதிபர் ஜெயந்தி தனபாலசிங்கம் தெரிவித்தார். (கு-213435)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச் 2

புத்தூர் மெதடிஸ் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையின் மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி.ப.1.30 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் பொ.வரதகுலசிங்கம் தலைமையில் இடம்பெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரம்சோதி, சிறப்பு விருந்தினர்களாக புத்தூர் மெதடிஸ் தேவாலய அருட்பணி ஜெயக்குமார் ரட்ணசிங்கம், யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக ஆரம்பக் கல்வி விளையாட்டுச் செயற்றிட்ட இணைப்பாளர் சி.சிவகாந்தி, கௌரவ விருந்தினர்களாக நலன்விரும்பி பாடசாலை அரங்கு அன்பளிப்பாளர் மு.சந்திரமௌலீசன், புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகத் தலைவர் க.கதிர்காமநாதன் ஆகியோர் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

### குற்றச்செயல்களைத் தடுக்க

## பொலிஸாரின் சோதனை யாழ். நகரில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ்ப்பாண நகரில் பொலிஸாரின் ரோந்துப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இரவு வேளைகளில் ஏற்படும் போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றச் செயல்களைத் தடுக்கும் முகமாக பொலிஸார் சைக்கிள்களிலும் வாகனங்களிலும் தமது ரோந்தை அதிகரித்துள்ளனர். அதனைவிட சிறப்பு அதிரடிப் படையினரும் கால்நடையாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவர் என்று தெரிவிக்கப்பட்டது. நகரிலும், புறநகர்ப் பகுதியிலும் பொலிஸ் மற்றும் அதிரடிப் படையினரின் இந்த ரோந்துக் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இரவில் சந்தேகத்துக்கு இடமாக நடமாடுவோர் மற்றும் மோட்டார் சைக்கிள், வாகனங்களில் செல்வோர் மறிக்கப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர். (வ-17)

## ஏழு வெடி குண்டுகள் தனங்களப்பில் மீட்பு செயலிழக்க வைக்குமாறு நீதிமன்று உத்தரவு

தென்மராட்சி, மார்ச் 2

தனங்களப்பு பகுதியில் பற்றைகள் துப்புரவு பணியின் போது இரு காணிகளில் வெடிக்காத நிலையில் காணப்பட்ட 7 வெடி குண்டுகளையும் சிறப்பு அதிரடிப் படையினர் மூலம் அப்புறப்படுத்தி செயலிழக்கச் செய்யுமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

தனங்களப்பு பகுதியில் உள்ள காணிகளில் பற்றைகள் துப்புரவுப் பணி நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது இரு காணிகளில் வெடி குண்டுகள் காணப்பட்டன. காணி உரிமையாளர்கள் கிராம அலுவலருக்கு அறிவித்தார். கிராம அலுவலர் சாவகச்சேரி பொலிஸாருடன் சம்பவ இடத்துக்கு வந்து பார்வையிட்டார். இரு இடங்களிலும் 7 வெடி குண்டுகள் கண்டறியப்பட்டன. அந்தப் பகுதிக்கு பொலிஸார் பாதுகாப்பு வழங்கினர். வெடி குண்டுகளை செயலிழக்கச் செய்வதற்கான அனுமதியைக் கோரி சாவகச்சேரி நீதிவான் மன்றில் பொலிஸார் சிறப்பு அறிக்கையை நேற்று முன்வைத்தனர். அறிக்கையினைப் பார்வையிட்ட நீதிவான், சிறப்பு அதிரடிப் படையினர் மூலம் வெடி குண்டுகளை அப்புறப்படுத்தி செயலிழக்கச் செய்யுமாறு உத்தரவிட்டார். ஒரு இடத்தில் 4 எறிகணைக் குண்டுகளும் ஒரு வெடி குண்டும் மற்றொரு இடத்தில் 2 வெடி குண்டுகளும் காணப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-9)

புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு

# மாங்குளம் சந்தைக்கட்டடத்தின் கடைகளுக்கான வைப்புப்பண மீள்கேள்வி அறிவித்தல்.

புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட (ஒலுமடு, ஒட்டுசுட்டான் ,புதுக்குடியிருப்பு உபஅலுவலகங்களின் எல்லைக்கு உட்பட்ட) நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட மக்களிடமிருந்து 2017 ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் கீழ்குறிப்பிடப்படும் மாதாந்த குத்தகையின் அடிப்படையில் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு ஏதுவாக கடைகளுக்கான திறப்புப்பண கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 2017.03.03 – 2017.03.17 அலுவலக நாள்களில் பிற்பகல் 02.30 வரை

கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி:- 2017.03.17 பிற்பகல் 03.00 மணிவரை

கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 2017.03.17. பிற்பகல் 03.30 மணி

கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை **செயலாளர், புதுக்குடியிருப்புபிரதேசசபை, புதுக்குடியிருப்பு** என்னும் முகவரிக்கு அரக்கு(சீல்) முத்திரையிட்டு தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் 2017.03.17 ஆம் திகதி பிற்பகல் 03.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறுபிரதியை **பிராந்தியஉள்ளூராட்சி உதவிஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு** என்ற முகவரிக்கு 2017.03.17 பிற்பகல் 03.00 மணிக்கு முன்னர் கிடைக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

1. கேள்விப்பத்திரங்களை பெறவிரும்புபவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் எல்லைக்குள் நிரந்தரமாகவதியும் இடத்தின் வதிவிடச்சான்றிதழ் மற்றும் கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தேசியஅடையாள அட்டைப்பிரதியுடன் நேரடியாக புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.
2. கேள்விப்பத்திரங்கள் கீழ் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணங்கள், மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமும் செலுத்தி மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். (விவரம் இணைக்கப்பட்டுள்ளது.)
3. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறு நராகக்கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அதுநிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.
4. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப் படமாட்டாது.
5. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்க முடியும்.
6. கேள்வி நிபந்தனைகள் ,அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ சபையினது செயலாளருக்கு அதிகாரம் உண்டு.
7. வாடகை வருடாவருடம் சபையால் நிர்ணயிக்கப்படும் காலஒழுங்கில் வாடகையின் அடிப்படையில் 10% அதிகரிக்கப்படும்.
8. கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே நடத்தப்பட வேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடத்த அனுமதிக்கப்படமாட்டார்.இருந்தும் அவரதுவாரிசு நடத்த அனுமதிக்கப்படுவார். (உதாரணம் :- மகன்,மகள்)
9. சபைசெயலாளரின் அனுமதியின்றி எதுவிதபுனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.
10. நிராகரிக்கப்பட்ட கேள்விதாரரின் பிணைப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்க முடியும்.
11. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒருவாரத்திற்குள் அல்லது சபையால் வழங்கப்பட்ட காலஎல்லைக்குள் முழுத்தொகையையும் முழுமையாகச் செலுத்திசபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும்.
12. பெற்றுக் கொள்ளும் கடைகளில் ஏற்படும் பாதிப்புக்களுக்கு குத்தகைக்கு எடுத்தவரே பொறுப்புடையவராவார்.
13. குத்தகைக்கு பெற்ற கடைக்கான மின்சாரசெலவுகுத்தகைக்கு பெற்றவரினாலேயே செலுத்தப்பட வேண்டும்.
14. வாடகைப்பணம் மாதாந்தம் **இறுதி வேலைநாளுக்கு முன்னர்** தாங்களாகவே செலுத்தப்பட வேண்டும். தவறின் 10%தண்டமும் சேர்த்து அறவிடப்படும். என்பதுடன் வாடகைப்பணம் இரு மாதங்கள் தொடர்ந்துகட்டத்தவறின் முன்னறிவித்தலின்றி வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும்.
15. சபையின் செயலாளரின் இந்த ஒப்பந்தம் தொடர்பாக எவ்வித முடிவையும் ஏற்கவேண்டும். இது தொடர்பாகச் சபைக்கெதிராகவோ/ செயலாளருக்கு எதிராகவோ நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க முற்படலாகாது.
16. கேள்வி சம்பந்தமாக மேலதிக விவரங்களை /தகவல்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| இல | கடை இலக்கம். | மாதாந்த வாடகை (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (VAT,NBTநீங்களாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம். | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை. |
|---|---|---|---|---|---|
| 01 | G.F - 09. | 1,750.00 | 1,000.00 | 11,000.00 | 105,000.00 |
| 02 | G.F - 10. | 1,750.00 | 1,000.00 | 11,000.00 | 105,000.00 |
| 03 | U.F - 01 | 2,000.00 | 1,000.00 | 13,000.00 | 120,000.00 |
| 04 | U.F - 02 | 2,000.00 | 1,000.00 | 13,000.00 | 120,000.00 |
| 05 | U.F - 03 | 2,000.00 | 1,000.00 | 13,000.00 | 120,000.00 |
| 06 | U.F - 05 | 2,000.00 | 1,000.00 | 13,000.00 | 120,000.00 |
| 07 | S - 01 | 2,000.00 | 1,000.00 | 13,000.00 | 120,000.00 |
| 08 | S - 02 | 2,000.00 | 1,000.00 | 13,000.00 | 120,000.00 |
| 09 | B - 07 | 1,250.00 | 1,000.00 | 8,000.00 | 75,000.00 |
| 10 | [illegible] | 1,250.00 | 1,000.00 | 8,000.00 | 75,000.00 |

[illegible]
செயலாளர்,பிரதேசசபை,
புதுக்குடியிருப்பு.
2017.03.02.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெவ்வேறு விபத்துக்களில் சிக்கி பாலகன் உள்ளிட்ட 5 பேர் சாவ. வைத்தியசாலையில்

சாவகச்சேரி, மார்ச் 2

வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற சாலை விபத்துக்களில் சிக்கி 7 மாதக் குழந்தை உட்பட 5 பேர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சாலையில் சைக்கிளில் சென்ற முதியவர் திடீரென மறுபக்கம் செல்வதற்காக சைக்கிளை சாலையின் நடுவே வந்த போது அதே பாதையில் வந்த மோட்டார் சைக்கிள் திடீரென நிறுத்த முற்பட்டு விபத்துக்குள்ளானது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தனர். முதியவர் பாதிப்பின்றித் தப்பிக் கொண்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை ஏ32 சாலையில் தனங்களப்பில் இடம்பெற்றது.

பூநகரி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற அளவை நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணியில் ஈடுபடும் யாழ்ப்பாணம் கல்வியங்காட்டைச் சேர்ந்த கந்தசாமி பிரபாகரன் ( வயது 31 ) திருநெல்வேலியைச் சேர்ந்த பரந்தாமன் சசிகுமார் (வயது 33) ஆகிய இருவரும் காயமடைந்தனர்.

கொடிகாமம் எருவன் சாலையூடாகப் பயணித்த மோட்டார் சைக்கிள் சில்லு மணலுக்குள் சிக்கி சறுக்கியதில் 7 மாதக் குழந்தையுடன் பயணித்த குடும்பப் பெண் காயமடைந்தார். தெய்வாதீனமாக குழந்தைக்கு பாதிப்பு ஏற்படவில்லை.

வரணி குடமியனைச் சேர்ந்த சிவகரன் காஞ்சனா ( வயது 25 ) என்ற குடும்பப் பெண்ணே காயமடைந்தார்.

பாடசாலை விட்டு சைக்கிளில் வந்த மாணவி சந்தியைக் கடக்க முற்பட்ட வேளையில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் மாணவி தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார்.

சாவகச்சேரி கச்சாய் சாலையைச் சேர்ந்த விஜிந்தன் விஜிதா ( வயது 14 ) என்ற மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவியே காயமடைந்தார்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (வ-9)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி **மேரிநவமணி கதிரவேலு**

*மலர்வு* 16.01.1937 — *உதிர்வு* 02.03.2016

உயிர்ப்பும் உயிருமாகிய
இறைவா எம்மைப் பெற்றெடுத்து
வளர்த்து ஆளாக்கிய எம் தாயார்
இவ்வுலக வாழ்வின்
பயணத்தை நிறைவு செய்து உம்பாதமே கதியென்று
சரணடைந்துள்ளார். இவருக்கு நித்திய இளைப்பாறுதலையும்
நீங்காத வெளிச்சத்தையும் கொடுத்தருளும்

நாயன்மார் கட்டு,
நல்லூர்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கணபதிப்பிள்ளை யோகராசா**

தோற்றம் 17.01.1958 — மறைவு 22.02.2015

திதி: வளர்பிறை சதுர்த்தி

மண்ணுலகில் பிறந்து மண்ணுலக வாழ்வில்
மனம் மகிழ வாழ்ந்து இறைவன் நம்பிக்கையில் ஈடுபட்டு
குடும்பத்தின் குலவிளக்காய் திகழ்ந்து
எல்லோரின் உயர்விற்காய் பாடுபட்டுப்
பார்போற்ற வையகத்தில் வாழ்ந்த
எம்முயிர்த்தெய்வமே!
விண்ணுலகம் சென்று இன்று இரண்டு
ஆண்டுகள் ஆனாலும் உங்கள் பிரிவுத்துயர்
எம் நெஞ்சை விட்டகலவில்லை.

நீங்கா நினைவுகளுடன் உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பெரிய பளை,
பளை.

குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவு தினம் 01.03.2017

நல்ல போராட்டத்தைப் போராடினேன்
ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக்
- காத்துக் கொண்டேன்
*(11 திமோத்தேயு 4: 7)*

**அமரர் நேசமணி கிறிஸ்ததாஸ்**

கர்த்தருக்குள் நித்திரையாகி
ஓராண்டு ஆனதோ! அம்மா
பாசத்தைப் பொழிவதில் பாரினில் உயர்ந்தவளே!
நேசத்தை வளர்த்திடவே நேசமணியாய் பூத்தவளே
பாசத்தைத் தந்தெம் வாழ்வினை - வழிப்படுத்தி
மாசறு பொன்னாகி மரித்தாயே அம்மா!

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
"தங்கமால்"
அல்வாய் தெற்கு, அல்வாய்.
தொ.பே. 021 226 3921



தோற்றம் 18.12.1945 — மறைவு 01.03.2016

## மரண அறிவித்தல்கள்

### இ.வை.பொன்னம்பலம்



காரைநகர் வலந்தலையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் காங்கேசன்துறை வீதி, இல. 153 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இ.வை.பொன்னம்பலம் 2017.03.01 ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை அமரத்துவம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விதானையார் இராமலிங்கம்வைத்திலிங்கம்பிள்ளை - நாகம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான இராமநாதன், சோமசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற கொக்குவில் வை.சின்னத்தம்பி - செல்லம்மா தம்ப திகள் மற்றும் காலஞ்சென்றவர்களான வேலணை முத்துக்குமாரசாமி-காமாட்சியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான பாலாம்பிகை, சிவகாமசுந்தரம் ஆகியோரின் அன்புக் கணவரும் சவுந்தராம்பிகை, சிற்சபேசன் (கனடா), வைத்தீஸ்வரன்(பிரான்ஸ்), சாந்தநாயகி (ஆசிரியை - யா/தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை) ஆகியோரின் அருமைத் தந்தையும் காலஞ்சென்ற வை.சி.ஆறுமுகம், வை.சி.சிவகுரு, வை.சி.சிவசுப்பிரமணியம் கனகாம்பிகை, சிந்தாமணி, வாலாம்பிகை மற்றும் வை.சி.அம்பிகாபதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்த பிள்ளை, கலைவாணி(கனடா), தாமரைச்செல்வி (பிரான்ஸ்), மயூரன் (சமுர்த்தி உத்தியோகத்தர், பிரதேசசெயலகம் , உடுவில்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஞானசுந்தரன் (கல்வி அமைச்சு - வடமாகாணம்), ஞானசுந்தரி, பாலசுந்தரி, யாமளசுந்தரி, சிவகலை, கார்த்திகா, ரேவிதா, மயூரன் (கனடா), சோபிகா, அபர்ணா, துவாரகா, சதுர்த்திகன், சிவப்பிரியன், சிவகௌரி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (01.03.2017) புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

153, கே.கே.எஸ். வீதி,
கொக்குவில்.

தகவல்
மு.திருஞானசம்பந்தபிள்ளை
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.



### திருமதி யோகேஸ்வரி கருணாநிதி

காரைநகர் , கோவளத்தைப் பிறப்பிடமாகவும் , 194, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி கருணாநிதி 28.02. 2017 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும், சரவணமுத்து - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கருணாநிதியின் அன்பு மனைவியும், தயாநிதி (கொழும்பு), தயாபரன் (சூரியன் களஞ்சி யம் - யாழ்ப்பாணம்), தயாநந்தினி (லண்டன்), தயாளன் (நாராயணா ஹாட்வெயார்), தயாநந்தன் (சூரியன் களஞ்சியம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பரராஜசிங்கம் (நாராயணா ஹாட்வெயார்), வாசுகி, சிவராசா (லண்டன்), கஜந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், மயூரி, மஞ்சரி, கோபிநாத், கஜீவன், அனோஜன், அபிஷன், மதுரன், மிதுரா, மதுரா, சங்கவி, சஞ்சனா, அபிஷனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2017) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 8 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

194, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(AJA/933)(1.17.18)

தகவல்:
குடும்பத்தினர்.

0212227044


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனமாற்றத்தின் காலம்

தவக்காலம் விபூதிப் புதனுடன் ஆரம்பமாகியுள்ளது. இந்த ஆண்டில் இம்மாதம் முதலாம் திகதியே விபூதிப் புதனாகும். 6 ஞாயிற்றுக்கிழமைகள் நீங்கலாக 40 நாள்கள் தவக்காலமாகக் கருதப்படுகிறது. இந்தத் தவக்காலம் ஒத்தமை நற்செய்தி என்று அழைக்கப்படும். மத்தேயு, மார்க்கு, லூக்கா நற்செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல இயேசுவின் 40 நாள்கள் வனாந்தரத்தில் உண்ணா நோன்பு இருந்து செபத்தில் செலவுசெய்து பிசாசினால் சோதிக்கப்பட்டு வெற்றி பெற்ற நாள்களை நினைவுகூர அழைக்கப்படுகிறோம். நாமும் செபத்திலும், தவத்திலும், இந்த 40 நாள்களை அனுசரிக்கவேண்டும்.

விபூதிப் புதன் மனமாற்றத்தைக் குறிக்கும் அடையாளமாக அமைகிறது. "மனம் திரும்பி நற்செய்தியை நம்பு"(மார்க்கு- 1:15) என்ற வார்த்தைகளோடு விபூதி நெற்றியிலே பூசப்படுகிறது. .

தவக்காலம் மனமாற்றத்தின் காலம். இது நமக்குள் ஆழமாகச் சென்று நமது வாழ்வை ஆராய்ந்து பார்த்து குறைகள், குற்றங்கள், பாவங்களை நினைத்து மனம் வருந்தி மன்னிப்பு வேண்டி இறைவனோடு மீண்டும் நமது உறவைப் புதுப்பிக்கும் காலமாகும்.




புதிதாக மனம் திரும்பி இயேசுவை ஏற்றுகொள்வோருக்கு விசுவாச போதனைகளைக்கற்பித்து அவர்களைத் திருமுழுக்கு திருவருள்சாதனத்திற்கு ஆயத்தம்செய்யும்காலமாகும். விபூதிப் புதன்கிழமை வழிபாட்டில் நெற்றியில் சாம்பல் பூசி "நீ மண்ணாய் இருக்கிறாய் மண்ணிற்கே திரும்புவாய்" (ஆதியாகமம்- 3:19) என்ற வார்த்தைகளை குருவானவர் கூறுகிறார். இது நமது உண்மையான ஆன்மாவின் வாழ்வையும், நாம் கொண்டிருக்கும் உடல் அழிந்துபோகும், மண்ணுக்கே திரும்பிவிடும் என்ற உண்மையை நமக்கு வெளிப்படுத்தி . நாம் இவ்வுலகில் வாழும் காலத்தில் இறைவனோடு ஒன்றித்து நல்வாழ்வு வாழ, அன்பு, இரக்கம், அமைதி, மகிழ்ச்சி போன்ற மனித மாண்புகளோடு வாழ நம்மை புதுப்பிக்கும் காலமாகும். தவக்காலத்தின் ஆரம்பத்திலிருந்தே நமது ஆன்மாவின் வாழ்வும், உடலுக்குரிய நட்பண்புகள் நிறைந்த வாழ்வும் எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்து வாழ முயற்சி செய்வோம்.

அருட்பணி மரியதாஸ் ஸ்ரிபன் செ. தா .

# நிரந்த வேலைவாய்ப்பு கேட்டு பட்டதாரிகளின் போராட்டம் இரவு பகலாகத் தொடர்கிறது


யாழ்ப்பாணம், மார்ச் 2

வேலையற்ற பட்டதாரிகளின் தொடர் போராட்டம் நேற்றைய தினம் மூன்றாவது நாளாகவும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் முன்பாக தொடர்ந்து இடம்பெற்றது.

நிரந்தரவேலை வாய்ப்பு வழங்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்து ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் முன்பாக கொட்டகை அமைத்து தொடர் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். அவர்கள் சாலையிலேயே சமைத்தே உணவு உண்கின்றனர்.

"கொழும்பு அரசின் பிரதிநிதிகள் பல தடவைகள் எமக்கு வாக்குறுதி வழங்கிய போதும் வேலை வாய்ப்பை அவர்கள் வழங்கவேயில்லை. எனவே எமக்கு நிரந்தர நியமனம் கிடைக்கும் வரையில் போராட்டம் தொடரும்" என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகள் தெரிவித்தனர்.

(வ-101)



## திருப்பாடுகளின் பிரதி நேற்று கையளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 2

இயேசுவின் பாடுகள், இறப்பு, உயிர்ப்பை சித்திரிக்கும் திருப்பாடுகளின் நாடகத்துக்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளான நேற்றுப் புதன்கிழமை மாலை 5 மணிக்கு திருமறைக் கலா மன்றத்தின் கலைத்தூது மணி மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்றத்தின் இயக்குனர் ஜோன்சன் ராஜ்குமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்ப்பாண புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை ம.வி.இ.இரவிச்சந்திரன் அடிகளார் கலந்துகொண்டு ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள நடிகர்கள் உட்பட ஏனைய துறைசார்ந்த பிரிவுகளுக்கான பிரதிகளை வழங்கிவைத்தார்.

(வ-23)

# கொழும்பு அரசு மீளளிக்கும் தீர்வைக் கட்டண நிதியை சாலைகள் சீரமைப்புக்கு செலவிடத் தீர்மானம்

யாழ்ப்பாணம் மார்ச் 2

வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கு கொழும்பு அரசினால் மீளளிக்கப்படும் 2011 தொடக்கம் 2014ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்குரிய முத்திரைத் தீர்வைக் கட்டணங்களின் மேலதிக ஒதுக்கீடு, அந்தந்த மன்றத்தின் எல்லைக்குட்பட்ட சாலை சீரமைப்பு வேலைகளுக்குப் பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாபன கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு யாழ்.பொது நூலகத்திலுள்ள வடக்கு மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களால் ஏற்கனவே முன்வைக்கப்பட்ட திட்ட முன்மொழிவுகளுடன் மன்றத்தின் செயலாளர்களை வருகை தருமாறு யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ந.திருலிங்கநாதன் அறிவித்துள்ளார்.

(வ-9)

## தரம் 5 பரீட்சைத் தொடர் - 06
## பாராட்டுப் பெறுவோர்கள்

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் பூரண அனுசரணையுடன் கடந்த ஜனவரி மாதம் ஒளி அரசி மூலம் இடம்பெற்ற தரம் - 5 தபால் மூலமான பரீட்சைத் தொடரில் உயர் புள்ளிகளைப் பெற்ற கீழ்வரும் புலமைசாலிகளை ஒளிஅரசி, புலமைச்சுடர் சார்பாகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| | | |
|---|---|---|
| மு.ச.மகிழ்நிலா | யா/கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம் | 158 |
| சு.பிரவிந் | யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி | 158 |
| அ.மரியா மில்ஷன் | யா/சென் ஜோன்ஸ் கல்லூரி | 157 |
| m.s.s.சில்மி | அல் முபாரட் கனிஸ்ட வித்தியாலயம். | 157 |
| தே.சிலாம்ஷன் | யாழ்/இந்து ஆரம்ப பாடசாலை | 154 |
| ஈ.தர்ஷன் | யா/மூளாய் சைவ பிரகாச வித்தியாலயம் | 154 |
| அ.கண்ணதாஸ் | யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம் | 154 |
| ச.நிரோசா | யா/விவேகானந்தா கல்லூரி | 152 |
| செ.பானுஜா | யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் | 152 |
| ச.கலையாசம் | ம.பொன்னகர் தமிழ் வித்தியாலயம் | 152 |
| பா.சதுர்சனா | சைவ மங்கையர் வித்தியாலயம். | 152 |
| சா.கிருத்திகா | யா/உடுவில் மகளிர் கல்லூரி | 151 |
| எ.சோகன் | R.C.T.V வத்தளை | 151 |
| எம்.ஜே.எம்.வாசிப் | C/ROYAL COLLEGE | 150 |
| ந.உயானா | யா/இனுவில் மத்திய கல்லூரி | 150 |
| த.லக்சாயினி | ஆ/பா.ஆரம்ப பாடசாலை | 149 |
| ரொமாஷா | கொ/நல்லாயன் மகளிர் வித்தியாலயம் | 149 |
| இ.பிரணவி | யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை | 149 |
| சி.றோகித் | யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை | 149 |
| ஜே.விஷாளினி | மட்/வின்சன் மகளிர் உயர்தர பாடசாலை | 149 |
| சா.பிரகாசன் | யா/நெல்லியடி மெ.மி.த.பாடசாலை | 148 |
| செ.மதுசன் | யா/வட இந்து ஆரம்ப பாடசாலை | 147 |
| க.அஸ்வினி | கொ/விவேகானந்தா கல்லூரி | 147 |
| இ.ஹாசன் மௌளானா | பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி | 145 |
| பா.அக்சயா | சைவ மங்கையர் வித்தியாலயம். | 145 |
| சி.அபிரேகா | யா/ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாலயம். | 145 |
| ச.அபிலாசன் | பரி/யோவான் கல்லூரி யாழ்ப்பாணம் | 143 |
| ர.கம்சனா | யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம் | 142 |
| சபியா | பாத்திமா கல்லூரி | 141 |
| கோ.சாரங்கன் | யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம். | 139 |
| ரூ.தர்சா | உடுவில் மகளிர் கல்லூரி | 138 |
| ப.ஹரினிகா | யாழ்/இந்து ஆரம்ப பாடசாலை | 135 |
| ச.சஞ்சுகன் | யாழ்/இந்து ஆரம்ப பாடசாலை | 133 |
| மு.ஸ்ரீபானுசன் | யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் | 133 |
| தி.அஜேய் | கொ/விவேகானந்தா கல்லூரி. | 133 |
| பு.அபிலாசினி | புனித/அன்னம்மாள் மகளிர் வித்தியாலயம். | 132 |
| பா.நிவேதிகா | சைவ மங்கையர் வித்தியாலயம். | 130 |
| ச.நிக்சயா | கொ/கணபதி இந்து மகளிர் கல்லூ | 130 |
| ந.அபர்ணா | யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம் | 128 |
| எ.சபரீசன் | R.C.T.V வத்தளை | 128 |
| யோ.திவ்யா | ஸ்ரீ/குமரன் ஆரம்ப பாடசாலை | 128 |
| சோ.கபிலாசினி | சைவமங்கையர் வித்தியாலயம் | 125 |
| ஸ்ரீ.கயனி | மு/விநாயகபுரம் அ.த.க பாடசாலை | 122 |
| சி.ஹரிபிரஷாத் | கொ/விவேகானந்தா கல்லூரி | 120 |
| வ.ஷஜய் | யா/உடுப்பிட்டி அமரிக்கன் மிசன் வித்தியாலயம் | 120 |

உங்கள் பிள்ளைகளும் பரீட்சையில் பங்குபற்ற விரும்பினால் அருகிலுள்ள உதயன் முகவரிடம் ஒளிஅரசி சஞ்சிகையைப் பெறுவதன் மூலம் பங்குபற்றலாம். மேலதி தொடர்புகளுக்கு 071 862 8351 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைக்கவும்.

# சாவகச்சேரி வைத்தியசாலைக்குள் டெங்கு நுளம்புக்கு ஏதுவான சூழல்

## சுகாதாரப் பகுதியினர் சிவப்பு அறிவித்தல்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வளாகத்தில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய ஏது நிலை காணப்பட்டதை அடுத்து, வைத்தியசாலை நிர்வாகத்துக்கு ஒரு வார கால அவகாசம் கொடுத்து சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. ஒரு வார காலத்துக்குள் துப்புரவு செய்யப்படாவிட்டால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

கடந்த வாரம் யாழ்.சுகாதாரத் திணைக்கள பூச்சியியல் நிபுணர், வைத்தியசாலை வளாகத்தைப் பார்வையிட்டார். அறிக்கை தாக்கல் செய்யமாறு அவர் பிரிவு பொது சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவித்தார். சாவகச்சேரி நகர பொது சுகாதார பரிசோதகர் கி.தளிர்ராஜ் தலைமையிலான பொது சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று வைத்தியசாலை விடுதிகள் மற்றும் வளாகத்தைப் பார்வையிட்டனர்.

வைத்தியசாலை கழிவு நீர் சேகரிக்கும் தொட்டிகளில் வெடிப்பு காணப்படதுடன், நுளம்புகளும் காணப்பட்டன. கழிவுநீர்த் தொட்டிக்கு நீர் செல்லும் வாய்க்கால்களில் உரிய முறையில் சுத்தம் பேணப்படாததால் பல இடங்களில் நீர் தேங்கியுள்ளது. வைத்தியசாலை வளாகத்தில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய தகரங்கள் மருந்துப் பேணிகள், இளநீர்க் கோம்பைகள், சிரட்டைகள் போன்றவை காணப்பட்டன. வைத்தியசாலையில் உள்ள அனைத்து விடுதிகளின் மலகூடங்களும் ஒழுங்காகத் துப்புரவு செய்யப்படாது நீர் தேங்கி டெங்குக் குடம்பிகள் காணப்படுகின்றன என அறிக்கையிடப்பட்டது.

இந்தக் குறைபாடுகளை ஒரு வார காலத்துக்குள் நிவர்த்தி செய்ய வேண்டும் என்றும் தவறின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வைத்தியசாலை நிர்வாகத்துக்கு சிவப்பு அறிவித்தலுடன் கடிதம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

"விடுதிகளின் கழிவு நீரைக் சேகரிக்க அமைக்கப்பட்டுள்ள தொட்டிகளில் அடிக்கடி நீர் நிறைந்து வெளியேற முடியாமல் வாய்க்கால்கள் மற்றும் மலகூடங்கள் போன்றவற்றில் தேங்கி நிற்கின்றன. கழிவுநீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்துவது தொடர்பாக சுகாதாரத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்ட போதும் இன்னமும் பொருத்தப்படவில்லை. கழிவுத் தொட்டிகளை உடனுக்குடன் வெளியேற்ற போதிய நிதி வளம் எம்மிடம் இல்லை. வைத்தியசாலையில் சேகரிக்கப்படும் கழிவுகள் சாவகச்சேரி நகரசபைவாகனங்கள் மூலம் தினமும் சேகரிக்கப்படுகின்றன. நோயாளர்கள் தமக்குக் கொண்டு வரும் இளநீர்க் கோம்பைகள், பிளாஸ்ரிக் குவளைகள், சிரட்டைகள் போன்றவை வளாகத்தில் எறிகின்றனர்.

வைத்தியசாலையில் தனியார் சுத்திகரிப்பு சேவைகள் நிறுத்தப்பட்டதால் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்ள முடியவில்லை. வைத்தியசாலையில் நியமிக்கப்பட்டுள்ள சுகாதார உதவி சேவையாளர்கள், வெளிநோயாளர் பிரிவுகள், கிளினிக்குள், விடுதிகள் போன்றவற்றில் கடமையில் ஈடுபடுத்துவதால் வைத்தியசாலை விடுதிகளின் மலகூடங்கள், வாய்க்கால்கள் போன்றவற்றில் சுத்திகரிப்பு இடம்பெறுவதில்லை" என்று வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ந-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தொடர்ந்து நேர்மையற்று நடப்பின் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றமே ஒரே தீர்வு

## ஐ.நா. பாதுகாப்புச் சபையிடம் பன்னாட்டு நிபுணர் குழு வலியுறுத்து

கொழும்பு, மார்ச். 2
இலங்கை அரசு தொடர்ந்து நேர்மையற்று நடக்குமானால், கலப்புநீதிமன்றம் அமைத்தல் உள்ளிட்ட ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை எழுத்திலும் கருத்திலும் செயலாக்குவதற்கு முழுமையான நடவடிக்கைகள் எடுக்கத் தவறுமானால், ஐ.நா. பாதுகாப்புச் சபை ஓராண்டுக்குள் இலங்கைநிலமையைபன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் பார்வைக்கு அனுப்ப வேண்டும்.

இவ்வாறு இலங்கைதொடர்பில்கண்காணிப்பைமேற்கொண்டபன்னாட்டு நிபுணர் குழு தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர உரையாற்றிய சில மணி நேரங்களில், பன்னாட்டுநிபுணர் குழுபத்திரிகையாளர் சந்திப்பை நடத்தியது. இதன்போதே மேற்படி விடயங்களை அவர்கள் முன்வைத்துள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் சபை இலங்கைக்கு வழங்கியிருந்த கடந்த 18 மாத கால அவகாசத்தில் இலங்கை அரசின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்குநாடுகடந்ததமிழீழஅரசு இந்தப்பன்னாட்டுக்குழுவைநியமித்தது.

இந்தக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கை அரசு, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு இதய சுத்தியுடன் நடந்து கொள்ளவில்லை. மனித உரிமை மீறல்களும், பன்னாட்டுச் சட்டப்படி குற்றங்களான முறைகேடுகளும் இலங்கையில் தண்டிக்கப்படும் அச்சமின்றித் தொடர்ந்து நிகழ்கின்றன. நாட்டின் நீதித்துறையிலும் பாதுகாப்புத் துறையிலும்முழுமையான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை. இலங்கை அரசு அமைத்த நல்லிணக்கப் பொறிமுறைகள் தொடர்பான கலந்தாய்வுச் செயலணியின் இறுதி அறிக்கை குறித்து அரசு அலட்சியமாகவும் கண்மூடித்தனமாகவும் மறுதலிப்பதாக உள்ளது.

மேலேஎடுத்துரைத்தவாறு இலங்கை அரசின் நடப்பு நிலைப்பாட்டைக் கருத்தில் கொண்டு, பொறுப்புக்கூறல் கண்காணிப்புக் குழு தனது முதல்கள அறிக்கையில் தெரிவித்த பல்வேறு பரிந்துரைகளையும் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறது.

பன்னாட்டு நீதிபதிகளைப் பெரும்பான்மையாகக் கொண்ட சிறப்பு நீதிமன்றம் அமைக்கவேண்டும். இணைப்பன்னாட்டுவழக்குத்தொடுநர் வேண்டும். சாட்சிகளுக்குப் போதிய பாதுகாப்பு வேண்டும். பாதிப்புற்றோரின் பங்கேற்பும் தற்சார்பான கண்காணிப்பும் வேண்டும் என்ற பரிந்துரைகளை எடுத்துக்காட்ட விரும்புகிறது.

2015 தீர்மானத்துக்கு இணங்க இலங்கை அரசு நடந்து கொள்வதை அவ்வப்போது முறையாக மீளாய்வு செய்யும்வகையில்ஐ.நா. மனித உரிமைகள் சபை தனக்குள்ள கட்டளையை நீட்டிக் கொள்ளுமாறு பொறுப்புக்கூறல் கண்காணிப்புக் குழு கேட்டுக் கொள்கிறது.

பிரிட்டனும், அமெரிக்காவும், இந்தியாவும், வசதி வாய்ப்பும் செல்வாக்கும் படைத்த பிற தொடர்புள்ள அரசுகளும் வெறும் வாய்வீச்சு அழுத்தம் என்பதைக் கைவிட்டு, பாதிப்புற்றோருக்கான பன்னாட்டு சட்டக் கடப்பாடுகளுக்கிணங்க இலங்கை அரசைச் செயல்படச் செய்வதற்கு அவசியமான நெம்புதிறனைப் பயன்படுத்துமாறு பொறுப்புக்கூறல் கண்காணிப்புக் குழு கேட்டுக் கொள்கிறது.

கலந்தாய்வுச் செயலணியின் இறுதி அறிக்கையை நீதிக்கான ஒத்திசைந்த முழுநிறைவான வழித்தடமாக ஏற்கும்படியும், அதிலடங்கிய பல்வேறு பரிந்துரைகளையும் உண்மையாகவும் வெளிப்படையாகவும் கருதிப்பார்க்கமுற்படும்படியும்பொறுப்புக்கூறல் கண்காணிப்புக் குழு இலங்கை அரசைக் கேட்டுக் கொள்கிறது என்றுள்ளது. (து5)

# அமெ. கடற்படையின் அதிகாரி கொழும்பில்




கொழும்பு, மார்ச். 2
அமெரிக்கக் கடற்படையின் பசுபிக் மரைன் படைப் பிரிவின் பிரதிக் கட்டளைத் தளபதி பிரிகேடியர் ஜெனரல் பிரையன் கவனோ, இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

இவருடன், பசுபிக் கட்டளைத் தளபதி அட்மிரல் ஹாரிசின் மூத்த பட்டியல் அதிகாரி, சார்ஜன்ட் மேஜர் அன்ரனி ஸ்பாடரோ, அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களத்தின்தெற்குமத்தியஆசிய பிராந்தியத்துக்கான பிரதி உதவிச் செயலர் பணியகப் பணிப்பாளர் பிரிட்டானி பில்லிங்ஸ்லி ஆகியோரும் இலங்கைக்கு வந்துள்ளனர்.

மன்னார், முள்ளிக்குளத்தில் நடந்த கடற்படையின் முதலாவது மரைன்படைப்பிரிவு பற்றாலியன் பயிற்சியை முடித்து வெளியேறும் நிகழ்வில் இவர்கள் பங்கேற்றிருந்தனர்.

கடற்படைத் தலைமையகத்துக்குச் சென்ற அமெரிக்கக் கடற்படையின்பசுபிக்மரைன் படைப் பிரிவின் பிரதிக் கட்டளைத் தளபதி பிரிகேடியர் ஜெனரல்பிரையன்கவனோ உள்ளிட்ட அமெரிக்கப் படை அதிகாரிகள் கடற்படைத் தளபதிவைஸ்அட்மிரல்ரவீந்திர விஜேகுணரத்னவைச் சந்தித்து நேற்றுப் பேச்சு நடத்தினர்.

இந்தப் பேச்சுக்களில், கொழும்பில்உள்ளஅமெரிக்கத் தூதரகப் பிரதிப் பாதுகாப்பு ஆலோசகர் ஜேக்கப், அமெரிக்கத் தூதரகக் கடற்படை ஆலோசகர்லெப். கொமாண்டர் பிரையன் பேஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்து விரிவான கலந்துரையாடல் நடத்தப்பட்டது. புதிதாக உருவாக்கப்பட்ட கடற்படையின் மரைன் படைப் பிரிவுக்கான எதிர்காலப்பயிற்சிமற்றும்நடவடிக்கை விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது. (து5)

# காணாமற்போன இளைஞர் நேற்று சடலமாக மீட்பு

பொகவந்தலாவ, மார்ச்02
மஸ்கெலியா சின்ன சூரிய கந்த தோட்டத்தில் காணாமல்போனதாக கூறப்பட்ட 23 வயது இளைஞரொருவர் மஸ்கெலியா நீர்த்தேக்கத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கந்தையா கார்த்திக் என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் செவ்வாய்க்கிழமை இரவுமுதல் காணாமல் போயுள்ளார் எனப் பெற்றோர் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்த நிலையிலேயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மஸ்கெலியாபொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (து-ய)

## காணிப் பணிப்பாளர் மீதான சூடு;

# விசாரணைகள் முடியும்வரை எவர் மீதும் குற்றம்சாட்டாதீர்

## ஸ்ரீநேசன் எம்.பி. வேண்டுகோள்

செங்கலடி, மார்ச்02
காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் மீதான துப்பாக்கிப்பிரயோகம் தொடர்பில் விசாரணைகள் முடிவடைந்து யார் குற்றவாளி என்பதை கண்டுபிடிக்கும் வரைக்கும் ஒரு சமூகத்தை அல்லது இனத்தை நோக்கி விரல்களை நீட்டாமல் பொறுமை காக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்புமாவட்டநாடாளுமன்றஉறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்புகரடியனாறுமகாவித்தியாலய வருடாந்தஇல்லவிளையாட்டுப்போட்டியில் அதிதியாகக்கலந்துகொண்டுஉரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

அண்மையில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் [illegible] மீதான துப்பாக்கிப் பிரயோகம் பற்றிய விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. அவர் பல காணிப் பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்டிருந்தார் என்பது உண்மை. விசாரணையின் பின்னர் குற்றவாளிகள் யார் என்பதைக் கண்டுகொள்ள முடியும்.

பொலிஸார் குற்றவாளிகளை அடையாளம் காண்பதற்கு சந்தேகங்கள் எழுகின்ற போது எமக்குள் இருக்கின்ற உறவுகளை உடைக்கவேண்டியநிலைஉருவாகலாம். வேறு மாவட்டங்களில் மாகாணங்களில் இருக்கின்றவர்களின் மகுடிக்கு ஆடுபவர்களாக நாங்கள் இருக்கக் கூடாது. ஒவ்வொருவரும் தாங்களாகச் சிந்தித்து செயற்படவேண்டும். தமது சுயபுத்தி இழந்து செயற்படுவதன் காரணமாகப் பகைகளைச் சம்பாதிக்கவேண்டிய நிலை ஏற்படும்.

நாம் ஒவ்வொருவரும் பொறுப்புடன் கருத்துக்களைப்பகிர்ந்துகொள்ளவேண்டும் என்றார். (துய47)

# யாழ். – பதுளை பஸ் மீது கற்கள் வீசித் தாக்குதல்

## சாரதி உட்பட நால்வர் படுகாயம்

பதுளை, மார்ச்02
யாழ்ப்பாணத்திலிருந்து பதுளை நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் மீது இனந்தெரியாத சிலர் தாக்குதல் நடத்தியதில் சாரதி உட்பட நால்வர் படுகாயங்களுடன் பதுளை அரசினர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம், நேற்று முன்தினமிரவு மகியங்கனை பதுளை வீதியில் 17ஆவதுமைல்கல்அருகே இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து பதுளை நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் மீது கற்களாலும், தண்ணீர்ப் போத்தல்களினாலும்தாக்குதல்கள்மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் பஸ்ஸின் கண்ணாடிகள் நொறுக்கப்பட்டன.

தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட வேளை, காயமுற்ற சாரதி இரத்தம் சொட்டச் சொட்ட பஸ்ஸை நிறுத்தாமல், மீகாகியுல அரசினர் மருத்துவமனை வரை கொண்டு சென்றார்.

அங்கு காயமுற்றவர்களுக்குஆரம்பசிகிச்சைகள் மேற்கொண்டபின், அனைவரும் பதுளை அரசினர் மருத்துவமனைக்குமாற்றப்பட்டனர்.

தாக்குதல் சம்பவம் குறித்து பதுளை, மகியங்கனைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (து-ய-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வான்படைத் தளம் பிலக்குடியிருப்பில் தொடர்ந்தியங்கும்!

கொழும்பு, மார்ச் 2
பிலக்குடியிருப்பில்மக்கள்காணிகள்விடுவிக்கப்பட்டாலும் வான்படைமுகாம்தொடர்ந்தும்இயங்கும்என்றுதெரிவித்தார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொசான் செனவிரட்ன.

அமைச்சரவைமுடிவுகளைஅறிவிக்கும்பத்திரிகையாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் பிலக்குடியிருப்பில் 42 ஏக்கர் காணிகள் மக்களிடம் ஒப்படைப்பதற்காக மாவட்ட செயலரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள வான்படைத் தளம் அகற்றப்படாது. வான்படை முகாமும், வானூர்தித் தளமும் அங்கு உண்டு.

யாழ்ப்பாணத்தில் பலாலி இராணுவ முகாம் பகுதியில் மக்கள் எவ்வாறு மீள்குடியமர்த்தப்பட்டார்களோ அவ்வாறே பிலக்குடியிருப்பிலும்மக்கள்மீள்குடியமர்த்தப்படுவார்கள். என்றார். (ற-5)



# மண்டைக்கல்லாறு பால கட்டுமானம் ஆரம்பம்

கிளிநொச்சி, மார்ச் 2
யாழ்ப்பாணம் மன்னார் பிரதான வீதியில் மண்டைக்கல்லாறில் பாலம் அமைக்கும்பணிகள்ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த பாலம் ஜப்பான் பன்னாட்டுகூட்டுத்தாபனங்கள் முகவர்நிறுவனத்தின்450 மில்லியன் ரூபா நிதியுதவியில் அமைக்கப்பட உள்ளது. கொங்கிறீற்றால்அமைக்கப்படும்இந்த பாலம் 95 மீற்றர் நீளமானதாக அமைக்கப்படும். பாலக் கட்டுமானம் 2018 ஆம்ஆண்டு 8ஆம்மாதம் 23ஆம்திகதிக்குள்முடிக்கப்பட வேண்டும் என்று ஹசாமா அன்டோ கோப்பிரேஷன் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

"ஜப்பான் அரசு வடக்கு மாகாணத்தில் எட்டுப் பாலங்களைஅமைக்கவுள்ளது. சுமார் 3 ஆயிரத்து 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கியுள்ளது. மன்னாரில் 3 பாலங்களும், வவுனியா, நாவற்குழி, கைதடி மற்றும் மண்டைக்கல்லாறில் தலா ஒரு பாலமும் அமைக்கப்படவுள்ளன. மன்னார் மாவட்டத்தில் மூன்றுபாலங்கள்அமைக்கப்படவுள்ளதால் ஒப்பந்த நிறுவனம் மன்னாரைத் தளமாகக் கொண்டு ஆரம்பப் பணிகளை மேற்கொண்டுள்ளது. பாலம் அமைக்கப்பட்டதும் பொது மக்கள்இவ்வளவுகாலமும் எதிர்நோக்கி வந்த போக்குவரத்துப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்." என்று கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதம பொறியியலாளர் கே. இளங்கீரன் தெரிவித்தார்.

மழைக்காலங்களில் அந்தப்பகுதியில்வீதியைமேவி நீர்பாய்வதால் வீதியூடான போக்குவரத்து முற்றாகத் தடைப்படும். படகு மூலம் மக்கள் பயணிக்கவேண்டிய நிலை காணப்பட்டது. முழங்காவில்ஆதாரவைத்தியசாலையிலிருந்துயாழ். போதனாவைத்தியசாலை, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைகளுக்கு அம்புலன்ஸ் மூலம் நோயாளர்கள் கொண்டு செல்வதிலும் பலத்த இடையூறுகள் காணப்பட்டன. தற்போது பாலம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ற-21)



# கற்குவியலாக வீடுகள்: கண்ணீர் விட்டு கதறிய பிலக்குடியிருப்பு மக்கள்

முல்லைத்தீவு, மார்ச் 2
சொந்தக் காணிகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்ட பிலக்குடியிருப்புமக்கள்அங்கு தமது வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளமையைக் கண்டுகண்ணீர் விட்டுக்கதறி அழுதனர்.

பிலக்குடியிருப்பு மக்கள் தமது காணிகளைவிடுவிக்கவேண்டும்என்றுதொடர் போராட்டத்தில்ஈடுபட்டனர். அதன்பயனாகக் காணிகள் நேற்று விடுவிக்கப்பட்டன. அங்கு சென்ற மக்கள் தமது வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டிருந்தைக்கண்டுஅதிர்ச்சியடைந்தனர்.



"இறுதிப்போரால்இடம் பெயர்ந்தபோது வீடுகளை அப்படியேவிட்டுச்சென்றோம். ஒரு மாதத்துக்கு முன்பாக எமது வீடுகள் பகுதியளவு சேதத்துடன் இருந்தன. இப்போது முழுமையாக தரைமட்டமாக்கப்பட்டுள்ளன." என்றுகண்ணீருடன்தெரிவித்தார் மு. இராசலட்சிமி என்பவர்.

அங்குள்ள பெரும்பாலான வீடுகளுக்கு இதுவே நிலமை என்று கூறப்படுகின்றது. காணி, வீடற்ற5மாவீரர்குடும்பங்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளால்2003ஆம் ஆண்டு கல்வீடு, மலசலகூடம்அமைத்துக் கொடுக்கப்பட்டது. அவையும்தரைமட்டமாக்கப்பட்டுள்ளன என்றுதெரிவிக்கப்பட்டது. (ற-7)

# "நினைவாக இருந்தவற்றை நிர்மூலமாக்கி விட்டனர்"

## காணியைப் பார்க்கச் சென்றவர் கண்ணீர்

முல்லைத்தீவு, மார்ச் 2
"எங்கள்அப்பாநடத்தியகடையைக்காணவில்லை. அவர்கஷ்ரப்பட்டுகட்டியவீட்டையும் தரைமட்டம் ஆக்கிவிட்டார்கள். அப்பாவின் நினைவாக இருந்தவை எல்லாம் அழிக்கப்பட்டுவிட்டன."

இவ்வாறு கண்ணீருடன் தெரிவித்தார் சதானந்தன் தயாளினி.

பிலக்குடியிருப்புமக்களின்காணிகள்நேற்று இராணுவத்தால்விடுவிக்கப்பட்டன. தனது சொந்தக்காணியைச்சென்றுபார்த்த பின்னர் தயாளினி இவ்வாறு தெரிவித்தார்.



"பிலக்குடியிருப்பில் நாங்கள் வசித்த காலத்தில் எங்கள் அப்பா இங்குஒருகடைநடத்தினார். அந்த கடை தான் எங்கள் வாழ்வாதாரத்துக்குஉதவியது. நாங்கள்இடம்பெயர்ந்து சென்றபோது கடை அப்படியேஇருந்தது. முள்ளிவாய்க்கால் பகுதியில் இடம்பெயர்ந்து இருந்த காலத்தில் இராணுவம் ஏவிய எறிகணையால்எங்கள்அப்பாஉயிரிழந்தார். தற்போதுஏழ்மைநிலையில்வாழ்கின்றோம். அப்பா நடத்திய கடையை நடத்தியாவது எங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தலாம் என்று எண்ணியிருந்தோம். கடையும் தரைமட்டமாக அழிக்கப்பட்டுள்ளது." என்று அவர் கண்ணீருடன் கூறினார். (ற-7)

# ஐநூறு பெண்களுக்கு வாழ்வாதார உதவிகள்

கிளிநொச்சி, மார்ச் 2
பன்னாட்டு பெண்கள் தினத்தை முன்னிட்டுப் போரால் பாதிக்கப்பட்ட 500க்கும் மேற்பட்ட பெண்களுக்கான உதவித் திட்டங்கள் எதிர்வரும் 22ஆம் திகதி கிளிநொச்சியில் வழங்கப்படவுள்ளது.

பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சந்திராணி பண்டார உதவித்திட்டங்களை வழங்வுள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர் சந்திப்புநடைபெற்றது. அதிலேயே அமைச்சர் சந்தராணி பண்டார இந்த தகவலை வெளியிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கில் சித்திரவதைகளுக்கு உள்ளான பெண்கள் மற்றும் ஏனையோருக்கான பிரச்சினைகளை செவிமடுப்பதற்கு நாங்கள் தாயாராக உள்ளோம். அடையாள அட்டை, பிறப்பு சான்றிதழ் இல்லாதவர்கள் அவற்றை பெறுவதற்காக பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு சென்று அவர்களுடைய குறைபாடுகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். வடக்கு, கிழக்கில் போரால் பாதிக்கப்பட்ட பெண்கள் அதிகளவில் உள்ளனர். அவர்களது குறைகளை நிவர்த்தி செய்வதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட உள்ளன. பெண் தலைமைத்துவத்தை கொண்ட பெண்கள், பாதிக்கப்பட்ட பெண்கள் ஆகியோருக்கு சுய தொழில் பயிற்சிகளை வழங்கி அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். போரால் பாதிக்கப்பட்ட பெண்கள் 500 பேருக்கு எதிர்வரும் 22ஆம் திகதி கிளிநொச்சியில் நிதியுதவிகள், சுயதொழில் முயற்சியாளர்களுக்கான பயிற்சிகள் போன்ற சிறப்பு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன. என்றார். அங்கு கருத்து தெரிவித்த பெண்கள் செயலணி பிரதிநிதிகள். "சித்திரவதைகளால் பாதிக்கப்பட்ட பெண்களை பாதுகாப்பதற்கு மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு மத்தியநிலையங்கள் அமைக்கப்பட உள்ளன. அவர்களுக்கு வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன." என்று குறிப்பிட்டனர். (ற-21)

# நிறம் மாற்றப்பட்ட வான் சிக்கியது: மாடு கடத்திய சந்தேகத்தில் இருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச்.2
ஊர்காவற்றுறைப் பகுதிக்குள் மாடுகடத்தலுக்குபயன்படுத்தப்பட்டதுஎன்றுசந்தேகிக்கப்படும் நிறம் மாற்றப்பட்ட வான் ஒன்று ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

புத்தளத்தில்பதிவுசெய்யப்பட்ட அந்தவானின் அனைத்து இருக்கைகளும் அகற்றப்பட்ட நிலையில்தார்சீற்மட்டும்விரிக்கப்பட்டுசந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்துள்ளது. வாகனத்தைச் சோதனையிட்டபோது அதிலிருந்துகிளம்பியமணத்தை அவதானித்தபொலிஸார் குறித்த வான் தீவுப் பகுதியில் இருந்து திருட்டுத்தனமாகமாடுகடத்தலுக்குப்பயன்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் கைப்பற்றினர். அதன் சாரதியும், உதவியாளரும் கைது செய்யப்பட்டனர்.

வாகனங்களின் ஆவணங்கள் பரிசீலித்தபோது வானின் நிறம் மாற்றப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதுடன், சாரதியிடம் ஒரே புகைப்படத்துடன்இருபெயர்களைக்கொண்ட சாரதி அனுமதிப் பத்திரங்கள் கைப்பற்றப்பட்டன.

கைதான இருவரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை 14 நாள்கள் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ற-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் தினப் பேரணி வடக்கில் நேற்று



யாழ்ப்பாணம், மார்ச் 1

பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் களைவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சர்வதேச பெண்கள் தினப் பேரணி நேற்று வடக்கில் உள்ள மாவட்ட செயலகங்களில் எழுச்சியாக நடைபெற்றது.

எதிர்வரும் மார்ச் மாதம் 8ஆம் திகதி நடைபெறவுள்ள பெண்கள் தினத்தை முன்னிட்டு, பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சால் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது.

**யாழ்ப்பாணம்**

யாழ். மத்திய பஸ் நிலையத்தில் நேற்று புதன்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ். மாவட்டசெயலாளர் நாகலிங்கம் வேதநாயகன் பேரணியை ஆரம்பித்தார்.

பேரணி யாழ். ஆஸ்பத்திரி வீதி வழியாக ஏ9 வீதியை அடைந்து யாழ். மாவட்ட செயலகத்தில் நிறைவு பெற்றது. பேரணியில் யாழ். மேலதிக மாவட்ட செயலாளர் சுகுணரதி தெய்வேந்திரம், உதவி மாவட்ட செயலாளர் (காணி) முரளிதரன், நிர்வாக உத்தியோகத்தர்கள், யாழ். மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பெண்கள் அமைப்புக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

**வவுனியா**

வவுனியாவில் வவுனியா தெற்கு கல்வி வலயத்திலிருந்து நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்ட பேரணி வவுனியா மாவட்ட செயலகத்தை வந்தடைந்தது. பேரணியை வவுனியா மாவட்ட செயலர் ஆரம்பித்தார்.

நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடமாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம், வவுனியா தெற்கு வலயக் கல்விப்பணிப்பாளர் முத்து ராதாகிருஷ்ணன், வவுனியா கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம். பி. நடராஜ், வவுனியா மாவட்ட செயலக உதவி மாவட்ட பிரதேச செயலாளர், திணைக்களத் தலைவர்கள், பெண்கள் நிறுவனம் சார் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

**கிளிநொச்சி**

கிளிநொச்சியில் மாவட்ட செயலாளர் அலுவலகத்திலிருந்து கிளிநொச்சி டிப்போ சந்திவரை விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு, விழிப்புணர்வுக் கருத்துக்களும் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டசெயலாளர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக மாவட்ட செயலாளர் சத்தியசீலன், மாவட்ட செயலக அதிகாரிகள், பிரதேச செயலகங்களின் செயலாளர்கள் உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**மன்னார்**

மன்னார் மாவட்டச் செயலகத்தில் மு.ப. 9.30 மணியளவில் ஆரம்பமான குறித்த பேரணி பிரதான வீதியூடாக சென்று மீண்டும் மன்னார் மாவட்டச் செயலகத்தை சென்றடைந்தது. பேரணியில் மன்னார் மாவட்ட செயலாளர் எம்.வை.எஸ். தேசப்பிரிய, மன்னார் பிரதேச செயலாளர் கே.எஸ்.வசந்தகுமார், மன்னார் மாவட்ட மேலதிக செயலாளர் திருமதி ஸ்ரான்லி டிமேல், மன்னார் மாவட்டச் செயலகம், மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், பெண்கள் அமைப்புக்களின் பிரதி நிதி கள் என பலர் கலந்து கொண்டனர்.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவில், முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக ஆரம்பமான பேரணி, பிரதான வீதி கடற்கரை வழியாக சுனாமி நினைவாலயம் சென்று சிறுவர் பூங்கா சந்தியை அடைந்து மீண்டும் தபாற்கந்தோர் வீதி வழியாக மாவட்ட செயலகம் சென்றடைந்தது. அதில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், மாவட்ட சமூகமட்ட பிரதிநிதிகள், பெண்கள் அமைப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ற21,56,102,7,106,402,34,35)




Digitized by Noolaham Foundation.

## புற்றுநோய் விழிப்புணர்வு 1

- மார்பகப்புற்றுநோயின் அறிகுறிகள்.
- சமச்சீர் தன்மையில்/ வடிவத்தில்ஏற்படும்திடீர் மாற்றம்.
- மேல் தோல் தடிப்படைதல்/வீக்கமுறுதல்.
- தோலின்கீழானகடினப் பகுதி/உட்குழிவுகள்ஏற்படுதல்.
- மார்பகத் தோலானது, தோடப்பழத் தோலை ஒத்ததோற்றம்பெறுதல்.
- முலைக்காம்புஉள்புதைதல். அவற்றிலிருந்துதிரவம் வெளியிடுதல்.
- அக்குள்/கழுத்துப் பகுதிகளில் நிணநீர் முடிச்சுக்கள் வீங்கிக் காணப்படுதல்.

# ஊழியர் நம்பிக்கை நிதிய அலுவலகம் வவுனியாவில்

## வன்னி மக்கள் சேவைகளை பெறலாம்

வவுனியா, மார்ச் 2

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின்பிராந்தியஅலுவலகம்நேற்றுவவுனியாவில் திறக்கப்பட்டது. இந்த அலுவலகம் வுவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களைஉள்ளடக்கிசேவைகளைவழங்கவுள்ளது.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் செயலாளர் ஐ.எம்.றபீக்அலுவலகத்தைத்திறந்துவைத்தார். நோயால் பாதிக்கப்பட்டவர்கள், உழியர் நம்பிக்கை நிதியத்தைப் பெற விண்ணப்பித்திருந்தவர்களுக்கு நிகழ்வில் காசோலைகள் வழங்கப்பட்டன. தொடர்நிகழ்வாகபுலமைப் பரிசில்பரீட்சையில்சித்தியடைந்த300மாணவர்களுக்குப்பரிசில்களும், சான்றிதழ்களும்வழங்கப்பட்டன. நிகழ்வில்வவுனியாமாவட்டசெயலாளர்ரோகணபுஸ்பகுமார, வன்னிநாடாளுமன்றஉறுப்பினர்கே.கே.மஸ்தான், வட மாகாண சபை உறுப்பினர் ஏ.ஜெயதிலக, ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற21)



# கூரை பிரித்து திருட முயன்று மாட்டிக் கொண்ட சிறுவர்கள்!

யாழ்ப்பாணம், மார்ச் 2

கடையில்கூரைபிரித்து,திருடமுயன்றபோது இரு சிறுவர்கள் கைது செய்யப்பட்டனர். இந்தச்சம்பவம்நேற்றுமுன்தினம் இரவு பருத்தித்துறை, மந்திகையில் இடம்துபெற்றது. அதே கடையில் அவர்கள்கடந்தஆண்டும்திருடியுள்ளனர்என்றுபொலிஸார்தெரிவித்தனர். தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்றிலேலேயேதிருட்டுமுயற்சிஇடம் பெற்றுள்ளது. அந்தக்கடைக்குஅருகே உள்ள கடையில் இருந்தவர்களுக்கு சத்தம் கேட்டுள்ளது. பொலிஸாருக்கு இரகசியமாகத் தகவல் வழங்கப்பட்டது. அங்கு வந்த பொலிஸார் கூரை பிரித்துக் கடைக்குள் நுழைந்திருந்த இருவரைக் கைது செய்தனர். அவர்கள் 15, 18 வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

"கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைசெய்தபோது, கடந்தஆண்டும் இதே கடையில் 2 லட்சம் பெறுமதியானகைபேசிகளைத்திருடியுள்ளனர் என்றுதெரியவந்தது. மற்றொருசந்தேகநபர் கைது செய்யப்படவுள்ளார்"-என்று பொலிஸார்தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள்நீதிமன்றில் முற்ப டுத்தப்பட்டனர். 19 வயதுடையவருக்குஎதிர்வரும்14ஆம்திகதிவரை விளக்கமறியல் விதிக்கப்பட்டது. 15 வயதுடையவர் ஆள்பிணையில் செல்லஅனுமதிக்கப்பட்டார். (ற26)

# மரமுந்திரிகைத் தோட்டத்தை விடுவிக்க வேண்டும் ராணுவம்

## கிளிநொச்சி மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, மார்ச் 2

பல்லவராயன்கட்டில் உள்ள மரமுந்திரிகை (கஜு) தோட்டத்தின் முழு பயனையும் இராணுவத்தினரே அனுபவிக்கின்றனர். அந்த தோட்டத்தை வடக்கு மாகாண சபை பொறுப்பேற்று, அதன் முலம் எமக்கு வேலைவாய்ப்புக்களை வழங்க வேண்டும்.

இவ்வாறு கிளிநொச்சி பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

"விடுதலைப் புலிகளினுடைய காலத்தில் இந்தத் தோட்டம் உருவாக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டது. அதில் பலர் வேலை செய்தார்கள். அதில் கிடைத்த வருமானத்தில் குடும்ப சுமையை ஓரளவேனும் தீர்க்கமுடிந்தது. போர் முடிவுற்றபோது ஆயிரம் ஏக்கருக்கு மேல் உள்ள இந்தகஜுதோட்டத்தைமுழுமையாகஇராணுவத்தினர்அபகரித்தனர். அதன் வருமானங்களை அவர்களே அனுபவிக்கின்றனர்.

நாங்கள் மீள்குடியமர்த்தப்பட்டு 7 வருடங்கள் கடந்து விட்டன. தோட்டத்தைஇராணுவத்தினர்விடுவிக்கவில்லை

10 அல்லது 20 ஏக்கரில் தோட்டங்களை உற்பத்தி செய்கின்ற மரமுந்திரிகைகூட்டுத்தாபனத்தினர்அவற்றின் மூலம் கூடிய வருமானத்தை பெற்றுக் கொள்கின்றார்கள், வேலைவாய்ப்புக்களை வழங்குகின்றார்கள். ஆயிரம் ஏக்கருக்கு மேல் உள்ள இந்த தோட்டத்தின் வருமானம்எவ்வளவாகஇருக்கும் என்பதைமரமுந்திரிகைகூட்டுதாபனத்தினர் அறிவார்கள்.

இங்குள்ள இளைஞர், யுவதிகள், மற்றும்பெண்களைதலைமைத்துவமாகக் கொண்ட குடும்பத்தினர் வேலைவாய்ப்புக்கள் இன்றி அலைந்துதிரியும்நிலையில்இவ்வளவு பெரிய வேலைவாய்ப்பு தளம் இராணுவத்தினரின்கட்டுப்பாட்டுக்கள் இருப்பதை அனுமதிக்க முடியாது.

வடக்கு மாகாண சபை அல்லது பொது அமைப்புக்கள் அதைப் பொறுப்பேற்று எமக்கான வேலைவாய்ப்புக்களை வழங்க வேண்டும். சாதாரண மக்களுடைய காணிகளைக் கூட இது வரை விடுவிக்காத இராணுவம், இவ்வளவு வருமானத்தை ஈட்டித்தரும் இந்த காணியைத் தாமாக விடுப்பார்கள் என்பது சாத்தியமற்றது. அரசியல் தலைவர்கள்,பொதுஅமைப்புக்கள் என அனைவரும் இதற்கான நடவடிக்கைகளைமுன்னெடுக்கவேண்டும்" -என்று அவர்கள் தெரிவித்தனர்.

"இராணுவத்தினரின்கட்டுப்பாட்டில் உள்ளகாணிகள் இதுவரை அளவிடப்படவில்லை. அந்தக்காணிகளை ஒப்படைக்க வேண்டும் - என்ற மரமுந்திரிகை கூட்டுதாபனத்தினர் இராணுவத்தினரை கோரியுள்ளனர். பல கூட்டங்களில் இது தொடர்பாக கதைக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புஅமைச்சருக்கும்தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்றுவரைதீர்க்கமான முடிவுகள் எவையும் இல்லை. பூநகரி பிரதேச செயலாளர் எஸ். கிருஸ்னேந்திரன் தெரிவித்தார். (ற21)

# மாணவன் விபத்தில் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 2

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் யாழ்பாணத்தைச் சேர்ந்த பல்கலைக் கழக மாணவன்உயிரிழந்துள்ளார்.

நயினாதீவைச் சொந்த இடமாகக்கொண்டவரும், தற்போது கொழும்பில் வசித்து வரும், ராஜரட்ட பல்கலைக் கழக மாணவனான தவகுலரத்தினம் ரகுராம் (வயது -24) எனும் மாணவனே உயிரிழந்தார்.

சக மாணவனுடன் மோட்டார்சைக்கிளில்பயணித்தபோது, வீதி வளைவொன்றில் மோட்டார் சைக்கிள் வேக கட்டுப்பாட்டை இழந்து விபத்து ஏற்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-5-37)

# தமிழ் பாட ஆசிரியருக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் வட மாகாணத் தமிழ்ப் பாடசாலைகளில் க.பொ.த. உயர்தரவகுப்புகளில் தமிழ்ப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் புதிய பாடத்திட்டத்துக்கான வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளது.

கருத்தரங்கு எதிர்வரும் 4ஆம், 5ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப்பல்கலைக் கழக வணிக முகாமைத்துவ பீட மண்டபத்தில் காலை 8.30 மணி தொடக்கம்பிற்பகல்2மணி வரைநடைபெறவுள்ளது. பல்கலைக்கழக ஓய்வு நிலைப் பேராசிரியர்கள், பேராசிரியர்கள்,விரிவுரையாளர்கள்வளவாளர்களாகக் கலந்துகொள்கின்றனர். (ற)

# வாழ்வாதாரத்துக்கு அந்தரிக்கும் ஜெயபுரம் கிராமம்

கிளிநொச்சி, மார்ச் 2

விவசாயம்செய்வதற்குநிலம்இருந்தும் விவசாயம் செய்ய முடியாத நிலையில் உள்ளோம். கடந்த 36 ஆண்டுகளாக 548 குடும்பங்கள் பசி, பஞ்சத்தின்மத்தியிலேயேவாழ்கின்றன. எம்மைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுங்கள்.

இவ்வாறு கிளிநொச்சி, ஜெயபுரம் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

"தொடர்ந்து இடப்பெயர்வுகளைச் சந்தித்துமீள்குடியமர்த்தப்பட்டோம். விவசாய நிலங்கள் காடுகளாகியுள்ளன. விவசாயம் செய்ய முடியாத நிலைமை. வேலைவாய்ப்புக்களும் இல்லை. இங்குள்ள மக்கள் வாழ்வாதாரத்தைக் கொண்டு நகர்த்துவதுபெரும்பாடாகவுள்ளது"-என்று கூறுகின்றார் ஜெயபுரம் கிராம அபிவிருத்திச்சங்கத்தலைவர்பால்ராஜ்.

"ஜெயபுரத்தில் 1984ஆம் ஆண்டு நாங்கள் குடியமர்த்தப்பட்டோம். குடும்பத்துக்கு ஒரு ஏக்கர் வீதம் மேட்டுநிலக்காணிகள்எமக்குபகிர்ந்தளிக்கப்பட்டது. அவை காடுகளாக இருந்தன. காணிகளைத் துப்புரவு செய்யும் முயற்சிகளில் இருந்தபோது நாட்டில் பிரச்சினை ஆரம்பித்தது.

1986ஆம் ஆண்டு ஒரு குடும்பத்துக்கு 3ஏக்கர்வீதம்மேட்டு நிலக் காணிகள் வழங்கப்பட்டன. அவையும் காடுகளாகவே இருந்தன. அவற்றைத் துப்புரவு செய்து விவசாயம் செய்ய முயற்சித்தோம். ஆனால் தொடர்ந்து இடம்பெயர்வுகள் வந்தன.

இடம்பெயர்ந்தநாம்மீண்டும்திரும்பும்போதுதுப்புரவாக்கிய காணிகள் மறுபடியும் காடுகளாகிவிடும். விவசாயம் செய்ய முடியாது போனது. இறுதிப் போர் முடிந்து நாங்கள் மீள் குடியமர்த்தப்பட்டு 8 ஆண்டுகள் ஆகின்றன. தற்போதும்எமதுகாணிகளில் விவசாயம் செய்ய முடியாத நிலைமையே உள்ளது.

1990ஆம் ஆண்டு ஏற்பட்ட பிரச்சினையால் பலர் காணிகளைக் கைவிட்டு இந்தியா சென்றனர். அவர்களது காணிகள் பெரும் மரங்கள் வளர்ந்து காடாகியுள்ளன. இங்குள்ள ஒருவர், காணி முதலாம் இலக்கக் காணியில் விவசாயம் செய்வார். இங்குள்ள மற்றொருவரின்காணி40ஆவதுகாணியாகவிருக்கும். இடையே உள்ள காணிகளின் சொந்தக்காரர்கள் இந்தியா சென்றிருப்பர். காணிகள் காடுகளாகியிருக்கும். அவற்றைத் தாண்டிச் சென்று விவசாயம் செய்வது இயலாத காரியம். இதுவே எமக்குப் பெரும்பிரச்சினையாகவுள்ளது.

மேட்டுநிலங்களிலும் விவசாயம் செய்யமுடியவில்லை. காட்டுவிலங்குகள் அழிக்கின்றன. காடுகளுக்குள்செல்லஇராணுவம்தடைவிதிக்கின்றது. மிதிவெடிகள் உள்ளன என்கின்றனர்.

விவசாயநடவடிக்கைகள்தடைப்பட்டதால் ஜெயபுரம் குளமும் சிதிலமடைந்துள்ளது. குளம்தூர்வாரப்பட வேண்டும்.

தொடர்ச்சியாக உள்ள காணிகளை இங்குள்ளவர்களுக்குத் தந்தால் விவசாயம் செய்ய முடியும். இது தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் கோரினோம். இதுவரை பதில் இல்லை. இந்தக்கிராமத்தில்எந்தவிதமான தொழில் வாய்ப்புகளும் இல்லை. நாம் பசியாலும், பட்டினியாலும்வாடுகின்றோம்.

சிலர் நகரங்களுக்கு தொழில் செய்யச் செல்கின்றனர். முதியவர்கள் பிச்சை எடுக்கின்றனர். சமுர்த்திக் கொடுப்பனவுஒன்றேஇங்குள்ளவர்களுக்கு வருமானம்.

எமது பிரச்சினைகள் தொர்டர்பாக அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியுள்ளோம்.

இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. இங்கிருந்து இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எமக்குஉதவிகளைவழங்குங்கள். சிறிய கிராமம் என்று எண்ணி உதவிகள் வழங்காது விட்டுவிடா தீர்கள்" என்று -கிராம மக்கள் கண்ணீருடன் கோரிக்கை விடுத்தனர்.

"நீண்டகாலமாகஇந்தப்பிரச்சினை இருக்கின்றது. அவர்களுக்கான வயல்காணிகள்தற்போதுபிரித்துக் கொடுக்கப்படவில்லை.

ஆரம்பகாலத்தில் காணிகள் பகிரப்பட்ட வரைபடம் தற்போது நில அளவைத்திணைக்களத்திடம்இல்லை. உரிய இடங்களை அடையாளம் காண முடியாதுள்ளது.

அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் மிதிவெடிகள் அகற்றும் பணிகளும் நடைபெறுகின்றன. மிதிவெடிகள்அகற்றப்பட்டுள்ளனஎன்று கூறப்பட்டாலும்,அதற்கானசான்றிழ் எமக்கு வழங்கப்படவில்லை.

சான்றிதழ் வழங்கப்பட்டால் நாங்கள் காணிகளின் விவரங்களைக் கொண்டு,மக்களைநேரில்அழைத்துச் சென்று அடையாளம் காண முடியும்.

அந்தக் கிராம மக்கள் விவசாயம் மேற்கொள்ள முடியாததால் பாதிப்படைந்துள்ளார்கள். இது தொடர்பாக அறிவித்துள்ளேன். தற்போதுநடைபெறும் கூட்டங்களிலும் சுட்டிக்காட்டுகின்றேன்-" என்று-பூநகரிப் பிரதேசசெயலாளர்எஸ். கிருஸ்னேந்திரன் தெரிவித்தார். (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சரவை அங்கீகரித்தும்

# கிழக்குத் தொண்டராசிரியர் நியமனம் தொடர்ந்து தாமதம்

அமைச்சரவைத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு ஒரு மாதம் கடந்தும்கூட கிழக்கு மாகாணத்தில் பணியாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நடவடிக்கை தாமதமடைவதாக அம்பாறை மாவட்டச் சுயாதீன தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் எம்.பௌசர் தெரிவித்தார்.

இதனால் பலர் அந்த நியமனத்தைப் பெறுகின்ற வாய்ப்பை இழக்கும் அபாயம் காணப்படுவதாகவும், இதனைக் கிழக்கு மாகாண முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்தில் கடந்த இருபது வருடகாலமாக பல்வேறு கஸ்டங்களுக்கு மத்தியில் மிகவும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்ற 445 தொண்டர் ஆசிரியர்கள் தமக்கான நிரந்தர நியமனத்தை பெரும் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளனர்.

நியமனம் வழங்கும் நடவடிக்கை இன்னும் தாமதமடையுமானால் பலர் உரிய வயதெல்லையைக் கடந்து, கைசேதமடைய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படலாம்.

ஆகையால் தாமதங்கள், இடர்பாடுகள் எல்லாம் களையப்பட்டு, தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் நடவடிக்கைகளை மத்திய மற்றும் மாகாண அரச நிர்வாகத்தினர் துரிதப்படுத்தவேண்டும் என்றார். (த-ய)

# தமிழரின் தாயகத்தை ராணுவ மயமாக்கவே ஐ.நாவிடம் அவகாசம் கோருகின்றது அரசு

## பிரான்ஸ் தமிழர் உரிமை மையம் குற்றச்சாட்டு

ஜெனிவா, மார்ச். 2

வடக்கு கிழக்கைச் சிங்கள மயமாக்குவதற்கும் இராணுவ மயமாக்குவதற்குமே இலங்கை அரசு கால அவகாசம் கோருகின்றது. இவ்வாறு பிரான்ஸ் தமிழர் உரிமை மையத்தின் செயலாளர் ச.வி.கிருபாகரன் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர நேற்று முன்தினம் உரையாற்றியிருந்தார். அது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே கிருபாகரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் மங்கள சமரவீரவின் உரை கற்பனைகள் நிறைந்த கட்டுக் கதைகள். இந்த உரை நாடுகள்.சிலவற்றுக்கு இனிப்பாக இருக்கலாம். ஆனால் தமிழ் மக்கள் இதனை நம்பமாட்டார்கள்.

இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியான எந்தத் தீர்வையும் தந்துவிடப்போவதில்லை. வடக்குகிழக்கைச் சிங்கள மயமாக்குவதற்கே அவர்கள் கால அவகாசம் கோருகிறார்கள் என்றார். (த-5)

களுத்துறைச் சூட்டுச் சம்பவம்:

# கொள்ளையிடப்பட்ட வாகனத்தின் மூலமே தப்பினர் ஆயுததாரிகள்

கொழும்பு, மார்ச். 2

களுத்துறையில் சிறைச்சாலைப் பேருந்து மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட ஆயுததாரிகள் தப்பிச் செல்வதற்குப் பயன்படுத்திய வாகனம், கொழும்பில் கொள்ளையிடப்பட்டது என்பதைப் பொலிஸார் விசாரணைகளில் கண்டறிந்துள்ளனர்.

களுத்துறைச்சிறைச்சாலைப் பேருந்து மீது தாக்குதல் நடத்திய சந்தேக நபர்கள் தப்பிச் சென்ற வெள்ளை நிற வான் ஹொரணை மொரகஹாஹென பகுதியில் பொலிஸாரால் நேற்று முன்தினம் மீட்கப்பட்டது.

இந்த வாகனம் ஜனவரி மாதம் 6 ஆம் திகதி மருதானைப் பகுதியில் வைத்துக் கடத்தப்பட்டது என்பதோடு வாகனத்தின் உரிமையாளர் திருகோணமலையைச் சேர்ந்தவர் என்பதும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் களுத்துறை வடக்குச் சிறைச்சாலையில் இருந்து கடுவலை நீதிவான் மன்றுக்குப் பாதாள உலகக் கோஷ்டி சந்தேக நபர்களை ஏற்றி வந்த சிறைச்சாலைப் பேருந்து மீது களுத்துறை, மல்வத்த எத்தனமடல பகுதியில் வைத்து சரமாரியான துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில் 5 சந்தேகநபர்களும், இரண்டு சிறைச்சாலை உத்தியோகத்தர்களும் உயிரிழந்திருந்தனர்.


துப்பாக்கிச் சூட்டை நடத்திய ஆயுததாரிகள், கெப் ரக வாகனத்தில் வந்து தாக்குதலை மேற்கொண்டுவிட்டு வெள்ளை நிற வானில் தப்பிச் சென்றனர். சம்பவ இடத்தில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட கெப் ரக வாகனமும் கொள்ளையிடப்பட்ட வாகனம் எனவும் இதன் உரிமையாளர் அத்துருகிரிய பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (த-5)

# நீதிமன்றில் ‘பெப்ரவரி 30’ முன்னிலையாக உத்தரவு

## போக்குவரத்துப் பொலிஸார் வழங்கிய உத்தரவால் பரபரப்பு

கொழும்பு, மார்ச். 2

கடந்த சில நாள்களுக்கு முன்னர் கிராண்ட்பாஸ் பகுதியைச் சேர்ந்த முச்சக்கர வண்டிச் சாரதி ஒருவர் பொரளையிலிருந்து தனது முச்சக்கர வண்டியைச் செலுத்தியுள்ளார்.



வீதி விதிமுறைகளைச் சாரதி மீறியதால் நீதிமன்றத்தில் பெப்ரவரி 30 ஆம் திகதி முன்னிலை யாகுமாறு போக்குவரத்துப் பொலிஸார் உத்தரவுப் பத்திரம் வழங்கியுள்ளனர்.

பொலிஸார் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதியுடன் நிறைவடையும் என்ற சாதரண விடயத்தை மறந்து கவனவீனமாகச் செயற்பட்டதால் முச்சக்கரவண்டிச் சாரதி பொலிஸாரின் உத்தரவுப் பத்திரத்தை சமூக வலைத்தளங்களில் பதிவு செய்துள்ளார்.

சமூகவலைத்தளங்களில் இது வைரலாகப் பரவி வருகின்றது. (த-5)

# விமல்ராஜ் சூட்டுச் சம்பவம்; சந்தேகத்தில் ஒருவர் கைது

கொழும்பு, மார்ச். 2

மட்டக்களப்பு மாவட்டக் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நேசகுமார் விமல்ராஜ் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகச் சந்தேகிக்கப்படும் நபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்பு ஏறாவூர் பகுதியில் வைத்துச் சந்தேக நபரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் மட்டக்களப்பு மாவட்டச்செயலகத்தில் பணிபுரிபவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் களுவாஞ்சிக்குடி நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். 48 மணித்தியாலங்களுக்குக் காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பி த்துள்ளது.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் மட்டக்களப்பில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. இவர் மீதான தாக்குதலைக் கண்டித்து அரச அலுவலகங்களில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (த-5)

# கண்டிப்புடனான அவகாசமே இலங்கைக்குக் கிடைக்கும்

## கிழக்கு விவசாய அமைச்சர் தெரிவிப்பு

செங்கலடி, மார்ச் 2



மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமான சட்டமீறல்கள் தொடர்பில் இலங்கை அரசின் பொறுப்புக்கூறலை மையப்படுத்தி ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்குக் கால அவகாசம் கொடுக்கவேண்டிய நிலமை வந்தால் அது மிகவும் கண்டிப்பான நிபந்தனைகளுடன் கூடியதாகவே இருக்கும்.

இவ்வாறு தமிழசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், கிழக்கு மாகாண விவசாய அமைச்சருமான கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வந்தாறுமூலை விஸ்ணு மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் அதிதியாகக்கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர்இவ்வாறுகுறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமற்போனவர் தொடர்பில் விடையளிக்காதிருப்பது என அனைத்து விடயங்களிலும் எமக்கெல்லாம் ஆத்திரம் வருகின்றது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை ஒருதீர்வைப் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கை உள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையில் அரசின் வேண்டுகோள் தொடர்பான விடயங்கள் தற்போது ஆராயப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அரசு இன்னும் கால அவகாசம் வேண்டி நிற்கிறது. கால அவகாசம் வழங்கக்கூடாது என்பது எங்களது முடிவு. இந்த விடயத்தில் அரசு தோல்வியடையவேண்டும் என்பது எங்கள் இலக்கல்ல. யதார்த்த நிலைமையின் அடிப்படையில் இன்னும் அழுத்தங்களைக் கொடுத்து காரியங்களைச் சாத்தியமாக்கவேண்டியதே எங்களது இலக்காகும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தென்பகுதி மக்களுக்கு எடுத்துச் செல்லும் நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டுவருகிறோம். இன்னும் அவற்றை விரிவாக்குவோம். இதற்கான மூலோபாயத்தை நாங்கள் விரைவில் வகுக்கவிருக்கின்றோம் என்றார். (த-ய47)

# கருணாவைக் கொல்ல புலிகளே முயற்சியாம்

## அவரே இப்படிச் சொல்கிறார்

கொழும்பு, மார்ச். 2

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகள் தன்னைக் கொலை செய்ய முயற்சிப்பதாக முன்னாள் பிரதி அமைச்சர் கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மறுவாழ்வு அளிக்கப்பட்டுச் சமூகத்துடன் மீள இணைக்கப்பட்ட முன்னாள் போராளிகளில் சிலர் என்னைக் கொலை செய்ய முயற்சிக்கின்றனர். அண்மையில் இவ்வாறு முயற்சி மேற்கொண்ட புலி உறுப்பினர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.



எனது பாதுகாப்புக்கு மேலும் சில பொலிஸ் அதிகாரிகளை வழங்குவது பொருத்தமானது. மட்டக்களப்பில் என்னைக் கொலை செய்ய முயற்சித்த முன்னாள் போராளி மறுவாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர். அது மட்டுமல்ல என்னைக் கொலை செய்ய இன்னும் சில முன்னாள் போராளிகள் திட்டமிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் நான் இந்த நாள்களில் மிகவும் அவதானத்துடன் இருக்கின்றேன்.


எனது பாதுகாப்புக்கு நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் வழங்கப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை போதுமானதல்ல. குறைந்தபட்சம் இன்னும் மூன்று, நான்கு உத்தியோகத்தர்கள் வழங்கப்படவேண்டும். எனக்குப் பாதுகாப்பு வழங்குமாறு அரச தலைவர் மைத்திரிபால மற்றும் தலைமை அமைச்சர் ரணிலிடம் கோருகின்றேன்.

நான் தவறுகளில் ஈடுபடுவதில்லை. எனக்கு மக்களுக்குச் சேவையாற்றும் நோக்கம் மட்டுமே உண்டு. அவர்கள் சிங்களவர்களா? முஸ்லிம்களா? தமிழர்களா? என நான் பார்ப்பதில்லை. அனைவருக்கும் சேவையாற்றவேண்டும் என்பதே எனது நோக்கமாகும் என்றார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.எஸ்ஸுக்கு பயிற்சியளித்தவர் ஆஸ்திரேலியாவில் கைதானார்

சிட்னி, மார்ச் 2
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு ஏவுகணைப் பயிற்சியளித்தவர் என்ற சந்தேகத்தில் ஆஸ்திரேலியப் பொலிஸார் நேற்றுமுன்தினம் ஒருவரைக் கைதுசெய்தனர்.
42 வயதான அந்த நபர், ஏவுகணைகளைக் கண்டறிவது எப்படி மற்றும் சொந்தமாக ஏவுகணைகள் உருவாக்குவது எப்படி? என ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு கற்றுக் கொடுத்தார். ஏவுகணை தொழில்நுட்பங்கள் குறித்து ஆராய்ச்சி செய்தார் என பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ம)





# அன்று வாடிவாசலுக்காக இன்று நெடுவாசலுக்காக

சென்னை, மார்ச் 2
இயற்கைஎரிவாயு எடுப்பதற்கு இந்தியமத்தியஅரசுவழங்கிய அனுமதியை திரும்பப் பெற வேண்டும்என்றுவலியுறுத்தி பல்லாயிரக் கணக்கான மக்கள் இணைந்து 15 ஆவது நாளாக நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
தமிழகம் புதுக்கோட்டை மாவட்டம்நெடுவாசல்கிராமத்தில் இயற்கை எரிவாயு எடுப்பதற்கு இந்திய மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டால் நெடுவாசல் கிராமத்தின்நீர்வளம்,விவசாய நிலங்கள் ஆகியன பாழாகும் என்ற அச்சம் உள்ளதால் திட்டத்தை திரும்பப் பெறவேண்டும்என்றுவலியுறுத்தி, மக்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். சுழற்சி முறையில் உணவு ஒறுப்பும் நடைபெற்றுவருகிறது.

### மக்களுடன் இணைந்து இளைஞர்கள் களத்தில்

நெடுவாசல் மக்களின் கருத்துக்களுக்குதமிழகஇளைஞர்கள் தமது ஆதரவை சமூக வலைத்தளங்களில் தெரிவித்ததுடன் மட்டுமல்லாமல், ஜல்லிக்கட்டுபோராட்டத்தில்ஈடுபட்டதைப் போன்று நேரடியாக களமிறங்கியுள்ளனர். இதனால் நாளுக்குநாள் போராட்டம் மேலும் வலுப்பெற்று வருகிறது. மாலைப்பொழுதுகளில் மாணவர்களும் களத்துக்கு நேரில் சென்று தமது ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர்என்றுஇந்தியஊடகங்கள் குறிப்பிட்டன.

### மண்வெட்டிகளுடன் ஊர்வலங்கள்

திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டால் விவசாய நிலங்கள் அழிவடையும்என்பதைவலியுறுத்தும் விதமாக நூற்றுக் கணக்கான விவசாயிகள் இணைந்து நெடுவாசல் கிராமத்தில் மண்வெட்டிகளுடன் ஊர்வலமாகச் சென்று தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

### பெரும் ஆதரவு

மக்களின் அறப்போராட்டத்துக்கு திரையுலகின் முக்கிய புள்ளிகள் தமது ஆதரவைத் தெரிவித்தனர். தி.மு. கழகத்தின் செயல் தலைவரும், தமிழக சட்டசபையின் எதிர்க்கட்சித் தலைவருமான மு.க. ஸ்டாலின், சீமான், வைகோ உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் அரசியல் அடையாளங்கள் கட்சிப்பேதங்களைத் துறந்துபோராடபச்சைக்கொடி காட்டியுள்ளனர்.

### நேற்றுக் கடையடைப்பு

நெடுவாசலில்எரிவாயுஎடுக்க மத்திய அரசு அளித்துள்ள அனுமதியை திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்தி, புதுக்கோட்டை மாவட்டத்தில் நேற்றுகடையடைப்புநடத்தப் பட்டது.

### மெரினாவில் பொலிஸார் குவிப்பு

ஜல்லிக்கட்டின் மீதிருந்த தடையை நீக்க வேண்டும் என்றுவலியுறுத்தி சென்னை - மெரினா கடற்கரையில் லட்சக்கணக்கான இளைஞர்கள் ஒன்றுதிரண்டுபோராட்டத்தில் ஈடுபட்டனர்.
அதேபோல் நெடுவாசலுக்கு ஆதரவாகவும் இளைஞர்கள் எழுச்சிபெறக்கூடும்என்றஅச்சத்தில் சென்னை மெரினா கடற்கரையில் நேற்றுடன் கடந்த மூன்று தினங்களாக பொலிஸ்பாதுகாப்பு போடப்பட்டது. (ம)

## வெடித்துச் சிதறுகிறது எட்னா எரிமலை

உரோம், மார்ச் 2
இத்தாலி நாட்டின் கிழக்கு சிசிலி தீவில் உள்ள எட்னா என்ற எரிமலை நேற்றுமுன்தினம் முதல் வெடிக்கத்தொடங்கியுள்ளது.
எரிமலையின் முகப்பில் இருந்து நெருப்பு குழம்பு பீறிட்டு வருகிறது. இந்த நெருப்பு பல மீற்றர் உயரத்துக்கு எழும்பிப் பாய்கிறது என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. எரிமலைவெடிப்பின்காரணமாக அந்தப் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள்பாதுகாப்பாகஇருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். எரிமலை சாம்பல் பறப்பது விமானப் போக்குவரத்தை பாதிக்கும் என்றாலும், அருகில் உள்ள காடானியாவிமானநிலையம்வழக்கம் போல இயங்கியது. (ம)

### மேற்கு மோசூல் போர்

## ஜாவ்சாக்பகுதியில் இருந்து மக்கள் முழுமையாக மீட்பு

பக்தாத், மார்ச் 2
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கும், ஈராக் அரச படைக்கும் இடையே ஈராக்கின் மோசூல் நகரின் மேற்குப் பகுதியில் நடைபெற்றுவந்த போர் உக்கிரமடைந்துள்ளது. மேற்குமோசூலின்முக்கிய இடங்களில் ஒன்றான ஜாவ்சாக் பகுதி ஈராக் அரச படையால்கைப்பற்றப்பட்டநிலையில், அங்கிருந்து மக்கள்பாதுகாப்பாகவெளியேற்றப்பட்டனர்என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன.
ஈராக், சிரியா நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி, அவற்றை ஒரு தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் இருந்த பல நகர்கள் மீட்கப்பட்டுவிட்டன. ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான மோசூல் ஐ.எஸ்ஸின்பிடியிலேயேஇருந்தது. இதன்கிழக்குப் பகுதி முழுவதுமாக மீட்கப்பட்டு விட்டது. மேற்குப் பகுதியைக் கைப்பற்றும் போர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஆரம்பித்தது. ஜாவ்சாகின்



பெரும் பகுதி நேற்றுமுன்தினம் கைப்பற்றப்பட்டு விட்டது என்று தெரிவிக்கப்பட்டது. இந்தநிலையில் அந்த இடம் முழுவதுமாக மீட்கப்பட்டு, அங்குள்ள மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு வருகின்றனர். எனினும் தமது ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்காக ஐ.எஸ். அமைப்பு தற்கொலைத் தாக்குதல்களை நடத்த எத்தனிக்கிறது என்றுஈராக்இராணுவம்தெரிவித்தது. (ம)

## சந்தேகநபர்கள்வடகொரியர்களே மீண்டும்முண்டுகிறதுதென்கொரியா



சியோல், மார்ச் 2
வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னின் அண்ணன்கிம்ஜோங் நாமின் கொலையில் கைதுசெய்யப்பட்டவர்களை விட 7 பேர் மீது மலேசியா சந்தேகம் முன்வைத்துள்ளது.
இந்த நிலையில் அவர்களில்நால்வர்வடகொரியர்கள் என்று தென்கொரியா தெரிவித்தது.
மலேசியாவின்கோலாலம்பூர் விமானநிலையத்தில், கடந்த 13 ஆம் திகதி திங்கட்கிழமை கிம் ஜோங் நாம் சடலமாகமீட்கப்பட்டார். இந்தக் கொலையின் பின்னணியில் இந்தோனேசியப் பெண் சிட்டி ஆய்சா, அவரது மலேசியக் காதலர், வியட்நாம் பெண் டொன் திஹவாங், வடகொரியாவைச் சேர்ந்த ரி ஜாங் சோல்நால்வரும்ஏற்கனவே கைதுசெய்யப்பட்டனர். வடகொரியத் தூதுவர் ஒருவருக்கும் தொடர்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இவர்களை விட இன்னும்7பேர்மீதுதமக்கு சந்தேகம் [illegible] என்று மலேசியாவின் தரப்பில் வெளிப்படுத்தப்பட்டது. இந்த நிலையில் அந்த 7 பேரில் நால்வர் வடகொரியர்கள் என்று தென்கொரியா குறிப்பிட்டது.
முன்னதாக, நாமைக் கொன்றவர் உன்னே. இதற்காக3குழுக்களை தென்கொரியஅதிபர்கிம் ஜோங்உன்அமைத்திருந்தார். இருகுழுக்கள் நாமைக் கொல்வதற்கும் ஒரு குழு ஏனைய இரு குழுக்களுக்கும் உதவிசெய்வதற்கும் என அவற்றை அவர் [illegible] தென்கொரியா [illegible] மாகத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஈராக் மீதான தடையை நீக்கினார் ட்ரம்ப்

வொஷிங்டன், மார்ச் 2
அமெரிக்காவுக்குள்நுழைவதற்கு ஈராக் நாட்டினருக்கு விதித்திருந்த தடையை தற்காலிகமாக நீக்கி உத்தரவிட்டார் ட்ரம்ப்.
ஈராக்கில்ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக அமெரிக்கா போராடிவரும்நிலையில் அந்த நாட்டைச் சேர்ந்த அகதிகளுக்குதடைவிதிப்பது நியாயமற்றது என்று எதிர்ப்பு வலுத்தது. இந்த நிலையில் ஈராக்மீதிருந்த தடையை நேற்று நீக்கினார்ட்ரம்ப். (ம)




சில இஸ்லாமிய நாடுகளைச் சேர்ந்த அகதிகள், பயணிகள் அமெரிக்காவில் நுழைய தடை விதித்து உத்தரவிட்டார் அதிபர் ட்ரம்ப். அவரது இந்த முடிவுக்கு எதிராக அமெரிக்காவின் அடையாளங்களில் ஒன்றான சுதந்திர தேவிச் சிலையில் அகதிகளுக்கு நல்வருகை என்று பொறிக்கப்பட்ட பதாகை ஒட்டப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# சட்டத்தின் விதிமுறைகளை மீறியே அனைத்து திறைசேரி உண்டியல்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

## நிதி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டு

நிதி மூலங்களைக் கையாளுதல் குறித்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள திறைசேரி உண்டியல் விநியோகமானது 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் மகிந்த ராஜபக்சவின் காலத்திலேயே அதிக அரச நிதி முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி பங்குகள் மற்றும் உண்டியல் பதிவு கட்டளை சட்டத்தின் விதிமுறைகளை மீறியதாகவே அனைத்து திறைசேரி உண்டியல்களும் விநியோகிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிக்கை மூலமாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

திறைசேரி உண்டியல் விநியோகம் தொடர்பில் விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை நிதி அமைச்சின் செயலாளர் சாட்சியம் அளித்த சந்தர்ப்பத்திலேயே இந்த விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ள தாகக் கூறப்படுகிறது.

பொறுப்புவாய்ந்த அதிகாரியொருவரின் கையொப்பம் இன்றி 2015 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி அவ்வேளையில் நிதி அமைச்சராக செயற்பட்ட மகிந்த ராஜபக்சவினால் வெளியிடப்பட்ட 1895.19 என்பதான அதி சிறப்பு வர்த்தமானி அறிவித்தல் தற்போதைய நிதி அமைச்சருக்கு கிடைத்துள்ள தகவலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தவிர,இந்த வர்த்தமானி வெளியீட்டின் போது பின்பற்ற வேண்டிய சட்ட நடைமுறைகள் கவனத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்றும் குறிப்பாக அமைச்சர் ஒருவரால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகளுக்குப் பதிலாக அரச கடன் செயலாளர் மத்திய வங்கியின் சட்டத்தரணிகளின் அங்கீகாரத்தை மட்டுமே பெற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை அச்சிடும் பொருட்டு நேரடியாகவே அரச அச்சகத்திற்கு அனுப்பியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்தநிலையிலே 2016 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி பெயர் குறிப்பிட்டு நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் அந்த வருடத்துக்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்காக அரச அச்சகத்திற்கு அனுப்பியுள்ளதாகவும், அதேபோன்று அனுப்பப் பட்ட 2017 ஆம் ஆண்டுக்கான வர்த்தமானி அறிவித்தல் அச்சிடப்படுவது உடனடியாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், பொறுப்புக் கூற வேண்டிய அதிகாரிகளுக்கு எதிராக பங்குகள் மற்றும் உண்டியல்கள் சட்டத்தின் கீழ் நட வடிக்கை எடுக்கப்படும் எனவும் நிதி அமைச்சின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. விசாரணைகள் நிறைவடைந்த பின்னர் முழுமையான அறிக்கையொன்றை வெளியிடுவதோடு ஏற்பட்டுள்ள தவறுகளை உடனடியாக திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நிதி அமைச்சு கூறியுள்ளது.

## முகநூல் நேரடிக் காணொலியில் புதிய மாற்றம் அறிமுகம்

உலகின் முன்னணி சமூகவலைத்தளப் பக்கமான முகநூலில் பதிவேற்றப்படும் நேரடிக் காணொலியில் 20 நொடிகளுக்கு விளம்பர இடைவேளை இடம்பெறுமென அதன் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதன்படி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் இடையே காண்பிக்கப்படும் விளம்பரங்கள் போன்றே இனி முகநூலில் பதிவேற்றப்படும் நேரடிக் காணொலிகளின் இடையேயும் விளம்பரங்கள் இடம்பெறு மெனக் கூறப்பட்டுள்ளது.

முகநூல் நிர்வாகத்தின் கொள்கையின் பிரகாரம் காணொலி ஆரம்பித்து 20 நொடிகளின் பின்பே விளம்பரங்கள் காண்பியம் பெறுவதுடன் இரண்டு விளம்பரங்களுக்கு இடையேயாக குறைந்த பட்சம் 2 நிமிட இடைவெளிகள் இருக்கும். பயனாளர் குறைந்தபட்சம் நான்கு நிமிட நேரடிக் காணொலியை பதிவேற்றம் செய்தால் மட்டுமே விளம்பர இடைவேளைகளைப் பெற முடியும். அதே நேரம் காணொலியைக் கண்டுகளிப்பதற்கு ஒரே நேரத்தில் 300 பார்வையா ளர்களாவது இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சேவையானது முதலில் அமெரிக்கா வில் குறிப்பிட்ட ஒரு குழுவினரிடையே பரிசோதித்துப் பார்க்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

நுட்பம்


# அந்தியேட்டியும் சபிண்டீகரண அழைப்பும்



அமரர்

## வீரகத்தி பிறைசூடி

பிறப்பு 16.09.1937 — இறப்பு 01.02.2017

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (03.03.2017) வெள்ளிக்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தத்தில் கலக்கப்படும். மறுநாள் 04.03.2017 சனிக்கிழமை நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

குடும்பத்தினர்.
சாத்தியத்தோட்டம்,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

(ஏ.ஜே.ஏ. சி.எஸ். 1509) (13.18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பட்டதாரிகள் சிந்திக்க வேண்டும்!

ரஞ்சித்குமார்

வேலை கேட்டுப் போராடும் பட்டதாரிகள் தனியன்கள் அல்லர். அவர்கள்எமதுநண்பர்களோ உறவினரோதான். இது வரை காலமும் கல்விக்கும் அதனை நிறைவேற்றுவதற்கும் அவர்கள் அர்ப்பணம்செய்தபொருளாதாரமற்றும்வாழ்வியல் தியாகங்களின் திரள் வெறுப்புணர்ச்சியே அவர்களை போராடத் தூண்டுகின்றது. பட்டம் பெற்றவர்கள் வேலையில் காலூன்றி வருமானத்தைப்பெறுபவர்கள்எவருக்கும்இது அநாவசியமான போராட்டமாகவே தோன்றும். வேலைபெற்றவர்கள் எல்லோரும் திறமைசாலிகள் என்றும் இல்லை. அவர்கள் வேலைகளைபெற்றுக்கொள்வதற்கானசூட்சுமங்களை இலகுவில் கண்டு பிடித்தார்கள். வெளிப்படையாகச் சொன்னால் வேலை கொடுத்தவர்களிடம் தங்கள் வேலைவாய்ப்பினை ஏதோ ஒரு வழியில் கைப்பற்றிக் கொண்டார்கள்.

அவ்வாறு வெற்றி பெற முடியாதவர்கள் செல்வாக்கு இல்லாதவர்கள் இன்று தெருவில் போராடுகின்றார்கள்.

வேலைவாய்ப்புதொடர்பில்அரசியல்ரீதியான முடிவுக்குகாத்திருப்பதன்விளைவுதான்இந்த போராட்டங்கள். ஆனால் வேலை வாய்ப்பு வழங்கப்படுதல் என்பது பொருளியல் சார்ந்த முடிவாகவே இருத்தல் வேண்டும். அதனை அரசியல்வாக்குக்காகஅரசியல்முடிவாகமாற்றிய திறமை எமது அரசியல் தலைவர்களைச் சாரும்.

தங்களின்வாக்குக்கானசரியானகளமாகவும் பிரச்சாரத்திற்கானஊடகமாகவும்வேலையில்லாதபட்டதாரிகளை அவர்கள் சரியாகப்பயன்படுத்தியிருந்தார்கள். அதில் கடினமாக உண்மையாக உழைத்தவர்கள் பலர் வேலை வாய்ப்பை பெற்றிருக்கின்றர்கள். அதில் பலர் இப்போதைய போராட்டங்களை வெறுப்பாக உற்று நோக்குகின்றார்கள். எனவே வேலை வாய்ப்புக் கேட்டு போராடுதல் அத்தகைய ஓர் அரசியல் கலாசாரத்தின் தொடர்ச்சியே.

தங்களின்வாக்குமற்றும்எண்ணிக்கையின் மீதுநம்பிக்கைகொண்டுதலைவர்களைமுடிவெடுக்க வைக்க முடியும் என்று அவர்கள் நம்புகின்றார்கள். குழுக்களின்ஆதரவில்தங்கி நின்று அவர்களின் பின்புலத்தில் வாக்குப் பெற்றுதலைவர்களாககாத்திருக்கும்அரசியல் கலாசாரம் உள்ளவரை இத்தகைய போராட்டங்கள்நீடிக்கும். இதுவிரைவில்முடிவுபெறாது.

## வேலை கொடு என்ற கோசம்

இவ்வாறிருக்க, பட்டாதரிகளின் போராட்டத்தையும்கோரிக்கைகளையும்பார்க்கும்போது அவையும்பழைமையானதாகவும்மரபுவழியிலும்தான்இருக்கின்றது. வெறுமனே'வேலை கொடு'என்றகோசம்மட்டுமேபோராட்டத்தை நியாயப்படுத்தப் போதுமானதல்ல. அரசாங்க வேலைவாய்ப்பை மட்டுமே வலியுறுத்துவது ஏற்றுக்கொள்ள கூடியதல்ல. பட்டம் பெற்றவர்கள் என்பதால் அரசு அவர்களுக்கு அரசில் வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்றுமில்லை.

வேலை கேட்டு நடத்தப்படும் போராட்டங்கள் வேலை வாய்ப்புக்காவே நடத்தப்பட வேண்டும். இதன்போதுதற்போதுஅரசாங்கதிணைக்களத்தில்காணப்படும்வெற்றிடங்கள், நிரப்பப்படாது வெற்றிடமாகவுள்ள பதவிகள் பற்றிய தரவுகளை முன்வைத்து அத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு போராட வேண்டும். அத்தகையபதவிகளுக்குத்தகுதியானபட்டதரிகள்எத்தனைபேர் உள்ளனர் என்ற தரவுகளை முன்வைக்க வேண்டும். அவ்வாறு தகுதியானவர்கள் இருக்கும் போது நிரப்பப்படாது இருப்பதை கேள்விக்குப்பட்டுத்த வேண்டும். கடந்த காலங்களில் முறையற்ற வகையில் வழங்கிய நியமனங்கள் பற்றிய தரவுகளை முன்வைக்க வேண்டும்.

மேலும், தனியார்துறையில்வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தக்கூடிய விடயங்கள் குறித்து அரசுக்கு பரிந்துரைகள் செய்ய வேண்டும். வேலைவாய்ப்புக்கேட்டுபோராடும்பட்டதாரிகள் சமூகம் இத்தகையதரவுகளைப் பேணுவதிலும் பரிந்துரைகளைச் செய்யவும்கடினமாகஉழைக்கவேண்டும். இதுதான் போராட்டத்திற்கு முதல் தகுதியாகும். மேலும் அத்தகைய தனியார் முதலீடுகளுக்குஅரசாங்கம்முட்டுக்கட்டை போடுமெனில் அதனை போராட்டத்தில் எதிர்க்கவேண்டும். இதுஎதுவும்இல்லாமல் பட்டம் பெற்றதால் வேலை கொடு என்றால் அது நியாமற்ற போராட்டமாகவே பார்க்கப்படும். (இந்தப் போராட்டத்தை அரசியல் தலைவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடும். வாக்குறுதி அளிக்கக்கூடும். அது வேறு கதை)

> "அரசநியமனங்கள் என்பது நாடு முழுவதினதும் பொருளாதாரத்துடன் தொடர்புபட்டது. ஒரு அரச நியமனம் வழங்கப்படுமாயின் அந்தப் பதவியின் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு, அவர் வழங்கும் சேவை மூலம், பங்களிப்புக் கிடைத்தல் வேண்டும். ஆனால் அத்தகைய தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற வகையில் நியமனங்கள் உருவாக்கப்படுவதில்லை.

## அரசநியமனங்கள்

அரச நியமனங்கள் என்பது நாடு முழுவதினதும்பொருளாதாரத்துடன்தொடர்புபட்டது. ஓர் அரசநியமனம்வழங்கப்படுமாயின்அந்தப்பதவியின்மூலம்தேசியபொருளாதாரத்திற்கு, அவர் வழங்கும் சேவை மூலம், பங்களிப்புக்கிடைத்தல்வேண்டும். ஆனால்அத்தகையதேசியபொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற வகையில் நியமனங்கள் உருவாக்கப்படுவதில்லை.

மாறாகமேற்சொன்னதுபோன்றுஅரசியல் ஆதாயத்திற்காகவே நியமனங்கள் உருவாக்கப்படுவதுண்டு. இது இறுதியில் யாரைப் பாதிக்கும்? தேசிய பொருளாதாரத்திற்குவரியாலும், தனதுசுயபொருளாதாரத்தாலும், தனியார் முதலீட்டாலும் நாட்டின் பொருளாதாரத்தை தாங்கிப் பிடிப்பவர்களுக்குத்தான் மேலும் சுமை அதிகரிக்கும். தேவைக்கு மேலதிகமாக அரச அதிகாரிகள் நிய மிக்கப்படின் இறுதியில் அந்த சுமைகளை அரசாங்கம் வரியால்தான் நிவிர்த்தி செய்யும். ஆகவே நாட்டின் பொருளாதாரத்திற்குப் பங்களிக்காத நியமனங்கள் ஏற்றுக்கொள்ளப்படலாமா? அதனை வரிசெலுத்துவோர் எதிர்க்கவே செய்வர்.

## பல்வேறு பரிணாமங்களில் போராட்டம்

ஆகவே பட்டதாரிகளின் போராட்டங்கள் வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதற்கும், வேலைவாய்ப்புக்களைவழங்குவதில் இருக்கின்ற ஊழல்களை எதிர்ப்பதாகவும், காலத்திற்கேற்ற திறன்களை ஊக்குவிக்க அரசைக் கோருவதாகவும் இருக்க வேண்டும்.

மேலும் அவர்கள் ஆதங்கப்படுவதைப் போன்று போட்டிப் பரீட்சைகளின்போது வீதாசாரத்தைக் கோருவதும் கூட ஏற்புடையதே. அத்துடன் "அரச வேலை வாய்ப்பு" என்றகனவிற்குள்மட்டும்நிற்காதுதொழில் முயற்சிகளுக்கு கடன் வசதி தருமாறு கோர வேண்டும். தொழில்சார் மேற்படிப்புக்கு புலமையளிக்குமாறு போராடவேண்டும். அத்துடன் குறைந்த ஊழியர்களைக் கொண்டு அதிக வேலையை வாங்கி பொது மக்களின்நுகர்வினால்அதிகஇலாபமீட்டும் தனியார் நிறுவனங்களுக்கெதிராகக்கூட, அங்கேவேலைவாய்ப்பைஅதிகரிக்குமாறும் அரசை அத்தகைய நிறுவனங்களுக் கெதிராக கொள்கை வகுக்குமாறு, சட்டமியற்றுமாறு கோரிக்கை விடுத்து போராட வேண்டும். இன்னுமொன்றைச் சொல்லப் போனால்காலமாற்றத்திற்கேற்றவகையில் வேலை பெற முடியாது எங்களைத் தெருவில் நிற்கச்செய்த கல்வியைக் கற்றுத் தந்த கல்விக் கட்டமைப்பையும் கண்டித்து மறுசீரமைக்க கோர வேண்டும்.

இந்தப்போராட்டத்தின் முடிவில்யாரோஒரு தலைவரோபிரதிநிதியோவந்துகோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளலாம். போராட்டம் ஏற்றுக்கொண்டதாக அறிவிக்கப்பட்டு பட்டதாரிகள் கலைந்து செல்லலாம். ஆனால் அடுத்து வரும் பட்டதாரிகளும் வீதியில் இறங்குவதைத் தடுப்பதற்கு நாம் போராடினோமா என்றால்...??

*கட்டுரையாளர்:*
*ஒரு சட்டத்தரணி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வீடுகளை உடைத்த படையினரே இழப்பீட்டையும் வழங்கவேண்டும்

பிலக்குடியிருப்பு மக்கள் தமது காணிகளைப் பார்வையிடுவதற்கு நேற்று அனுமதிக்கப்பட்டார்கள். போய்ப் பார்த்தவர்கள் எல்லோரும் சாவு வீட்டுக்குச் சென்று வந்தவர்கள் போன்று பரிதவித்துப் போயிருக்கிறார்கள். ஒரு மாதப் போராட்டத்திற்குப் பின்னர் மிகத் துன்பப்பட்டுத் தாம் மீட்டுள்ளது வெறும் கட்டாந்தரைதான் என்ற உண்மையை அவர்கள் உணர்ந்துகொண்ட தருணம் அது.

அவர்களின் வீடுகள், கடைகள் எல்லாமே அடித்து நொறுக்கப்பட்டு நாசமாக்கப்பட்டுவிட்டன. அவர்களின் அவல ஓலம் நெஞ்சை உருக்குகின்றது. காணிகளைப் பார்த்துவிட்டு வந்தவர்கள் வயிற்றிலும் மார்பிலும் அடித்துக் கொண்டு ஓலமிடுகிறார்கள்; துவண்டு கிடக்கிறார்கள்.

தமது காணிகளை விடுவிக்கக்கோரி, வீதியில் இறங்கி மக்கள் போராடியதன் பின்னரே இந்த வீடுகள் இடித்தழிக்கப்பட்டுள்ளன என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். மாடு மேய்ப்பதற்காக அந்தப் பகுதிக்குச் சென்று வந்தவர்கள் சில காலங்களுக்கு முன்னர் வரைக்கும் அங்கு வீடுகள், கட்டடங்கள் உருப்படியாக இருந்தன என்றும் மிக அண்மையிலேயே அவை இடித்தழிக்கப்பட்டிருக்கின்றன என்றும் சாட்சி சொல்கிறார்கள்.

அது உண்மையானால் (நம்புவதற்கு எல்லாவகையான நியாயங்களும் உண்டு) படையினர் மக்களைப் பழிவாங்கும் வகையில் நடந்துகொண்டனர் என்பது உறுதி. தமது காணிகளைத் திரும்பப் பெற அவர்கள் நடத்திய போராட்டத்துக்குத் தண்டனையாக அவர்களின் வீடுகளை உடைத்து நொறுக்கியிருக்கிறார்கள் அவர்கள்.

இது போர்க் குற்றத்திற்கு நிகரானது. அப்பட்டமான மனித உரிமை மீறல்.

பிலக்குடியிருப்பில் மட்டுமல்ல, யாழ்ப்பாணம் வலி. வடக்குப் பகுதியிலும் இதுவேதான் கடந்த காலங்களில் நடந்தது. அங்கும் மக்கள் தமது காணிகளைத் திரும்ப ஒப்படைக்கக் கூறிப் போராட்டம் நடத்தத் தொடங்கியதும் இருந்த வீடுகள், ஆலயங்கள், கடைகள், கட்டடங்கள் எனப் பலவற்றையும் இடித்து அழித்தார்கள்.

பொதுமக்களின் சொத்துக்களை நாசமாக்கிய இந்தச் செயல் பெரியளவில் கவனத்தைப் பெறவில்லை. காணிகள் விடுவிக்கப்பட்டதே பெரிய விடயம் என்பதால் இவற்றையெல்லாம் கண்டுகொள்ளாமலேயே விட்டுவிடலாம் என்ற எண்ணமும் மேலோங்குவதால் படையினரின் செயல்களை எவரும் கண்டிப்பதும் இல்லை. போர் இல்லாத சமயத்தில் பொதுமக்களின் சொத்துக்களை படையினர் இப்படித் திட்டமிட்டு வேண்டுமென்றே அழிப்பது இனப்படுகொலையின் ஓர் அங்கமல்லாமல் வேறெதுவாக இருக்க முடியும்?

ஒருபுறத்தில், நல்லிணக்கத்தை எப்படியாவது அடைந்தே தீருவோம் என்கிற நம்பிக்கை உள்ளது என்று அயலுறவுத் துறை அமைச்சர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் உரையாற்றுகிறார். மறுபுறத்திலோ, படையினர் மக்களைப் பழிவாங்கும் வகையில் அவர்களின் சொத்துக்களை அழிக்கிறார்கள். இத்தகைய நிலையில் நல்லிணக்கம் எப்படிச் சாத்தியமாகும்?

படையினரின் இந்த அடாவடியான போக்கை தமிழ் அரசியல்வாதிகள் அரச தலைவர்களின் கவனத்திற்குக் கண்டிப்பாக எடுத்துச் செல்லவேண்டும். படையினர் இப்படி இடித்தழித்த தமிழர்களின் சொத்துக்களுக்கான இழப்பீட்டை அவர்களிடம் இருந்தே அறவிட்டு மக்களுக்குக் கொடுப்பதுடன், சொத்துக்களை அழிக்க உத்தரவிட்ட படை அதிகாரிகள் மீது குற்றவியல் சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தவேண்டும். இந்த விடயத்தை இப்படியே விட்டுவிட முடியாது. வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி மக்கள் சிறுகச் சிறுகச் சேர்த்த சொத்துக்களை அநியாயமாக அழித்தவர்களைச் சுதந்திரமாக விட்டுவிடக்கூடாது. அது மிகத் தவறான முன்னுதாரணமாகிவிடும்.

# வல்லரசு நாடுகளது சூதாட்டப் போட்டியில் சிக்கித் தடுமாறும் இலங்கை அரசு!



சிவா செல்லையா

இலங்கையின் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பாந்தோட்டை துறை முகத்தையும், அதனைச் சூழவுள்ள 15,000 ஏக்கர் நிலப்பரப்பையும், சீன அரசு ஒரு வருட காலத்துக்கு 1.1 பில்லியன் டொலர் இலங்கை அரசுக்குக் குத்தகையாகச் செலுத்தி தன்வசம் வைத்து நிர்வகிக்கவுள்ளது. இதற்குக் காரணம், இலங்கை அரசு சீன அரசிடமிருந்து 2008இல் பெற்ற 300 மில்லியன் டொலர் கடனை இலங்கை அரசால் திருப்பிச் செலுத்த இயலாத நிலை ஏற்பட்டிருப்பதாகும். இலங்கை அரசுக்கு இந்தக் கடன் மிகப்பெரிய சுமையாக ஆகியிருக்கிறது. இந்தக் கடனில் பெருமளவு தொகை நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்புக்கான ஆயுத வெடிப்பொருள்கள் கொள்வனவுக்காகவே செலவிடப்பட்டிருந்தது. உலக வலுச்சமநிலையில் இலங்கை மீதான சீனாவின் பிடியைத் தளர்த்துவதற்குஐக்கிய அமெரிக்காவிடமோ, இந்தியாவிடமோ போதிய பணபலம் இல்லை. மேலும் புதிய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம் தனது நாட்டின் நிதியை முடிந்த வரை செலவழியாது. அதிக இலாபத்தைப் பெறுவதையே இலக்காகக் கொண்டு செயற்படும் ஒருவராவார்.

### தன்னல நோக்கில் உலக நாடுகளில் கால் பதிக்க முயலும் சீனாவின் போக்கு

[illegible] னால் விழுங்கப்பட்டு, சிங்கள பௌத்தத்துக்குப் போட்டியாகச் சீனபௌத்தமும் இலங்கையில் குறித்த அளவில் அதிகரிக்கும் சூழல் உருவாகவுள்ளது. சீனா, உலகில் தான் ஊடுருவும் நாடுகளில் சீன நகர் என்ற விதத்தில் சீனர்கள் பெருமளவில் ஒன்று கூடி வாழும் நகரமொன்றை உருவாக்குவது வழமை. அந்த வகையில் இலங்கையில் சுமார் 1 மில்லியன் சீனர்கள் குடியேறக்கூடிய அல்லது சுற்றுலா விசாவில் குடியமரக்கூடிய சூழல் மிக விரைவில் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்காக பொருளாதார முதலீடு என்ற வகையில், இவர்களால் 5 பில்லியன் டொலர்கள் முதலீடு செய்யப்படவுள்ளது.

இத்தகையதொரு நிலையில், இலங்கையில், சீனாவின் ஆதிக்க முயற்சியை முறியடிப்பதற்கான 'மறுத்தான்' செயற்பாடாக, புதிய அணுகுமுறையாக இலங்கையின் வடக்கு, கிழக்கு, மலையகத்தின் சில பகுதிகளை இணைத்து தமிழீழ அரசொன்றை உருவாக்க இந்தியாவும், அமெரிக்காவும் முனைப்புக் காட்டக்கூடும். இதன்மூலமே இந்தியாவின் தென்மூலையும், இந்தியக்கடலோரமும் பாதுகாக்கப்படக்கூடிய சூழல் உருவாகும். இலங்கையின் வடக்கு கிழக்கு எல்லையில் சீனாவைக் கட்டுப்படுத்துதல், பாக்கு நீரிணையில் அதனைக் கட்டுப்படுத்துவதை விட இலாபகரமான பாதுகாப்பு அணுகுமுறையாக அமையும்.

### இலங்கை மீதான சீனாவின் பிடிஇறுகாது தடுக்க முயலும் இந்தியாவும் அமெரிக்காவும்

இந்தியாவும், அமெரிக்காவும், தமக்கு விசுவாசமானதொரு அரசியல் கட்டமைப்பை இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் உருவாக்கத் தற்போது முனைப்புக் கொண்டுள்ளன. இலங்கையின் அரசியல் இராஜதந்திர அணுகுமுறை குறித்து ஏற்கனவே சந்தேகம் கொண்டுள்ள இந்தியாவும் அமெரிக்காவும், சீனாவுடன் இணைந்து இனிவரும் காலங்களில் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வரமாட்டா. மாறாக வடக்குக் கிழக்கில் எத்தகையதொரு ரூபத்திலாவது தமிழீழ அரசொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளையே அவ்விரு நாடுகளும் மேற்கொள்ளும். சீனாவின் தலையீட்டினாலேயே சூடான் நாடு, தென்சூடான், வட சூடான் எனப் பிரிந்தது. அதேபோல் சீனாவின் இலங்கை மீதான தலையீட்டினால், இலங்கையின் வடக்கும் தெற்கும் நிரந்தரமாகப் பிளவுபடுவதற்கான பன்னாட்டுச் சூழல் தற்போது தலையெடுத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சின்னம்மா சசிகலாவின் திருகுதாளங்களால் தமிழக அரசியலுக்குத் தலைகுனிவு

வந்தியத்தேவர்

சொத்துக் குவிப்பு வழக்கில் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 120பி.109, ஊழல் தடுப்புச் சட்டம் பிரிவு 13.1. மற்றும் 13.2 ஆகியவற்றின் கீழ் தண்டனை பெறக் கூடிய குற்றம் புரிந்துள்ளதாக முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதா மற்றும் அவரது சிநேகிதி சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோருக்கு நீதிபதி மைக்கல் குன்ஹா வழங்கிய தீர்ப்பை நீக்கம் செய்து, இலங்கையின் நீதிபதி சரத்சில்வாவுக்கு நிகரான நீதிபதி குமாரசாமி வழங்கிய தீர்ப்பை இந்திய உச்சநீதிமன்றம் நிராகரித்ததோடு, சம்பந்தப்பட்ட நால்வரும் குற்றவாளிகளே என்பதை உறுதிசெய்திருந்தது. ஜெயலலிதா மற்றும் அவருடன் குற்றம் சாட்டப்பட்டவர்கள் கிரிமினல் சதிச் செயல்களில் ஈடுபட்டவர்கள் எனவும் முன்னைய தீர்ப்பில் குன்ஹா சுட்டிக்காட்டியிருந்தார்.

ஜெயலலிதா சாவடைந்தபோது மொத்தத் தமிழகமுமே அவருக்காகக் கண்ணீர் வடித்தது. கட்சித் தலைவர்கள், பத்திரிகைகள், பொது அமைப்புக்கள் முதல் சமையல் அறையில் அடைந்து போயிருந்த அம்மாக்கள்வரை அவரைப்புகழ்ந்து தள்ளினர். அவரது சாவுக்காக அனுதாபப்பட்டனர்; கண்ணீர் சிந்தினர். இன்றுவரை அவர் குறித்து மதிப்பான எண்ணங்களே தமிழக மக்கள் மத்தியில் நிலவி வருகின்றன.

### சலுகைகளால் நோக்கத்தை நிறைவேற்றிய 'ஜெ'

காவிரி தந்த கலைச்செல்வியாக, நடிகையாக அவர் மின்னிய காலத்தை விட, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவியாக, தமிழக முதல்வராக உருவெடுத்த பின்னர் மக்கள் அவரைக் கொண்டாடும் அளவுக்கு ஏழைமக்களின் நலனுக்காக எந்த அளவுக்கு நன்மைசெய்தார் என்பது கேள்விக்குரியதே. ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைப்பதற்காக, அப்பாவி மக்களுக்கு தாலிக்குத் தங்கம், மிக்ஸி, கிரைண்டர், துவிச்சக்கர வண்டி, கணினி, அம்மா குடிதண்ணீர், அம்மா உணவகம், அம்மா மருந்தகம் என சலுகைகளை ஏற்படுத்திக் கொடுத்தன் மூலம் தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டார். ஒவ்வொரு தேர்தலின் போதும், தமக்கு ஏதாவது ஓர் இலவசம் கிடைக்கும் என எதிர்பார்த்த மக்கள், வேலைவாய்ப்புக்கள், சுகாதார வசதிகள், பள்ளிக் கல்வி போன்ற அத்தியாவசிய தேவைகள் குறித்து மறந்தவர்களாக வாழத் தலைப்பட்டனர்.

'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்ற ஜெயலலிதாவின் அறைகூவல் இன்றும் மக்கள் மத்தியில் பேசப்படுகிறது. அரசியல் ரீதியாக தமிழக மக்களுக்காக அவர் எதனையும் செய்ததாக இல்லை. மாறாக தி.மு.கவின் சமச்சீர் கல்வி, கலைஞர் காப்பீட்டுத் திட்டம், அண்ணா நூலகம், புதிய சட்ட மன்றக் கட்டடம் போன்றவற்றுக்கு ஜெயலலிதாவால் ஏற்படுத்தப்பட்ட இருட்டடிப்பு தமிழக மக்கள் அறியாததல்ல. இனவாத அரசால் ஈழத்தமிழ் மக்கள் படுகொலைக்கு உள்ளானபோது, போர் என்றால் மக்கள் சாவது வழமைதானே என திருவாய் மலர்ந்தருளியவர். செம்பரம்பாக்கம் ஏரிதிறப்பால் சென்னையே நீரில் மூழ்கி அ.தி.மு.க எம்.எல்.ஏக்களை மக்கள் தாக்கியபோது தாம்பாதுகாப்பாக இருந்து கொண்டவர், இந்த ஜெயலலிதா.

ஜெயலலிதாவின் சாவில் மர்மம் இருக்கலாம் என்ற சந்தேகம் தற்போது நிலவுகின்றது. ஒரு நீதிபதியே இதில் சந்தேகம் உள்ளதாகத் தெரிவித்ததாகத் தகவல்கள் கசிந்திருந்தன. நோய்வாய்ப்பட்டு அப்பலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நேரம் முதல், அவர் உயிர் துறக்கும்வரை மன்னார்க்குடி சசிகலாவைத்தவிர வேறு எவருமே, ஏன் தமிழக முதல்வராக பொறுப்பேற்றிருந்த பன்னீர்ச் செல்வம் கூட, ஜெயலலிதாவை நேரில் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. இரும்புப்பெண், ஆளுமை மிக்கவர் என்றெல்லாம் ஜெயலலிதா குறித்துப்பேசப்பட்டாலும் சசிகலாவின் பிடிக்குள் சிக்கிக் கொண்ட ஒருவராகவே அவர் இருந்துள்ளார். சட்ட சபை உறுப்பினர்களே காலில் விழுந்து வணங்கும் கலாசாரத்தை உருவாக்கிய அவர், தான் விரட்டித் துரத்திய சசிகலாவை மீண்டும் தன்னுடன் இணைத்துக் கொண்டாரெனில், இருவருக்குமிடையில் இறுக்கமான இரகசியங்கள் இருந்திருக்கவும் கூடும். என்றோ ஒரு நாள் தமிழக முதல்வராகத் தான் வர வேண்டும் என்ற எண்ணம் சசிகலாவிடம் முன்னரே இருந்திருக்கலாம். ஜெயலலிதாவுக்கு எத்தகைய சிகிச்சை வழங்கப்பட்டது என்பது குறித்த விடயங்கள் அனைத்தும் இன்னமும் மர்மமாகவே உள்ளன.

### சசிகலாவின் திருகுதாளங்கள்

இந்த நிலையில் அ.தி.மு.கவின் பொதுச் செயலாளர் பதவியை பறித்தெடுத்த சசிகலா, தமிழக முதல்வர் பன்னீர்செல்வத்தையும் மிரட்டி அவரை பதவி விலகச் செய்யவைத்து முதல்வராகப் பதவியேற்கக் கண்ட கனவை உச்சநீதிமன்றம் சொத்துக்குவிப்பு வழக்கின் தீர்ப்பால் தகர்த்தெறிந்து சிறைக்குள் தள்ளியுள்ளது.

மிரட்டிச் சொத்துக்களைச் சேர்ப்பதில் சசிகலாவுக்கு[illegible] சட்டப் பேரவை உறுப்பினர்களை அச்சுறுத்தி சிறைப்படுத்தி, தனக்குக் கிடைக்காத முதல்வர்பதவியை தனது எடுபிடி எடப்பாடி பழனிச்சாமிக்கு வழங்கச் செய்தவர். சசிகலாவின் இத்தகைய நடவடிக்கைகளினால் தமிழக மக்கள் விரக்தி நிலை கண்டுள்ளனர்.

சொத்துக்குவிப்பு வழக்கில் இருந்து தப்பிக் கொள்ளவும், அதை முழுக்க முழுக்க ஜெயலலிதாமீது சுமத்தி விடவும் சசிகலா வகுத்த சதித்திட்டம் அவரையே பழிவாங்கி விட்டுள்ளது. இப்போது எடப்பாடி பழனிச்சாமியையும் தூக்கி வீசிவிட்டு, தினகரனை தமிழக முதல்வராக்க முயற்சி மேற்கொள்ளப் படுவதாகக்கூறப்படுகிறது. தினகரனும் நடராசனும் வெளிநாட்டில் இருந்து கார் இறக்குமதி செய்த வழக்கு (2010) தீர்ப்புக்காகக் காத்திருக்கிறது. இந்த வழக்கின் தீர்ப்பும் தமிழகத்தை குடும்ப அராஜகத்தில் இருந்து காப்பாற்றும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

வீட்டில் இருந்தவர்களுடன் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறி ஜெயலலிதா கீழே தள்ளி விடப்பட்டு விழுந்ததால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாகவும் செய்திகள் பரவலாக உலா வருகின்றன.

உண்மையில் ஜெயலலிதாவுக்கு நடந்தது என்ன? அவர் கொலைசெய்யப்பட்டிருக்கலாம், சசிகலா அதற்குக் காரணமாக இருந்திருக்கலாம் என்ற சந்தேகமும் எழுப்பப்பட்டுள்ளது. தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் இது தொடர்பான விசாரணைகள் இடம்பெறும் என அதன் செயற் தலைவர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார். மொத்தத்தில் சின்னம்மா சசிகலாவால் தமிழ் நாட்டு அரசியல், உலகளாவிய ரீதியில் பேசுபொருளாக ஆகியுள்ளது என்பதே இன்றைய யதார்த்தம்.



## வாசகர் திருமுகம்

### ஆன்மிக நாட்டம் நலிவு நிலையில்தானா?

கடந்த வெள்ளிக்கிழமை சிவராத்திரியன்று அயலூருக்கு அலுவலொன்றுக்காகச் சென்றிருந்தபோது அந்த ஊரிலுள்ள சிறிய கோயிலொன்றில் இரவு சிவராத்திரி நித்திரை விழிப்புக்கான தடபுடல் ஏற்பாடுகளில் இளைஞர்கள் சிலர் ஈடுபட்டிருந்ததைக் காண நேர்ந்தது. அவர்களது ஏற்பாட்டின்படி அன்று மாலை முதல், அடுத்த நாள் காலை வரை தொடர்ச்சியாக தமிழ்த்திரைப்படங்களைத் பெரிய தொலைக்காட்சிப் பெட்டியில் ஒளிநாடா மூலம் ஒளிபரப்ப ஒழுங்குகள் முழுமையடைந்திருந்தன.

நான் பாடசாலையில் கற்ற கால கட்டத்தில் சிவராத்திரி தினத்தன்று யாழ்.நகரத் திரையரங்குகளில் மாலை முதல் விடியும் வரை மூன்று திரைப்படக் காட்சிகள் காண்பிக்கப்பட்டமையும், ஒரு சிவராத்திரியன்றிரவு நான் நண்பர்களுடன் மூன்று திரைப்படங்களைக் கண்டு களித்த நினைவுகளும் மனதில் நிழலாடின.

ஆன்மிக நாட்டத்தில் எமது இந்து மதத்தவர்களில் ஒரு சாரார் தற்போது நாட்டம் கொண்டு செயற்படுவதில்லை என்ற ஒரு சிலரது குற்றச்சாட்டிலும் உண்மை இல்லாமலில்லை என்றே கருதமுடிகிறது.

*பூ.பரமலிங்கம்*
*ஊரெழு*

### தீங்கெனத் தெரிந்து கொண்டும் தொடர்ந்திடுதல் தகுமாமோ?

யாழ்.மாவட்டத்தில் புற்றுநோயால் பாதிக்கப்படுவோரில் கணிசமானோர் புகையிலைப் பாவனைப் பழக்கம் உடையவர்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியிருந்தன. இதனை, குறித்த துறைசார் மருத்துவ நிபுணர்களும் தாம் வெளியிட்ட கருத்துக்கள் மூலம் உறுதிப்படுத்தியிருந்தனர்.

இதனைக் கருத்தில் எடுத்து யாழ்.மாவட்டத்தின் அடுத்த (இந்த )ஆண்டு முதல், புகையிலைச் செய்கையை முற்று முழுதாகத் தடை செய்யவுள்ளதாக தொடர்புடைய தரப்பினர்கள் கடந்து போன ஆண்டில் தெரிவித்ததாக ஞாபகம்.

யாழ்.மாவட்டத்தில் இந்த ஆண்டில் 1873 ஏக்கர்களில் புகையிலைச் செய்கை மேற்கொள்ளப்படுவதாக மாவட்ட விவசாயத் திணைக்களம் உறுதிப்படுத்தியிருந்தது. எமது சமூகத்துக்கு ஏற்படத் தக்க பாதிப்பைக் கருத்தில் கொண்டு எம்மவர்கள் புகையிலைப் பயிர்ச் செய்கையைத் தவிர்த்து, வேறு உப உணவுப் பயிர்ச்செய்கைகளில் நாட்டம் காட்டிச் செயற்படக் கூடாதா? அதேவேளை, மனித வாழ்க்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் புகையிலைப் பாவனையைக்கைவிட அந்தப் பழக்கமுடைய எம்மவர்கள் முயற்சித்தாலென்ன? எதற்கும் மனமிருந்தால் நிச்சயம் இடமுண்டு.

*அ.தில்லைநாயகம்*
*உடுவில்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | | | 9 | | | 3 |
| | 6 | | | 4 | | 8 | 2 | |
| 7 | | | 3 | 5 | | | | 4 |
| | | | 9 | | 2 | | 6 | |
| 2 | | 7 | | | | | | |
| | | | | | 3 | 1 | | |
| | | | 5 | 2 | | | 9 | |
| | | 8 | | 3 | | | | |
| | | | | | | | | 7 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 7 | 3 | 2 | 5 | 8 | 1 | 6 | 9 |
| 5 | 2 | 1 | 4 | 6 | 9 | 8 | 7 | 3 |
| 9 | 6 | 8 | 3 | 7 | 1 | 4 | 2 | 5 |
| 6 | 8 | 4 | 1 | 3 | 5 | 2 | 9 | 7 |
| 7 | 5 | 2 | 9 | 4 | 6 | 3 | 1 | 8 |
| 3 | 1 | 9 | 8 | 2 | 7 | 6 | 5 | 4 |
| 2 | 9 | 7 | 6 | 8 | 3 | 5 | 4 | 1 |
| 8 | 4 | 5 | 7 | 1 | 2 | 9 | 3 | 6 |
| 1 | 3 | 6 | 5 | 9 | 4 | 7 | 8 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** இலேசான பணியை நிறைவேற்றுவதில் தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி சுமாராக இருக்கும். மிதமான லாபம் கிடைக்கும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடு படுவர். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**இடபம்:** குடும்ப விடயத்தைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தைப் பாதுகாக்கவும். அளவான வருமானம் கிடைக்கும். உடல் நலத்துக்கு ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.

**மிதுனம்:** உறவினர்களின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபாரம் அபரிமிதமாக வளர்ச்சி பெறும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**கடகம்:** சமயோசிதமாகச் செயற்பட்டு வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள அளவில் பணவரவு கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். பணியாளர்களுக்கு விரும்பிய சலுகை கிடைக்கும்.

**சிங்கம்:** தகுதிக்கு மீறி எவருக்கும் வாக்களிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ப முன்னேற்றம் உண்டாகும். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம். உடல்நலத்துக்கு சிகிச்சை தேவைப்படலாம்.

**கன்னி:** குடும்பத்தினரின் ஆதரவால் முன்னேற்றம் உண்டாகும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அதிக உழைப்பு அவசியம். பணவரவு சுமாராக இருக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு மன அமைதிக்கு வழிவகுக்கும்.

**துலாம்:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் பாராட்டு வெகுமதி பெறுவர். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும். பெண்கள் ஆன்மிகச் சுற்றுலா செல்வர்.

**விருச்சிகம்:** நல்லவர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**தனுசு:** சமூகத்தில் அந்தஸ்து மிக்கவராக விளங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் அதிக லாபம் கிடைக்கும். பிள்ளைகளின் வழியில் தாராள மனதுடன் செலவு செய்வீர்கள். மாணவர்களுக்கு படிப்பில் சிறந்த தர தேர்ச்சி கிடைக்கும்.

**மகரம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில் அதிக மூலதனம் தேவைப்படும். லாபம் படிப்படியாக உயரும். குடும்ப ஒற்றுமையைக் காப்பாற்ற முயல்வீர்கள்.

**கும்பம்:** உற்சாக மனதுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலக்கு எளிதில் முழுமையாகும். சேமிக்கும் விதத்தில் ஆதாயம் கிடைக்கும். பெண்களுக்கு பொன், பொருள் சேரும். மாணவர்கள் படிப்பில் முன்னேறுவர்.

**மீனம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். பெண்களுக்கு வீட்டுத் தேவை தாராள செலவில் நிறைவேறும். அரசியல்வாதிகள் பதவி பெற அனுகூலம் உண்டாகும்.



# சிம்பு, தனுசுக்கு எதிராக களமிறங்குவாரா ஜெயம் ரவி?

'போகன்' படத்துக்குப் பிறகு ஜெயம் ரவி 'வனமகன்' படத்தில் நடித்து முடித்துள்ளார். அதனைத் தொடர்ந்து தற்போது 'நாய்கள் ஜாக்கிரதை' பட இயக்குநர் சக்தி சவுந்தர்ராஜன் இயக்கத்தில் 'டிக் டிக் டிக்' படத்தில் நடித்து வருகிறார்.

ஏ.எல்.விஜய் இயக்கத்தில் ஜெயம் ரவி காட்டுவாசியாக நடித்துள்ள படம் 'வனமகன்'. இந்தப்படத்தின் படத்தின் முன்னோட்டம் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது. மிக் ஸ்டுடியோ தயாரிக்கும் இந்தப் படத்தில், ஜெயம்ரவியுடன், சாயிஷா சேகல், தம்பிராமையா ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இந்தப் படத்தை ஏப்ரல் 14 ஆம் திகதி தமிழ் புத்தாண்டன்று வெளியிட படக்குழு முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஏற்கனவே தமிழ் புத்தாண்டுக்கு, தனுஷ் இயக்கியுள்ள 'பவர்பாண்டி' படமும், லாரன்ஸின் 'சிவலிங்கா' படமும் வெளியிடப்படும் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் சிம்புவின் 'ஏஏஏ' படமும் அதே நாளில் வெளியாகும் என்று கூறப்படும் நிலையில், ஜெயம் ரவியின் 'வனமகன்' படமும் அதே நாளில் வெளியாக உள்ளதாக கோடம்பாக்க தகவல்கள் தெரிவிக்கின்றன.



சரவணன் பரசு

வாழ்க்கையில் பல விடயத்தை தெரிஞ்சுகொண்டு பேசணும். சில விடயங்களை தெரிஞ்சாலும் பேசாம இருக்கணும். அப்பதான் நிம்மதி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்கும் தத்துவம் வரும்




செத்த பிறகு
சாம்பலா ஆனாலும்....
வாழும்போது
முன்னுதாரணமாக இருக்கனும்

கொசுவுக்கு வயிறு நிரம்ப
எவ்வளவு குருதி
தேவை என்று தெரிஞ்சா...



தூங்கும் முன்பே ஒரு கிளாஸ்
ஊத்தி அது முன்னாடி
வைச்சுட்டு தூங்கலாம்.

காதலிக்கு தாஜ்மகால் கட்டியது
அதிசயம் – அன்று



காதலியை கட்டினாலே
அதிசயம் – இன்று

காதலிக்க அறிவு முக்கியமா, அழகு
முக்கியமா என்டு கேட்குறாங்க.
கண்டிப்பா அழகுதான் முக்கியம்.



அறிவு இருக்கிறவன் எதுக்கு
காதலிக்க போறான்?



# பனங்கிழங்கின் மருத்துவக் குணங்கள்

பனம் பழத்திலிருந்து பனம் விதைகளைப் பிரித் தெடுத்து மேடை வடிவில் தயாரிக்கப்பட்ட பாத்திகளில் அடுக்கி மண்ணால் மூடிப் பராமரித்து மூன்று மாதங்களின் பின்னர் பனங்கிழங்கை அறுவடை செய்கிறார்கள். இது பல் வேறு மருத்துவக் குணங்களைக் கொண்டது.

நன்கு வேகவைத்த கிழங்கின் மேற்றோல் பகுதியையும், நடுப்பகுதியில் உள்ள தும்பையும் நீக்கி சாப்பிட வேண்டும். பனங்கிழங்கில் பல மருத்துவக் குணங்கள் உள்ளன. இது குளிர்ச்சித் தன்மை உடையது. மலச்சிக்கலை தீர்க்கக்கூடியது. உடலுக்கு வலுச் சேர்க்கும். பனங்கிழங்கை வேகவைத்து சிறு, சிறு துண்டாக நறுக்கி, காயவைத்து அதனுடன் கருப்பட்டி சேர்த்து இடித்து மாவாக்கிச் சாப்பிட்டால் உடலுக்குத் தேவையான இரும்புச் சத்து கிடைக்கும். இதனுடன் தேங்காய்ப் பால் சேர்த்துச் சாப்பிட்டால் உடல் உறுப்புக்கள் பலம்பெறும். பெண்களின் கர்ப்பப்பை பலம் அடையும். பனங்கிழங்கு வாயுத்தொல்லை உடையது. எனவே இதைத் தவிர்க்க பனங்கிழங்குடன் பூண்டு, மிளகு, உப்பு சேர்த்து இடித்து மாவாக்கி சாப்பிடலாம். இனிப்பு தேவைப்படுகிறவர்கள் கருப்பட்டி சேர்த்து இடித்துச் சாப்பிடலாம். வாயுத் தொல்லை நீங்கும். மிக்சியில் போட்டும் மாவாக்கி வைத்துக் கொள்ளலாம்.

வேகவைக்காத பனங்கிழங்கை நறுக்கி காயப்போட்டு மாவாக்கி அதை சுவைக்கு ஏற்ப கூழாகத் தயாரித்தோ, உப்புமா செய்தோ, தோசையாக தயாரித்தோ சாப்பிடலாம். பனங்கிழங்கில் நார் சத்தும் அதிகம் இருப்பதால், இதை உண்பதால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

மலச்சிக்கல் உள்ளவர்கள் பனங்கிழங்கை வேகவைத்து வெங்காயம், பச்சை மிளகாய் போட்டு இடித்துச் சாப்பிட்டால் உடனடித் தீர்வு கிடைக்கும்.

பனங்கிழங்கை மாவாக்கி கஞ்சி தயாரித்து குடித்தால் பசி தீரும். சில நோய்களும் கட்டுப்படும்.

பூமியில் இருந்து பனங்கிழங்கைப் பிரித்தெடுக்கும்போது விதையில் இருந்து பூரான் கிடைக்கும். இது சாப்பிடுவதற்கு சுவையாக இருக்கும். பூரான் சாப்பிட்டால் வயிற்று வலி, ஒற்றை தலைவலி உள்ளிட்ட நோய்கள் குணமாகும்.

பனங்கிழங்கு, பதநீர், நுங்கு, பனம்பழம், பனை ஓலை, பனை நார் என பனைமரத்தில் இருந்து கிடைக்கும் அனைத்தும் மனித குலத்துக்கு பயன் தரக்கூடியவையாகும்.




## இடபம்

கிருத்திகை 2,3,4ம் பாதங்கள் ரோகிணி, மிருகசீரிடம் 1,2ம் பாதங்கள்

இடப ராசி நேயர்களே பிறர் தம் வார்த்தைகளில் குற்றம் குறை கண்டுபிடிக்காதவாறு பேசும் ஆற்றல் கொண்ட உங்களுக்கு சனி அதிசாரமாக அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சரித்தாலும் மாத கோளான சூரியன் சாதகமாக சஞ்சரிப்பதாலும் சுக்கிரன் 11ல் சஞ்சாரம் செய்வதாலும் எதையும் சமாளிக்ககூடிய ஆற்றல் உண்டாகும். குரு வக்ர கதியில் இருப்பதால் கொடுக்கல் வாங்கல் விடயத்தில் சற்று எச்சரிக்கையோடு இருப்பது நல்லது. திருமண சுப காரியங்கள் தடைகளுக்குப் பின் நிறைவேறும். உடன் பிறந்தவர்களால் சுமாரான சாதகப் பலன்களைப் பெறுவீர்கள். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் விலகி படிப்படியான ஒற்றுமை உண்டாகும். எடுக்கும் முயற்சிகளில் சிறுசிறு தடை தாமதங்களை சந்தித்தாலும் இறுதியில் வெற்றி கிட்டும். உத்தியோகத்தர்கள் தடைப்பட்ட உயர்வுகளுக்கான முயற்சி களை மேற்கொண்டால் எதிர்பார்த்த அனுகூலப் பலனை அடைய முடியும். தொழில் வியாபா ரம் செய்பவர்களுக்கு மறைமுக எதிர்ப்புக்கள் விலகி எதிர்பார்த்த லாபம் அமையும். சிலருக்கு புதிய கூட்டாளிகளின் சேர்க்கையும் உண்டாகும். பண வரவுகள் தேவைக்கேற்றபடி இருக்கும்.

பரிகாரம்: சனிப்ரீதி ஆஞ்சநேயர் வழிபாடு செய்வது நல்லது.
சந்திராஷ்டமம் 20ஆம் திகதி காலை 09.11 மணி முதல் 22ஆம் திகதி இரவு 08.33 மணி வரை.



## நாளை

**மாசி-19**

வெள்ளிக்கிழமை -03.03.2017
திதி: பஞ்சமி பி.ப. 01.10
நட்சத்திரம்: பரணி பி.இ.02.20
சுபநேரம்:06.27-07.57 வரை
ராகுகாலம்:10.57-12.27 வரை
ஷஷ்டி விரதம்




## வரலாற்றில் இன்றைய தினம்

1498 - வாஸ்கொடகாமாவின் கடலணி மொசாம்பிக் தீவுக்குப் பயணம் செய்தது.

1657 - தற்போதைய டோக்கியோ ஆன எடோவில் ஏற்பட்ட 3நாள்கள் நீடித்த தீவிபத்தில் 100,000 பேர் உயிரிழந்தனர்.

1815 - பிரிட்டன் ஆக்கிரமிப்பாளர்களுக்கும் கண்டிராஜ்யதலைவர்களுக்குமிடையே கண்டி ஒப்பந்தம் கைச்சாத்தானது.

1855 - இரண்டாம் அலெக்ஸாண்டர் ரஷ்யாவின் சார் மன்னரானார்.

1859 - அமெரிக்காவிலேயே மிகப் பெரிய அடிமைகள் ஏலம் தொடங்கியது.

1862 - வின்சரில் றோட்றீக் மக்லீனின் படுகொலை முயற்சியிலிருந்து விக்ரோரியா மகாராணி நூலிழையில் உயிர் தப்பினார்.

1946 - வடவியட்னாம் ஜனாதிபதியாக கோசிமின் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1956 - பிரான்ஸிடமிருந்து மொரோக்கோ சுதந்திரம் பெற்றது.

1970 - பிரிட்டன் முடியாட்சியிலிருந்து தனது தொடர்பைத் துண்டித்து குடியரசாக றோட்சியா தன்னை பிரகடனப்படுத்தியது.

1983 - ஜப்பானில் மட்டும் கிடைக்கப்பெற்ற இறுவட்டுக்களும் பிளேயர்களும் முதன் முதலாக அமெரிக்காமற்றும் சந்தைகளில் விற்பனைக்கு இடப்பட்டன.

1988 - சிறிலங்கா சிப்பாய்கள் எட்டுப்பேர் நித்திரையில் சுட்டுக் கொலை சக சிப்பாய் ஒருவர் வெறிகொண்டு தாக்குதல்.

1988 - தெஹ்ரான் பாக்தாத் மோதல் சகிப்புத் தன்மையைக் கடைப்பிடிக்க ஐ.நா. அவசர வேண்டுகோள்.

1989 - பன்னிரண்டு ஐரோப்பிய சமூக நாடுகள் நூற்றாண்டின் முடிவில் அனைத்து குளோரோ புளோரோ காபன் உற்பத்திகளையும் தடை செய்வதற்குச் சம்மதித்தன.

1990 - நெல்சன் மண்டேலா ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் பிரதி தலைவராகத் தேர்வானார் .

1992 - ஆர்மீனியா, அஸெர்பைஜான், கசகிஸ்தான், கிரிகிஸ்தான்,மோல்டோவா, சான்மரியானோ, தஜிகிஸ்தான், துருக்மேனிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகியன ஐக்கிய நாடுகள் சபையில் இணைந்தன.

1995 - [illegible] டத்தில் இதுவரை 162 விண்ணப்பங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆண்களுக்கான பருத்தி வகையிலான மேல் ஆடைகள் மேற்பக்கம் பிளேனாகவும், கீழ்ப்பக்கம் செக் அல்லது கோடு உள்ளதான வடிவமைப்பில் தற்போது சந்தைக்கு வந்துள்ளன.இவை ஆயிரத்து 800 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

# அலெப்போ போரில் ரசாயன ஆயுதங்கள் சிரியா அரசு மீது ஐ.நா. குற்றச்சாட்டு

கடந்த ஆண்டு சிரியாவில் அலெப்போ நகரைக் கைப்பற்றும் நோக்கில் நடைபெற்ற போரின் நடத்தை குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபை அந்த நாட்டின் வான் படைகள் இரசாயன ஆயுதங்களைக் கொண்டு போர்க் குற்றங்களை இழைத்துள்ளது என்று குற்றஞ் சுமத்தியுள்ளது.

அரச படைகள் ஐ.நாவின் வாகன தொடரணி மீது வேண்டுமென்றே தாக்குதல் நடத்தியதாகவும், அதில் தொண்டுநிறுவன பணியாளர்கள் 14 பேர் கொல்லப்பட்டனர் என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

போராளிகள் வசமிருந்த மருத்துவமனைகள் மற்றும் சந்தைப்பகுதிகள் குறிவைக்கப்பட்டு அதன் மீது ரஷ்ய ஆதரவுபெற்ற படைகள் நீடித்த தாக்குதல்களை தொடர்ந்து முன்னெடுத்துள்ளன. ஆனால், பன்னாட்டு விதிகளை ரஷ்யப் படையினர் மீறியுள்ளார்கள் என்பதை முடிவு செய்ய போதுமான ஆதாரங்கள் இல்லை என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், போராளிகளும் இந்த போரில் போர்க்குற்றங்களை இழைத்துள்ளனர். பொதுமக்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்தி அரச கட்டுப்பாட்டிலிருந்த மாவட்டங்களில் சரமாரியாக தாக்குதல் நடத்தியதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது. (வ)


## தேவை

விற்பனை உதவியாளர் தேவை.
சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் ,விரும்பத்தக்கது.
மாதாந்தக் கொடுப்பனவு 18 000/= வழங்கப்படும்.
திருநெல்வேலியில் இருந்து 10Km சுற்றளவில் உள்ளவர் மட்டும்.
தொடர்பு:
077 978 9223, 021 205 2200

Galaxy Star
வெற்றி வாரம் 140 | திகதி 01.03.2017
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
06 09,29,49,60
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,291,688 /-
2017.03.05 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

## பணியாளர் தேவை

சிவபூமி தொழிற்பயிற்சிப் பாடசாலைக்கு பணியாளர்கள் தேவை. தகுதியானவர்கள் விண்ணப்பிக்கவும்.

சிவபூமி பாடசாலை,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
021 222 7938
Sivapoomi@gmail.com

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்

### நகராட்சிமன்ற எல்லைக்குள் சிறுவர்பூங்கா அமைப்பதற்கான காணி கொள்வனவு

மேற்படி சிறுவர் பூங்கா அமைப்பதற்காக சாவகச்சேரி நகராட்சிமன்ற எல்லைக்குள் A9 வீதிக்கு அருகில் 7 - 10 பரப்பிற்குட்பட்ட காணி தேவைப்படுகின்றது. எனவே காணி வழங்க முன்வருவோர் நகராட்சிமன்ற அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் விலைமதிப்பீட்டுக்கு அமைவாகவே விலை நிர்ணயம் செய்யப்படும் என்பதனையும் கருத்திற் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

கா. சண்முகதாசன்
செயலாளர்,
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.

## ST. JOHN'S COLLEGE, JAFFNA
## CHUNDIKULI GIRLS COLLEGE, JAFFNA
## ADMISSION_2018 FOR GRADE 1, GRADE_4, GRADE_6 & GRADE_10

### தரம் 01, தரம் 04, தரம் 06, தரம் 10 இற்கான அனுமதி_2018

01. அ. விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்தது 03.03.2017 முதல் 20.03.2017 வரை பெற்றுக்கொள்ளலாம்.
ஆ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
இ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 25.03.2017 சனிக்கிழமை அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
02. தரம் 01 இற்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் பிரதி (Photo copy) இணைக்கப்படவேண்டும்.
03. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும் விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
04. ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 1000.00
05. வயதெல்லைகள்
அ. தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2012 க்கும் 31.01.2013 க்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
ஆ. தரம் 04 விண்ணப்பதாரி 01.02.2009 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
இ. தரம் 06 விண்ணப்பதாரி 01.02.2007 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
ஈ. தரம் 10 விண்ணப்பதாரி 01.02.2003 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
06. தரம் 12 (A/L 2020 Batch) விண்ணப்பதாரி 01.02.2001 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
07. தரம் 04 தரம் 06 தரம் 10 இற்கான பிரவேசப் பரீட்சை 21.10.2017 சனிக்கிழமை காலை 08.00 மணிக்கு ஆரம்பமாகும்.

குறிப்பு:
01. தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆண்டு 5 புலமைப்பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது. அனுமதிப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெறும் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட சில புலமைப்பரிசில்கள் கல்லூரியால் வழங்கப்படும்.
02. தரம் 12 இற்கும் (A/L 2020 Batch) ஆங்கில மொழி மூலம் (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம்) தமிழ்மொழி மூலம் (விஞ்ஞானம், கணிதம் , வர்த்தகம், கலை, தொழில்நுட்பவியல்) London A/L 2018/2019 இற்கும் விண்ணப்பப்படிவங்கள் சென்ஜோன்ஸ் கல்லூரியிலும் ஏற்றுக்கொள்ளப்படும். அனுமதிப்பரீட்சை 02.01.2018 திங்கட்கிழமை காலை 08.30 மணிக்கு நடைபெறும். புதிய வகுப்புகள் 08.01.2018 திங்கட்கிழமை ஆரம்பமாகும். ஆண்டு 01 இல் மும்மொழிக்கற்கை நெறி அறிமுகப்படுத்தப்படுகின்றது.
03. சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் தரம் 12 (A/L தமிழ் /ஆங்கில மொழிமூலம் 2019 Batch) விண்ணப்பதாரிகள் O/L பரீட்சைப் பெறுபேறுகளின் பின்னர் விண்ணப்பிக்கவும்.

அதிபர்கள்.

## வலிகாமம் கிழக்கு பிரதேசசெயலக பிரிவு அரசசேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம் வருடாந்த பொதுக்கூட்டம்

காலம் 04.03.2017 சனிக்கிழமை
நேரம் காலை 9.30 மணி
இடம் யா/நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி

உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வை. குணசேகரம்
தலைவர்

அ. அருந்தவநேசன்
செயலாளர்

குறிப்பு:
2016.12.31 ஆம் திகதிக்கு முன்னர் உறுப்பினர்களாக இணைந்து கொண்டவர்கள் அங்கத்துவ அட்டைகளை பெற்றுக்கொள்ளலாம்.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வமலர் சிவபாதம் (இராசு)



கைதடி கிழக்கு, கைதடியைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வமலர் சிவபாதம் நேற்று (01.03.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாதம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் குகன் (லண்டன்), குமுதினி (சுவிஸ்), குகந்தினி (கைதடி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் உமாதேவி (லண்டன்), தங்கராசா (சுவிஸ்), சசிக்குமார் (விவா காட் வெயார், கைதடி) ஆகியோரின் அன்பு மாமியாரும் தரணிகா, வக்சனா, ஆர்த்திகா, சிருஷ்டிகா, ஸ்ரீ. பிறிந்திரன், கிதுர்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.03.2017) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்
விவா காட் வெயார் (கைதடிச் சந்தி)

## மரண அறிவித்தல்

### தாமோதரம்பிள்ளை பாலச்சந்திரன்



உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் தற்போது தெகிவளையில் வசித்துவந்தவருமாகிய தாமோதரம்பிள்ளை பாலச்சந்திரன் (இளைப்பாறிய கோண்டாவில் இ.போ.ச டிப்போ பரிசோதகர் CTB பாலா) 01.03.2017 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை-பொன்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சுகிர்தம்மா தம்பதியரின் அருமை மருமகனும் காலஞ்சென்ற பக்வதி மற்றும் இராமச்சந்திரன், சிவலோகநாயகி, புஸ்பதேவி, சிவபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும் கேதீசன் (விரிவுரையாளர்- விஞ்ஞானபீடம், யாழ். பல்கலைக்கழகம்), Dr. தாமோதரன் (பொதுவைத்திய நிபுணர்- தேசிய வைத்தியசாலை, கொழும்பு), தர்சினி (கொழும்பு), சுகேசினி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் சயந்தவி, சர்வேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனும் ஹரிகேசன், சுவஸ்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 03.03.2017 வெள்ளிக்கிழமை காலை 8 மணிமுதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் மு.ப. 11 மணியளவில் நடைபெற்று கல்கிசை தெகிவளை பொது மயானத்தில் பிற்பகல் 2 மணியளவில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
தொடர்பு: Dr. தாமோதரன் +94 77 728 2805, 011 272 4484


## கேப்பாபிலவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில், கேப்பாபிலவில் படையினர் ஆக்கிரமித்து வைத்துள்ள 525 ஏக்கர் காணியையும் விடுவிக்குமாறு கோரித் தொடர் அறவழிப் போராட்டம் கேப்பாபிலவு மக்களால் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கேப்பாபிலவு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கேப்பாபிலவு, சீனியாமோட்டை, சூரிபுரம், பிலக்குடி யிருப்பு நான்கு கிராமங்களில் உள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளைப் பாதுகாப்புத் தரப்பினர் சுவீகரித்திருந்தனர். இந்த நிலங்களுக்குச் சொந்தமான மக்களை கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்தில் குடியமர்த்தி யுள்ளனர்.

தமது சொந்த நிலங்களைக் கோரி மக்கள் போராட்டங்களை முன்னெடுத்து வந்தனர். கடந்த ஜனவரி மாதம் 243 ஏக்கர் காணி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவினால் விடுவிக்கப்பட்டிருந்தது. சீனியாமோட்டை, சூரிபுரம் விடுவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஒரு மாதகால தொடர் அறவழிப் போராட்டத்துக்குப் பின்னர் பிலக்குடியிருப்பு பகுதியும் நேற்றைய தினம் விடுவிக்கப்பட்டுள்ளது.

பூர்வீகமாக வாழ்ந்த கேப்பாபிலவு கிராமத்தில் உள்ள 128 குடும்பங்களுக்குச் சொந்தமான 525 ஏக்கர் காணிகளை விடுவிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நேற்றைய தினம் கேப்பாபிலவில் அமைந்துள்ள இராணுவ முகாமுக்கு முன் தகரக் கொட்டகை அமைத்து 60 மேற்பட்ட பொதுமக்கள் தொடர் அறவழிப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்தில் குடியமர்த் தப்பட்டு ஆறு வருடங்கள் கடந்துவிட்டன. எங்கள் பூர்வீக நிலத்தை விடுவிக்க வேண்டும் என்பதை வலியுறுத்திக் கடந்த வருடம் ஆரம்பத்தில் ஆலய பூசகர் ஆறுமுகம் வேலாயுதம்பிள்ளை உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தார். கேப்பாபிலவுக் காணிகள் விடுவிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் கொடுத்த உறுதி மொழியை அடுத்து போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

சுவீகரித்த காணிகளை விடுவார்கள். நாங்கள் எங்கள் காணிகளுக்குள் செல்லலாம் என்று நினைத்திருந்தோம். கேப்பாபிலவுக் காணிகள் விடுபடுவதாகப் பல தடவைகள் அறிவிக்கப்பட்டும் எமது காணிகள் விடுபடவில்லை. எமது கிராமக் காணிகளையும் இராணுவம் விடுவிக்க வேண்டும். அதுவரை நாங்கள் இந்த இடத்தை விட்டு நகர மாட்டோம் என்றனர். (த-57)

## புதுக்குடியிருப்பு...

போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று தெரிவித்துள்ள மக்கள், தமது தொடர் போராட்டத்தை நேற்று 27 ஆவது நாளாகவும் தொடர்ந்தனர்.

புதுக்குடியிருப்பில் இராணுவத்தினர் வசமுள்ள 19 ஏக்கர் காணிகளையும் விடுவிக்குமாறு கோரி, இராணுவ முகாம் முன்பாக, புதுக்குடியிருப்பு பிரதேச செயலக முன்றலில் அமர்ந்து மக்கள் போராடி வருகின்றனர். கடந்த பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் தொடர்கிறது.

இந்த மக்களின் காணிகளை மூன்று கட்டங்களாக விடுவிப்பதற்கு இராணுவத்தினர் இணக்கம் தெரிவித்துள்ளனர், முதல் கட்டமாக நாளை மறுதினம் சனிக்கிழமை மக்கள் காணிகளுக்குள் செல்ல முடியும் என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்திருந்தார்.

புதுக்குடியிருப்பு இராணுவ முகாமின் முட்கம்பி வேலிகளை அகற்றும் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. முகாமை அகற்றுவதற்கான முன்னாயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (த-57)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு...

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 34 ஆவது கூட் டத் தொடர் கடந்த 27 ஆம் திகதி ஆரம்ப மாகியது. கூட்டத் தொடரில் நேற்று முன்தினம் உரையாற்றிய பிரிட்டனின் அயலுறவுத் துறை மற்றும் பொது நலவாய பணியகத்தின் ஆசிய, பசுபிக் விவகாரங்களுக்கான அமைச்சர் அலோக் சர்மா மேற்படி கோரிக்கையை முன்வைத்தார். “2015 ஆம் ஆண்டு ஒக்ரோபர் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு, இலங்கைக்கு நாம் கால அவகாசம் வழங்கவேண்டும். உறுதி நிலை, நல்லிணக்கம், நீதியை நிலை நாட்டுவதற்குப் போருக்குப் பிந்திய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்" என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் உரையாற்றிய பின்னர், அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவை, பிரிட்டன் அமைச்சர் அலோக் பிரசாத் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போது, நல்லிணக்கம், நீதியை நிலைநாட்டுவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. (த-5)

## மனித உரிமைச்...

ஏற்படுத்தப்பட்ட பின்னர் புதிய அரசின் ஜெனிவா பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட உதவி இராஜாங்கச் செயலர் எரின் எம் பார்கில் ஐ.நா. கூட்டத் தொடரில் நேற்று உரையாற்றினார். அவர் தெரிவித்ததாவது: ஐ.நா. மனித உரிமைகள் சபை உரிய முறையில் செயற்படும்போது நாடுகளுக்குத் தங்களுக்குள்ள கடப்பாடுகளை நினைவுபடுத்தும் திறன் அதற்கு உருவாகின்றது. பேரவையால் நாடுகள் தங்கள் நடவடிக்கைகளுக்காகப் பொறுப்புக்கூறும் நிலையை உருவாக்க முடியும். மனித உரிமைகள் சபை எவ்வாறு செயற்பட வேண்டுமோ அவ்வாறு செயற்படும்போது அதன் வெற்றிகள் மனித உரிமைக்கான வெற்றிகளாகின்றன. இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்முறைகளுக்குப் பொறுப்புக் கூறுவதற்கான தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்பட்டன. அவற்றைத் தொடர்ந்தும் வழங்க வேண்டும் -என்றார். (த-5)

## மரண அறிவித்தல்

### ஜோசப் அலோசியஸ் நவரட்ணம்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மிருசுவிலை வசிப்பிடமாகவும், சுண்டுக்குளியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அலோசியஸ் நவரட்ணம் 28.02.2017 செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார்காலஞ்சென்றவர்களான ஜோசப்செல்வரட்ணம் _ அருளம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கிரகோரிசவிரிமுத்து _ திரேசம்மா தம்பதியரின் அன்புமருமகனும் ஆன்ஜொய்சின் அன்புக்கணவரும் ஜொய்லின் (ஆஸ்திரேலியா), சார்ளின் (சம்பத் வங்கி) ஆகியோரின் அன்புக் தந்தையும் காலஞ்சென்ற ஏர்னஸ்ற் ஞானப்பிரகாசம் மற்றும் அன்ரனிசந்திரா (கனடா) காலஞ்சென்ற யோகராஜா (கனடா) மற்றும் ஜேசுதாசன்ரவி (கனடா), றீற்றா (குஞ்சு, கனடா) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.


அன்னாரின் பூவுடல் இன்று (02.03.2017) வியாழகிழமை 2.30 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு மாலை 4 மணிக்கு மிருசுவில் புனித நீக்கொலார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் புனித நீக்கொலார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

150, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
021 221 7075

## மரண அறிவித்தல்

### பொன்னையா தர்மலிங்கம்



இல. 110, அம்பலவாணர் வீதி, உடுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா தர்மலிங்கம் 26.02.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மகனும் பூரணத்தின் அன்புக் கணவரும் சண்முகம், கிருஸ்ணபிள்ளை, மீனாதேவி, பராசக்தி, பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற கமலாதேவி ஆகியோரின் அன்புச்சகோதரனும் கீதாஞ்சலி , ஜெபாஞ்சலி, புஸ்பாஞ்சலி, சுதாஞ்சலி, தர்மினி, தர்ஷன், ஆகியோரின் பாசமிகுதந்தையாரும் ஜெயசீலன், றெஜினோல்ட்கரன், பிரமிலன், விஜயகாந்தன், ஜெனிதாஸ், ரம்மியா ஆகியோரின் அன்பு மாமனாரும் சுஜானன்,அபிநயன், அம்சபி, றெபெக் ஷன், றெனோஜா,ஜெருஷன், ஸ்றெபனி, கஜானன், அஸ்மிலன், துஷாரகா, குபேதன், கபிஸ்கா, அகஸ்தியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2017) வியாழக்கிழமை மு.ப 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 110, அம்பலவாணர் வீதி,
உடுவில்.

தகவல்
குடும்பத்தினர்.
077 889 0476

## மரண அறிவித்தல்



### திருமதி தங்கம்மா செல்லத்துரை
(அம்மாச்சி)

நீர்வேலிவடக்கைப்பிறப்பிடமாகவும்வசிப்பிடமாகவும் கொண்டதிருமதிதங்கம்மாசெல்லத்துரை 01.03.2017 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார்காலஞ்சென்றவர்களான கந்தையா செல்லம் தம்பதிகளின் அன்பு மகளும் மயில்வாகனம் அபிராமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் நாகம்மாவின் சகோதரியும் கனகரத்தினத்தின் சிறிய தாயாரும் மங்கயற்கரசியின் அன்பு மாமியாரும் உதயச்சந்திரன், உதயநிதி (லண்டன்), பிரதீஷ், நிஷாந்தி(லண்டன்), ஜனார்த்தனன், மதுராந்தகா (டென்மார்க்), விஷாந்தன், துவிதா (நீர்வேலி) கிஷேந்தி(நீர்வேலி) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் மிலாணன், நிவிதன், கனீஷ், தியானா, திவ்வியா, நிலன், கஜிஷன் ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2017) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக சிவியாக்கடவை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்
அ. கனகரத்தினம் (பெறாமகன்)
(ஐயக்கோன்) குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
11.01.1981



மறைவு
26.01.2017

### அமரர் கணபதிப்பிள்ளை சிவறஞ்சன்

கடந்த 26.01.2017 அன்று சுவிஸ்லாந்தில் அகால மரணமடைந்த எமது சிரேஸ்ட புத்திரனின் மறைவின் போது பங்குகொண்டு உதவி நல்கியவர்கள், நேரிலும் தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் கூறியவர்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை வெளியிட்டவர்கள், மலர் வளையங்கள் வைத்தவர்கள், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (02.03.2017) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அந்தியேட்டிக்கிரியையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

வரணி,
இயற்றாலை, வரணி

குடும்பத்தினர்,
077 285 5276

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா தம்பிராசா



யாழ். வடமராட்சி, மாடந்தை வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா தம்பிராசா 28.02.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ் சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் அம்மாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் நல்லதம்பி, காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களானநவமணி, கந்தசாமி, பொன்னையாஆகியோரின் அன்புமைத்துனியும் இன்பராசா (செல்வம்), பாஸ்கரன் (பாசி), ரஞ்சிதமலர் (கிளி), யசோதா (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும் பவா, மதி, நந்தன் , சுதன், உதயகுமார், விஜிதா (விஜி), தவனேஸ்வரன் , சுஜிதா (கிளி) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுஜன், துசி, சஜித், தேனுஷா, கார்த்திகா, நிவேஸ், திஷேகா, தினிஷ், தனுஷ், சதீஸ், லக்சிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.03.2017) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்தஅறிவித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாடந்தை, வல்வெட்டி.

தகவல்
குடும்பத்தினர்.

077 998 0449

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எவர்...

புதிய அரசமைப்பைக் கொண்டு வரும் பணிகளில் அரசியல் நிர்ணய சபை, வழிநடத்தல் குழு மற்றும் உப குழுக்களும் மும்முரமாகச் செயற்பட்டு வருகின்றன. 2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி நாம் கொடுத்த வாக்குறுதிகளின்படியே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தேர்ந்தெடுக்கப்பட்டார். கட்டாயம் பொதுவாக்கெடுப்புடன் கூடிய புதிய அரசமைப்பொன்று கொண்டு வரப்படும் என்றார். கூட்டு அரசுக்குள் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலர், புதிய அரசமைப்பைக் கொண்டுவர மக்கள் ஆணை வழங்கவில்லை. மாறாக அரசமைப்பில் திருத்தங்கள் மாத்திரமே கொண்டு வரப்படும் என்று கூறி வருகின்றனர் என்று பத்திரிகையாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர்,

நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறைமையை இல்லாதொழித்து, தேர்தல் முறைமையில் மாற்றத்தைக் கொண்டு வரும் புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளே அரசால் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன. அரச தலைவர் தேர்தலின்போதும் இதனைத்தான் வாக்குறுதியாக நாம் கொடுத்திருந்தோம்.

கொடுத்த வாக்குறுதிகளின்படி கட்டாயமாக புதிய அரசமைப்பு கொண்டு வரப்படும். அத்துடன், பொதுவாக்கெடுப்பும் நடத்தப்படும். இன்று வீரப் பேச்சுப் பேசுபவர்கள் எவரும் 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி எம்முடன் இருந்தவர்கள் அல்லர் என்றார். (த-5)

## டெங்கு...

இந்தக் காலப் பகுதியில் டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ள இடங்கள் பற்றிய விவரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு சுகாதார அமைச்சின் செயலாளர் அனைத்துச் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களுக்கும் அறிவித்துள்ளார்.

கடந்த வருடங்கள் மேற்கொண்டவை போன்று ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் டெங்கின் தாக்கம் அதிகமாக உள்ள இடங்களை இனங்கண்டு ஒவ்வொரு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலும் இடங்களை நிர்ணயித்துச் செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார்.

கடந்த வருடம் மழைவீழ்ச்சி குறைவாகக் காணப்பட்டபோதிலும் டெங்கின் தாக்கம் என்றுமில்லாத அளவு அதிகரித்த வண்ணம் உள்ளது. இதனைக் கட்டுப்படுத்தச் சுகாதாரத் திணைக்களத்தினர் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளபோதிலும் தினமும் தாக்கம் அதிகரித்துச் செல்கின்றது .

இதனைக் கருத்திற்கொண்டு மார்ச் 29 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் நான்காம் திகதி வரை டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்றிட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

## எச்1 என்1...

படுத்தப்பட்டது. இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

பன்றிக்காய்ச்சல் தாக்கத்துக்குள்ளான 9பேரும் பூரண குணமடைந்து வீடு சென்றுள்ளனர். கடந்த சில நாள்களாகப் பன்றிக் காய்ச்சல் நோய்த் தாக்கம் தொடர்பாக மாறுபட்ட செய்திகள் வெளிவருகின்றன.

சில வாரங்களாக நாட்டில் நிலவும் அசாதாரண காலநிலை மாற்றங்களால் தொற்று நோய்களின் தாக்கம் பல்வேறு தரப்பினரையும் பாதித்துள்ளது. அதில் டெங்கு, சளிசுரம் (இன்புளுவென்சா வகைக் காய்ச்சல்) மற்றும் பல்வேறு சுவாசத் தொற்று நோய்களின் தாக்கம் அடங்குகின்றன. இதுவரை பெற்றுக் கொண்ட வைத்தியசாலைத் தகவல்களின் அடிப்படையில் கடந்த ஆண்டுகளை விட இது சற்று அதிகரித்துக் காணப்படுகின்றது. இதற்கு இவ்வாண்டு ஏற்பட்ட மாறுபட்ட குளிர் மற்றும் அசாதாரண மழைவீழ்ச்சி என்பன காரணங்களாக அறியப்படுகின்றன. ஆயினும் இந்தத் தொற்று நோய்கள் பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவினரின் சேவைகளினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது இன்புளுவென்சா நோயின் தாக்கம் அதிகமாக காணப்படுவதால் குழந்தைகள், வயோதிபர்கள், கர்ப்பிணிகள் பெருமளவில் பாதிக்கப்படும் தரப்பினராக உள்ளனர். எனவே, இந்த நோய்க் குணங்குறிகளுடன் வருபவர்களை வைத்தியசாலையில் அனுமதித்து பொருத்தமான சிகிச்சைகளை அளிக்கின்றோம்.

நெருக்கமான இடங்களில் சேருவதைத் தவிர்த்தல், தடிமல், இருமல் நோயாளிகள் கைக்குட்டை போன்றவற்றைப் பாவித்தல், கை கழுவுதல் போன்ற சுய பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலம் சுவாசம் சம்பந்தமான தொற்றுநிலையில் இருந்து மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்என்றுள்ளது.

வடக்கில் இதுவரை 26 பேர் பன்றிக்காய்ச்சல் தொற்றுக்குள்ளாகியதாக இனங்காணப்பட்டுள்ளனர் என்று சுகாதாரத்துறையினர் தெரிவிக்கின்றபோதும் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை மிக மிக அதிகம் என்று கூறப்படுகிறது. (த-4)

## பன்றிக்...

பீதியடையத் தேவையில்லை. இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து பணிப்பாளர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் பன்றிக் காய்ச்சல் என்றழைக்கப்படும் எச்1என்1 என்ற வைரஸ் தொற்றினால் தற்போது ஒருவகை இன்புளுவென்சா காய்ச்சல் பரவிக் கொண்டிருக்கிறது. வடக்கு மாகாணத்தில் பல்வேறு பகுதிகளிலும் இந்தக் காய்ச்சல் பரவி வருகிறது.

இன்புளுவென்சா பொதுவாக அனைத்து வயதினரையும் தொற்றுக்கு உள்ளாக்கக்கூடியது. இந்த நோய் கர்ப்பிணித் தாய்மார், பிரசவத்தின் பின்னரான தாய்மார், 2 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள், 65 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள், முட்டு வருத்தம், சலரோக வருத்தம் உடையவர்கள் ஆகியோரைத் தாக்கும் விளைவுகள் கடுமையாக இருக்கும்.

எனவே கர்ப்ப காலத்தில் இந்த நோய் ஏற்படும்போது மிக அவதானமாக இருக்கவேண்டும். நோயை ஆரம்பத்தில் கண்டறிந்து சரியான சிகிச்சை வழங்குவதன் மூலமாக உயிரிழப்பைத் தடுக்கலாம்.

*இந்த நோயின் அறிகுறிகள்*

சடுதியாக ஏற்படும் கடுமையான காய்ச்சல், தலையிடி, தசைகள், மூட்டுக்களில் நோவு, கடுமையான உடற்சோர்வு, தொண்டை நோவு, மூக்கு வடிதல்.

பெரும்பாலானவர்கள் ஒரு கிழமைக்குள் இந்தக் குணங்குறிகளிலிருந்து மருத்துவப் பராமரிப்பின்றிக் குணமடைவர்.

*இந்த நோயின் அபாய அறிகுறிகள்*

அதிகூடிய காய்ச்சல், மூச்சுவிட இயலாமை, நெஞ்சு நோவு, மறதிக்குணம், நெஞ்சுப் படபடப்பு, வலிப்பு, வயிற்றோட்டம்.

*இந்த நோய்த் தொற்று ஏற்படும் முறை*

இந்த நோயாளி ஒருவர் இருமும்போது அல்லது தும்மும்போது, இந்த எச்1என்1 என்ற வைரஸ் கொண்ட சிறு துணிக்கைகள் காற்றுடன் பரவி ஏனையோர் அதனைச் சுவாசிக்கும்போது நோய் பரவுகிறது. இந்த வைரஸால் தொற்றுக்கு உள்ளான கைகள் மூலமாகவும் தொற்று ஏற்படுகிறது.

*கர்ப்பவதிகள் எப்படி இதிலிருந்து தப்பலாம்?*

பொதுமக்கள் கூடும் இடங்கள், கோயில் திருவிழாக்கள், சந்தைகள், பேருந்துப் பயணங்கள், ரயில் பயணங்கள், இந்த நோயால் பாதிக்கப்பட்டோரைப் பராமரித்தல் ஆகியவற்றைக் கர்ப்பவதிகள் தவிர்ப்பதன் மூலமாக இந்த நோய்த் தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.

சாதாரண வைரஸ் காய்ச்சலிலிருந்து இந்த எச்1என்1 என்ற இன்புளுவென்சா வைரஸ் காய்ச்சலை வேறு பிரித்து அறிவது கடினம். தகுந்த ஆய்வுகூட மற்றும் நிபுணத்துவ சேவையும் சிறப்பு மருத்துவ நிபுணர்களது நேரடிக் கண்காணிப்புமே எச்1என்1 என்ற இன்புளுவென்சா வைரஸ் காய்ச்சலை ஆரம்பத்திலே கண்டறிவதற்கு அவசியம்.

எனவே எந்தவொரு கர்ப்பவதிக்கோ அல்லது பிரசவித்த தாயாருக்கோ காய்ச்சல் ஏற்பட்டால், காய்ச்சல் ஏற்பட்ட முதலாவது நாளிலேயே, அருகில் உள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்படவேண்டும்.

எனவே கர்ப்பவதிகளான உங்களுக்கோ அல்லது உங்கள் உறவினர்கள் கர்ப்பவதிகளாக இருந்தால் அவர்களுக்கோ, காய்ச்சல் ஏற்படின் உடனடியாக அருகிலுள்ள அரச வைத்தியசாலையை நாடவும்.

*தடுப்பு முறைகள்*

இருமல், தடிமல் ஏற்படும்போது கைக்குட்டை அல்லது ரிசு பாவித்து மூடிக்கொள்ளுதல், பாவித்த கைக்குட்டையைப் பாதுகாப்பாகக் கழுவுதல், பாவித்த ரிசுக்களைப் பாதுகாப்பாக அழித்தல், சன நெருக்கடியான இடங்களுக்கு இயலுமானவரை செல்வதைத் தவிர்த்தல், கைகளைச் சவர்க்காரமும் நீரும் பாவித்து அடிக்கடி கழுவுதல், தகுதியான மருத்துவரிடம் ஆலோசனை பெறல் வேண்டும். எனவே பொதுமக்கள் எச்என்1 என்ற இன்புளுவென்சா வைரஸ் குறித்து அதிகம் பீதியடையத் தேவையில்லை. மேற்குறிப்பிட்ட பாதிப்படையக்கூடியோர் நோயின் ஆரம்பத்திலேயே தகுந்த மருத்துவ ஆலோசனை பெறவேண்டும்என்றுள்ளது. (த-4)

## உண்மை அறியும்...

ஆணைக்குழு அமைக்கப்படுவதானது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை மறுக்கின்ற செயற்பாடாகவே அமையும். இவ்வாறு சிவில் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் உரையாற்றிய அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, இன்னும் 2 மாதங்களில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அமைப்பதற்கான அனுமதிப் பத்திரம் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே சிவில் அமைப்புக்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளன.

போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையை அமைத்து நீதி வழங்கும் செயற்பாட்டை அரசு முன்னெடுக்கவேண்டும். அதன் பின்னர் வேண்டுமானால் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அமைக்கப்படலாம். இந்த விடயத்தைக் கொழும்பு அரசுக்குச் சிவில் அமைப்புக்கள் ஏற்கனவே தெளிவாகத் தெரிவித்து விட்டன. ஆனாலும் அரசு உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை அமைப்பதில் முனைப்புக் காட்டி வருகின்றது. 'நீதிக்கான பொறிமுறை இன்னமும் இலங்கையில் அமைக்கப்படவில்லை. இந்தப் பொறிமுறை அமைக்கப்பட் பின்னர் அதற்குச் சமாந்தரமாக உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அமைக்கப்படலாம். நீதிப் பொறிமுறையை வலுப்படுத்துவதற்காக அவ்வாறு செய்யப்படலாம். நீதிப் பொறிமுறை அமைக்கப்படாமல் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அமைக்கப்படுவது நீதியை மறுக்கின்ற செயற்பாடாகும்' என்று மனித உரிமை ஆர்வலரும், சட்டத்தரணியுமான நிரான் அங்கிரல் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையின் ஊடாக நீதியைக் கோரினர், காணாமற்போனோர் விடயத்துக்குத் தீர்வைக் கோரினர். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவைக் கோரவில்லை. இது இலங்கை அரசினால் திணிக்கப்படுகின்ற விடயமாகும். இதில் எங்களுக்கு நம்பிக்கையில்லை என்று சிவில் அமைப்புக்கள் காட்டமாகத் தெரிவித்தன. (த-5)

## இணங்கிய...

மேலும் விரிவானதாக்கி எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறவுள்ள அமர்வில் முன்வைக்கப்பட்டு ஆராயப்படவுள்ளது.

புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகளுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியால் ஏற்படுத்தப்பட்டு வந்த முட்டுக் கட்டைகள் நீங்கியுள்ளன. கடந்த மாதம் 21ஆம் திகதி நடைபெற்ற வழிநடத்தல் குழுவின் கூட்டத்தில் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிக்கு முழுமையாக ஒத்துழைப்பதற்குச் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணங்கியிருந்தது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கோரியதற்கு அமைவாக வழிநடத்தல் குழுவின் கடந்த கூட்டத்தில், அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையில், அரசமைப்பில் இதுவரை சொல்லப்பட்டு நடைமுறைப்படுத்தாத விடயங்கள், கடந்த காலங்களில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுப் பொதிகள், அனைத்து முதலமைச்சர்களும் அரசமைப்பில் மாற்றம் செய்ய இணங்கிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இந்த அறிக்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் வழங்கப்பட்டிருந்தது. கடந்த அமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில், ஒவ்வொரு விடயங்களும் எப்போது சொல்லப்பட்டன என்பவற்றை உள்ளடக்கி விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது 7ஆம் திகதி நடைபெறும் வழிநடத்தல் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்படவுள்ளது. (த-5)

## 30ஆம் நாளில்...

தொடர்ந்து போராட்டம் முடிவுக்கு வந்ததாக மக்கள் அறிவித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் கடந்த 27ஆம் திகதி சந்திப்பு நடத்தியிருந்தார். பிலக்குடியிருப்புக் காணிகளை விடுவிப்பதற்கு அரச தலைவர் மைத்திரிபால உறுதியளித்திருந்தார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை தொடக்கம், பிலக்குடியிருப்பு வான்படை முகாமை அகற்றும் நடவடிக்கைகளை வான்படையினர் ஆரம்பித்திருந்தனர். நேற்றுக் காலை வான்படை முகாம் முன்பாக மக்கள் குழுமினர். அனைவரும் சந்தோசத்துடனும் பரபரப்புடனும் காணி விடுவிப்புக்காகக் காத்திருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலர் காலை 11.15 மணியளவில் வான்படை முகாமினுள் சென்றார். வான்படை முகாம் பொறுப்பதிகாரியுடன் சந்திப்பு நடைபெற்றது. காணிகளை விடுவிப்பதற்கான பத்திரத்தை வான்படையினர் முல்லைத்தீவு மாவட்டச் செயலரிடம் கையளித்தனர். முற்பகல் 11.45 மணியளவில், வான்படை முகாமின் வாசல் கதவு திறக்கப்பட்டது. மக்கள் மகிழ்ச்சிக்களிப்புடன் தமது சொந்தக் காணிகளைப் பார்ப்பதற்காக ஓடிச் சென்றனர். இதன்போது, இந்தப் போராட்டத்துக்கு தலைமை தாங்கிய பெண்ணைத் தமது தோள்களில் ஏற்றிச் சுமந்து சென்றனர்.

காணிகள் விடுவிக்கப்பட்ட பரவசத்தில் சென்ற மக்களுக்கு உள்ளே அதிர்ச்சி காத்திருந்தது. இடம்பெயர்வதற்கு முன்னர் அவர்கள் வாழ்ந்த வீடுகள் கற்குவியல்களாலாகக் காணப்பட்டன. வாழ்வாதாரத்துக்காக நடப்பட்ட தென்னை மரங்களிலிருந்து தேங்காய் பிடுங்கி இளநீர் குடித்தனர்.

பிற்பகல் 2.30 மணியளவில் குழப்பம் தோன்றியது. வான்படையினர் தமது புதிய எல்லைகளுக்கு வேலி அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். 54 குடும்பங்களுக்குச் சொந்தமான 42 ஏக்கர் விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டாலும், 19 குடும்பங்கள் தமது காணிகளுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. அதிலும் காணி அனுமதிப் பத்திரம் உள்ள 9 குடும்பங்களின் காணிகளை வான்படையினர் விடுவித்திருக்கவில்லை.

முழுமையாகக் காணிகள் விடுவிக்கப்படும் வரையில் தமது போராட்டம் தொடரும் என்று மக்கள் அறிவித்தனர். மாலை 3.30 மணியளவில், கரைதுறைப்பற்று பிரதேச செயலகக் காணி உத்தியோகத்தர், வான்படையினருடன் பேச்சு நடத்தினார். 9குடும்பங்களின் காணிகளையும் விடுவிக்க வான்படையினர் இணங்கினர். காணி அனுமதிப் பத்திரம் இல்லாத 10 குடும்பங்களுக்கும், விடுவிக்கப்பட்ட பிரதேசத்தினுள்ளேயே காணப்படும் அரச காணியைப் பகிர்ந்தளிப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டது. இதனையடுத்து பிலக்குடியிருப்பு மக்களின் நீண்ட நெடிய உறுதியான போராட்டம் முடிவுக்கு வந்தது. கடந்த ஜனவரி மாதம் 31ஆம் திகதி ஆரம்பித்த போராட்டம், 30 நாள்கள் கடந்த நிலையில் நேற்றுடன் முற்றுப்பெற்றது. விடுவிக்கப்பட்ட காணிகளினுள் நேற்று மாலையே கொட்டில்களை அமைக்கும் பணிகளை மக்கள் ஆரம்பித்தனர். (த-5,7,101)

## வயாவிளான்...

வல்லைஅராலி வீதியில், வயாவிளான் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவத்தினரின் தடுப்பு வேலிக்கு முன்பாக நேற்றுக் காலை இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

இராணுவ நலன்களுக்காக எமது காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. கூட்டு அரசு பதவியேற்று இரண்டு வருடங்கள் கடந்துள்ளன. எமது காணிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. எமது நிலங்கள் படிப்படியாக வழங்கப்படும் என்ற அரச தலைவரின் வாக்குறுதிகூட எமது விடயத்தில் பொய்த்துப் போய்விட்டது.

எனவேதான் வீதியில் இறங்கிப் போராடுவதைத் தவிர வேறு வழி இல்லை என்ற நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். எங்களுடைய ஏதிலி வாழ்க்கை எப்போது முடிவுக்கு வரும் என்ற ஏக்கத்துடனேயே இன்னமும் உள்ளோம்.

நாம் இன்று அடையாளப் போராட்டத்தை நடத்துகின்றோம். இனியும் காணிகள் விடுவிக்கப்படாவிட்டால் தொடர் போராட்டத்தை நடத்துவோம் என்று நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர். (த5101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகு எங்கே உள்ளது?



கையில் அழகு காலில் அழகு
கண்ணில் அழகு காதழகு
மெய்யில் அழகு முகத்தில் அழகு
மூக்கில் அழகு முழுவதும் அழகு

அழகு அழகு என்பதெல்லாம்
அன்பைத் தூண்ட உதவுவதே
அழகு தனக்கு இருப்பதை எண்ணி
ஆணவம் கொள்வது மிகத் தவறே

காலையில் மலரும் பூவின் அழகு
மாலையில் வாடிப் போகும் அழகு
ஆலையில் புகுந்திடும் கரும்பின் அழகு
சக்கையாய் ஆனதும் ஏதழகு

இராத்திரி வேளையில் நிலவழகு
விடிந்தால் எங்கே அதனழகு
மாலையாய் இருக்கையில் முத்தினழகு
தனித்தனி பிரிந்தால் ஏதழகு

வாடிப்போவது உடலின் அழகு
வாடாதிருப்பது உள்ளத்தழகு
எண்ணத்தில் அழகு சொற்களில் அழகு
செயல்களில் அழகு இருந்திடப் பழகு

## 28.02.2017 அன்று வெளியான விடுகதைகளுக்கான விடைகள்



1. தையல் ஊசி
2. நெருப்பு
3. மிருதங்கம்
4. காற்று
5. வெந்நீர்
6. மேகம்
7. மீன்
8. தண்ணீர்
9. இளநீர்
10. மெழுகுவர்த்தி
11. பெயர்
12. கோலம்

# பழமொழிகள்

1. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
சிறு வயதில் எந்த ஒரு விடயத்தையும் இலகுவில் பழக்கத்துக்குக் கொண்டு வந்து விட முடியும். அப்படி சிறு வயதில் குறித்த விடயத்தைப் பழக்கத்துக்கு கொண்டு வரத் தவறினால் பின்னர் வயது சென்ற பின்பு அதனைச் செய்யலாம் என எதிர் பார்க்க முடியாது. கல்வியையோ அல்லது நல்ல பழக்க வழக்கங்களையோ கற்றுக் கொள்வதற்கு சிறு பராயமே சிறந்தது. அது ஆயுள் வரையும் நிலைத்தும் நிற்கும். வயது சென்ற பின்பு எக்காரியத்தையும் பழகிக் கொள்வது சிரமமாகும்.

2. அழுதபிள்ளை பால் குடிக்கும்
இதன் நேர் பொருள் குழந்தை பசி எடுக்கும் போது அழுதானாகில் அவன் பாலைக் குடிப்பான் என்பதாகும். ஆனால் இதன் குறிப்புப் பொருள் எமக்கு நியாயமாக கிடைக்க வேண்டியவை தானாக கிடைக்காது விடின் கேட்டாகிலும் எமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதாகும். குழந்தைக்கு பசி எடுக்கும் போது தாய் பாலூட்ட வேண்டும் தாய் தற்செயலாக மறந்து விட்டாலும் பேச முடியாத குழந்தை அழுது என்றாலும் அக்கடமையை தாய்க்கு தெரியப்படுத்தி தனது பால் குடிக்கும் உரிமையைப் பெற்றுக் கொள்கிறது. அது போலவே கிடைக்க வேண்டியவை கிடைக்காது விட்டால் மௌன மாக இருந்து விடக் கூடாது. உரிமையை கேட்டுத்தான் பெறவேண்டும்.

3. விளையும் பயிரை முளையிலே தெரியும்
ஒரு விதையானது மண்ணில் இருந்து முளைத்து வரும் செழுமையைக் கொண்டே அப் பயிர் அல்லது செடி பின்னால் எவ்வாறு நன்றாக வளரும் என்பதை அறிய முடியும். அது போன்றே எதிர்காலத்தில் நல்ல ஒழுக்க சீலனாக வரக் கூடிய ஒரு மனிதனை சிறு வயதில் அவனது நல்ல பழக்க வழக்கங்களைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்.

4. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
இதன் நேர்பொருள் நெல்லையும் பதரையும் (சப்பை நெல்) தனித்தனி பிரித்தெடுக்க வேண்டுமானால் காற்று வீசும் வேளையிலேயே சுளகு மூலம் தூற்றி சுலபத்தில் பிரிக்கலாம். மெய்ப் பொருளாவது எமக்கு சாதகமான கால நேரம் அமையும் போது அதனை உடனே பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை உணர்த்தி நிற்கிறது. எந்த வேளையும் எமக்குச் சாதகமாக அமையாது. அப்படி அமையும் போது பல தேவையற்ற காரணங்களைக் கூறி அதனைத் தள்ளக்கூடாது. சந்தர்ப்பம் சரியாக அமைவதையே அதிர்ஷ்டம் என்பர்.

5. எழுத்தறிவித்தவள் இறைவன் ஆவான்
இந்தப் பழமொழியால் கல்வியின் முக்கியத்துவம் கூறப்படுகிறது. கல்வியைப் போன்று உயர்வான அழியாத செல்வம் உலகத்தில் வேறில்லை. கல்வி மனிதனின் அறியாமையைப் போக்கி அறிவைக் கொடுக்கிறது. நல்லது கெட்டது புரியவைக்கிறது. ஆதலால்தான் கல்வியைக் கற்றுக் கொடுப்பவர்களை தெய்வத்துக்கு சமமானதாகக் கூறுகிறார்கள். மாதா, பிதா, குரு, மூவரையும் தெய்வம் என்றார்கள். தானங்களில் திறந்தது வித்தியா (கல்வி) தானம் என்றும் சொல்கிறார்கள். எல்லாத் தருமச் செயல்களிலும் கிடைக்கும் புண்ணியத்தை விட கோடி புண்ணியம் ஏழைக்கு எழுதறிவித்தல் என்றார் பாரதியார்.

## எழுத்தாளராவதற்கு



சினிமாவின் மூலம் ரசிகர்களின் அபிமானத்தைப் பெற்ற நடிகரொருவர் பிரபலமான எழுத்தாளர் ஒருவரைச் சந்தித்தார். தானும் ஒரு எழுத்தாளராக விரும்புவதாக நடிகர் அவரிடம் கூறினார். எழுத்தாளர். "அப்படியாயின் அதற்கு நான்கு மைகள் வேண்டும்'' என்றார். "நிறங்களைக் கூறுங்கள் வாங்கி வருகிறேன்" என்றார் நடிகர் நடிகரின் ஆர்வத்தையும் அவசரத்தையும் அவதானித்த எழுத்தாளர். "நிற மைகள் தேவையில்லை. வேண்டியவை 1. தனிமை 2. பொறுமை 3. திறமை 4. பேனா[illegible] ஆகியன என்றார். ஓ அப்படியா? உங்கள் யோச[illegible] அருமை என்றார் நடிகர்.



## வர்ணம் தீட்டுவோம் வாருங்கள்

# ஒரு தந்தையின் குறிப்பு

செல்வந்தரான ஒரு தந்தைக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள். அவர்கள் சிறு வயதினராக இருக்கும் பொழுதே அவர்களது தாயார் இறந்து விட்டார். தந்தையே அவர்களைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து கல்வி புகட்டி அவர்கள் பேருடனும் புகழுடனும் வாழ வழியமைத்தார். இன்று அவர்கள் இருவரும் நல்ல பதவிகளில் இருந்து சம்பாதிக்கத் தொடங்கியும் விட்டனர். இந்த நிலையில் அவர்களுக்கு திருமணமும் செய்து வைத்தார்.

தந்தையின் கடமைகள் யாவும் முடிந்தன. இப்போது அவருக்கு வயதாகி விட்டதால் தனது சொத்தை எல்லாம் இரு மகன்மாருக்கும் பங்கிட்டு எழுதி விட்டார். ஆரம்பத்தில் மகன்மாரும் அவர்களது மனைவிமாரும் போட்டி போட்டுக் கொண்டு வயதான அவரைக் கவனித்து வந்தனர். நாளடைவில் அவர் அலட்சியப்படுத்தப்பட்டார். ஏச்சுப் பேச்சுக்கள் அதிகமாயின. குற்றங்களும் குறைகளும் கூறப்பட்டன. இறுதியில் பசி பட்டினியாக இருக்கவும் நேர்ந்தது.

தனது அநாதரவான நிலையால் மனம் நொந்த அவர் மன ஆறுதலுக்காக தன் நண்பரிடம் சென்று தனது நிலை பற்றிச் சொல்லிக் கலங்கினார். "பிள்ளைகள் கடைசி வரையும் காப்பாற்றுவார்கள் என்று தப்புக் கணக்குப் போட்டு உமக்கென்று எதுவும் வைக்காமல் பிள்ளைகள் பேரில் எழுதி விட்டீர். சரி நீர் நான் சொல்வதைப் போல் ஒரு முறை செய்து பாரும்" என்றார் நண்பர்.

இரண்டு மூன்று நாள்கள் கடந்த பின் ஒரு நாள் இரவு தந்தை தனது அறையில் அமர்ந்து ஒரு கட்டு தாள் காசுகளைத் திரும்பத் திரும்ப எண்ணிக் கொண்டிருந்தார். இதனைத் திறப்புத் துவாரத்தினூடாக இரு புதல்வர்களும் கவனித்து விட்டார்கள். மறுநாள் அந்தப் பணம் பற்றி இருவரும் தந்தையிடம் விசாரித்தனர். அவர் "நான் முன்னர் ஒருவருக்கு கடனாக இரண்டு லட்சம் பணம் கொடுத்தேன். இப்போது அது வட்டியோடு திருப்பித் தரப்பட்டுள்ளது. இதனை நான் உங்களுக்குத் தருவதாக இல்லை. என்னை நன்றாகக் கவனிக்கும் பிள்ளை எவரோ அவருக்கே இந்தப் பணம் எனக்குப் பின் சேரும்" என்றார்.

அன்றிலிருந்து தந்தைக்கு கவனிப்புகள் மிகுதியாகின. போலி உபசாரங்களைக் கண்டு அவர் மன வேதனை அடைந்தார். நண்பரிடம் சென்று நடப்பவை நடந்தவை பற்றிக் கூறியதோடு, அவரிடம் பெற்ற பணத்தையும் திருப்பிக் கொடுத்து அவரது ஆலோசனைக்கும் பண உதவிக்கும் நன்றியும் கூறினார்.

சில நாள்கள் சென்றன. தந்தை காலமானார். ஈமச் சடங்குகள் முடிய புதல்வர்கள் இருவரும் அவரது பணத்தை சமமாகப் பங்கு போடும் எண்ணத்துடன் அவரது பணம் வைக்கும் பெட்டியின் பூட்டை உடைத்து திறந்தனர். அங்கே பணம் எதுவும் இல்லை. வெள்ளைக் காதிகம் ஒன்றில் சில வரிகள் மட்டும் எழுதப்பட்டிருந்தன.

"வயதான காலத்திற்கென்று எந்தத் தகப்பனும் கொஞ்சம் பணம் வைத்துக் கொள்ள வேண்டும். பிள்ளைகள் மேலுள்ள பாசத்தால் எல்லாவற்றையும் அவர்களுக்கு கொடுத்து விட்டால் அந்தத் தகப்பனின் நம்பிக்கை நாசமாகி விடும்.

ஒரு பிடி சோற்றுக்கு பிள்ளைகளிடமே பிச்சை எடுக்கும் நிலை ஏற்படும். நான் செய்த தவறை இனியாரும் செய்யக் கூடாது. எனவே மகன்மாரே! நீங்கள் உங்கள் பிள்ளைகளிடம் அவதானமாக இருங்கள்" என்றிருந்தது.



[illegible] பிள்ளைகளை ஆளாக்க செய்யும் தியாகங்கள் கோடி. அவர்களை வயதான காலத்தில் தள்ளி வைத்தல் ஆகாது. அன்பு செய்யுங்கள். அரவணையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகர வரிசை ஒழுங்கில் சொற்களை எழுதுவோம்

க - வரிசை - காற்று, குடை, கீரை, கரும்பு, கூடை, கோழி, கிழக்கு, கேடு, கை, கொக்கு

---------------------------------------------

---------------------------------------------

ந - வரிசை - நிலம், நான், நண்டு, நூல், நீலம், நுங்கு, நேற்று, நெற்றி, நோய், நொண்டி

---------------------------------------------

---------------------------------------------

ப - வரிசை - பட்டம், பிரம்பு, பூ, புடலங்காய், பாம்பு, பீங்கான், பெட்டி, பொந்து பேனா, போத்தல்

---------------------------------------------

---------------------------------------------

ச - வரிசை - சுகம், சாக்கு, சூரியன், சங்கு, சேறு, சோறு, செம்பு, சீப்பு, சிப்பி, சைகை

---------------------------------------------

---------------------------------------------

த - வரிசை - தும்பு, தென்னை, தம்பி, தாய், தீமை, தூக்கம், திகதி, தொப்பி, தையல், தோட்டம்

---------------------------------------------

---------------------------------------------



# ஸ்கந்தவரோதயா எல்லேயில் மகுடம்

யாழ்ப்பாணம், மார்ச் 2
வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்டபாடசாலைகளுக்குஇடையிலான எல்லே தொடரில் ஆண்கள் பிரிவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிஅணிசம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் கடந்த திங்கட்கிழமைநடைபெற்றஇறுதியாட்டத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியாகல்லூரிஅணிநிர்ணயிக்கப்பட்ட 25 பந்துகளில் 10 இலக்குகளை இழந்து ஒரு ஓட்டத்தைப் பெற்றது. எழில்தர்சன் அந்த ஓட்டத்தைப் பெற்றுக்கொடுத்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 5 பந்துகளில் இரண்டுஇலக்குகளை இழந்து 2 ஓட்டங்களைப் பெற்றுச் சம்பியனானது. மூன்றாமிடத்தை பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலய அணி தனதாக்கியது. (ம-422)

# வென்றது விக்ரோறிஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 2
மன்னார் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் பேசாலை விக்ரோறிஸ் அணி சம்பியனானது.

மன்னார் உள்ளரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பேசாலை விக்ரோறிஸ் அணியை எதிர்த்து பள்ளிமுனை சென். லூட்சியா அணி மோதியது.

16:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது விக்ரோறிஸ் அணி. (ம-23)

# பாரதி சம்பியன்

முல்லைத்தீவு, மார்ச் 2
முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேநடத்தப்பட்டகால்பந்தாட்டத்தொடரில்முத்தையன்கட்டு பாரதி அணி சம்பியனானது.

ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில்நேற்றுமுன்தினம்நடைபெற்றஇறுதியாட்டத்தில் முத்தையன்கட்டுபாரதிஅணியைஎதிர்த்துகற்சிலைமடு பண்டாரவன்னியன் அணி மோதியது. 1:1 என்ற நிலையில் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியில் மேலதிக கோல்கள் எவையும் பதிவாகவில்லை. சமநிலைத்தவிர்ப்பு உதைகளில்வெற்றியைத்தீர்மானிக்கவேண்டியநிலைஏற்பட்டது. முடிவில் கிண்ணம் வென்றது பாரதி. வெற்றிபெற்ற அணிக்கு முல்லைத்தீவு மாவட்டச்செயலர் திருமதிரூபவதிகேதீஸ்வரன் கிண்ணத்தை வழங்கிக் கௌரவித்தார். (ம-102-23)



# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 2
யாழ்ப்பாணமாவட்டபாடசாலைகள்ஹொக்கிசங்கத்தின் கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் நிர்வாகசபை உறுப்பினர்களையும், பாடசாலைகளின் பொறுப்பு ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-23)

# யங்ஹென்றிஸ் அணி இறுதிக்குத் தகுதி

நெடியகாடு இளைஞர் விளை யாட்டுக்கழகத்தின் தொடரில் இறுதிக்குள் நுழைந்தது இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம்.

நெடியகாடு இளைஞர் வி. கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில்இளவாலையங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணி மோதியது. ஆட்டத்தின் 8 ஆவது நிமிடத்தில் யங்ஹென்றிஸ் அணியை தேடிவந்தது தண்டனை உதைவாய்ப்பு. பாடும்மீன் கோல் காப்பாளரின் முயற்சியால்அதுதடுத்துநிறுத்தப்பட முதல் பாதியில் எந்த அணியாலும் ஆதிக்கம் செலுத்த முடியவில்லை.

இரண்டாம் பாதியின் 32 ஆவது நிமிடத்தில் யங்ஹென்றிஸின்அனோஜன் முதல்கோலைப்பதிவசெய்தார். அடுத்தபத்தாவதுநிமிடத்தில் யங்ஹென்றிஸின் இரண்டாவதுகோல்பதிவானது. பாடும்மீனின்சார்பாக ஒருகோல் பதிவான போதிலும் யங்ஹென்றிஸின் ஆதிக்கத்தை முடக்கி விட முடியவில்லை. முடிவில் அந்தஅணி2:1என்றகோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-108)

# யங்ஸ்ராரிடம் கிண்ணம்

யாழ்ப்பாணம், மார்ச் 2
வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்டவிளையாட்டுக்கழகங்களுக்குஇடையிலானகால்பந்தாட்டத்தொடரில்வவுனியாவைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

வவுனியா நகரசபை விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வைரவப் புளியகுளம் யங்ஸ்ரார் அணியை எதிர்த்துஅல்ஹிஜிராஅணிமோதியது. 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது யங்ஸ்ரார். (ம-23)



# பற்றிசியன்ஸ், சென்றலைட்ஸ் அணிகள் அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 2
யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆண்கள் பிரிவு ஆட்டங்களில் பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி, சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி ஆகியன வெற்றி பெற்றன.

கொக்குவில்இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலிலேயே தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. முதலாவது ஆட்டத்தில் பற்றிசியன்ஸ் அணியை எதிர்த்து கே. ஸி. ஸி. ஸி. அணி மோதியது. இந்த ஆட்டத்தில் பற்றிசியன்ஸ் அணி 63:56 என்றபுள்ளிகளின் அடிப்படையில்வெற்றிபெற்றது.

பிறிதொரு ஆட்டத்தில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து கே. கே. எஸ். அணி மோதியது. இந்த ஆட்டத்தில்சென்றலைட்ஸ்அணி 82:49 என்றபுள்ளிகளின் அடிப்படையில்வெற்றிபெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே.தீவுகள் இங்கிலாந்து தொடர் நாளை

மேற்கிந்தியத் தீவுகள் - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் நாளை ஆரம்ப மாகவுள்ளது.
தொடரில் மூன்று ஆட்டங்கள். முதலாவது ஆட்டம் நாளையும் இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 5 ஆம் திகதியும் மூன்றாவது ஆட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. நேற்று முன்தினம் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் சபைத் தலைவரின் பதினொருவர் அணிக்கெதிரான ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றது. இதனால் மேற்கிந்தியத் தீவுகளில் வைத்து அந்த அணிக்கு எதிராக தொடரைக் கைப்பற்றக்கூடிய அறிகுறியையே அந்த அணி வெளிப்படுத்தியுள்ளது என்று கருதப்படுகிறது. (ம)

# போராடாமல் வீழ்ந்தார் வாவ்ரிங்கா

டுபாய் ரென்னிஸ் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டமொன்றில் அதிர்ச்சித் தோல்வியடைந்தார் வாவ்ரிங்கா.
பன்னாட்டுத் தரப்படுத்தலில் 3 ஆவது நிலையில் உள்ள சுவிற்சர்லாந்து வீரர் வாவ்ரிங்காவை எதிர்த்து 77 ஆவது இடத்தில் உள்ள டொமிர் தும்குர் என்ற வீரர் மோதினார். அதிகம் அறியப்படாத இவரிடம் 5:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் செற்றை போராடி இழந்தார் வாவ்ரிங்கா. இரண்டாவது செற்றில் வாவ்ரிங்காவால் போராட இயலவில்லை. 3:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இரண்டாவது செற் பறிபோக 0:2 நேர் செற் கணக்கில் சரணடைந்தார் வாவ்ரிங்கா. டுபாய். ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முதலாவது அதிர்ச்சித் தோல்வியாக இது அமைந்தது.
இந்தத் தோல்வியின் மூலம் தரப்படுத்தலிலும் அவர் பின்னடைவைச் சந்திக்கலாம் என்று கருதப்படுகிறது. (ம)





# மாட்டீன் குப்தில் மிரட்டல் ஆட்டம்

மாட்டீன் குப்திலின் சிக்சர் மழை கைகொடுக்க தென்னாபிரிக்காவுக்கு எதிரான நான்காவது ஒருநாள் ஆட்டத்தில் வெற்றிபெற்று தொடரை 2:2 என்றாக்கியது நியூசிலாந்து.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரரான குயின்டன் டி ஹொக் ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்து ஏமாற்றினார். அம்லா - பிளாசிஸ் இணை இணைப்பாட்டமாக 65 ஓட்டங்களைப் பகிர்ந்தது. 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் அம்லா. ஆரம்ப வீரர்கள் இருவரையும் ஜீடன் பட்டேல் வீழ்த்தினார். பிளாசிஸ் அரைச்சதம் கடந்தார். 25 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் டுமினி. வில்லியர்ஸ் களமிறங்கியபோது பிளாசிஸ் இருக்கைக்குத் திரும்பினார். மில்லர், பிர்டோரியஸ் ஏமாற்றினாலும் ஒரு முனையில் தனித்து நின்று அதிரடியைக் காட்டினார் வில்லியர்ஸ். 59 பந்துகளில் 3 சிக்சர்கள் அடங்கலாக 72 ஓட்டங்களைக் குவித்தார் வில்லியர்ஸ். முடிவில் தென்னாபிரிக்கா 279 -8.
பந்துவீச்சில் ஜீடன் பட்டேல் 2 இலக்குகளையும், சான்நெர், போல்ட், சவுத்தி, நீஸ்கம் நால்வரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
நியூசிலாந்துக்கும் ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. நான்கே ஓட்டங்களுடன் ரபாடாவிடம் வீழ்ந்தார் பிரவுண் நீல். 21 ஓட்டங்களுடன் வில்லியம்சனை வீழ்த்தினார் தாகிர். எனினும் தென்னாபிரிக்கப் பந்துவீச்சாளர்களைப் பாடாய்ப்படுத்தினார் குப்தில். அவர், 38 பந்துகளில் அரைச் சதத்தையும், 82 பந்துகளில் சதத்தையும் நிறைவு செய்தார். குப்திலின் ஆட்டத்தில் பதற்றம் இல்லை. ரெய்லர் அரைச்சதம் கடந்து தன்னாலான பங்களிப்பை வழங்கினார். குப்திலின் பவுண்டரி மழை தொடர்ந்தது. 150 ஓட்டங்களையும் நிறைவுசெய்தார். 30 பந்துகள் மீதமிருக்க வென்றது நியூசிலாந்து. குப்தில் ஆட்டமிழக்காமல் 180 ஓட்டங்களைக் குவித்து ஆட்ட நாயகனாகத் தெரிவானார். (ம)

# ஐக்கியம் சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 2
மன்னார் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப் பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் ஜோசவாஸ் நகர் ஐக்கியவிளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.
மன்னார் உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஜோசவாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்துபேசாலை விக்ரோறிஸ் விளையாட்டுக் கழகஅணிமோதியது. மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் இருசெற்களையும் கைப்பற்றிய ஐக்கிய அணி மூன்றாவது செற்றுக்கு வேலை வைக்காமல் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம-23)



# தலைவராகத் தொடர்கிறார் அனுபவ வீரர் ரங்கன கேரத்

பங்களாதேஷ் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இலங்கை அணிக்கு கேரத் தலைவராக நியமிக்கப்பட்டார்.
பங்களாதேஷ் அணி இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. முதலாவது ஆட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதியும் இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. இந்தத் தொடருக்கான இலங்கை அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. மத்தியூஸ், காயத்தில் இருந்து மீண்டு அணிக்குத் திரும்பாததை அடுத்து தலைவராக கேரத் நியமிக்கப்பட்டார். முன்னதாக நடைபெற்ற இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான தொடரிலும் கேரத் தலைவராக செயற்பட்டார். இது அவர் தலைமையில் இலங்கை விளையாடவுள்ள இரண்டாவது தொடராகும்.
இலங்கை அணி விவரம் - கேரத் (தலைவர்), தனஞ்சய டி சில்வா, நுவான் பிரதீப், கருணாரத்ன, லக்மல், டில்ருவான் பெரேரா, சன்டகன், தரங்க, சந்திமல், டிக்வெல்ல, குணரத்ன, லகிரு குமார, குசல் மென்டிஸ், புஸ்பகுமார சஞ்சய. (ம)

# களந்திரும்பினார் அலக்ஸ் கேல்ஸ்



இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையில் நாளை ஆரம்பமாகவுள்ள தொடரில், இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கேல்ஸ் களமிறங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
கடந்த ஜனவரி மாதம் இந்தியாவுக்கு எதிராக ஐந்து ஆட்டங்கள் கொண்ட தொடரின் போது கேல்ஸின் கையில் காயமேற்பட்டது. இதனால் அவர் அடுத்த மூன்று மாதங்கள் ஓய்வில் இருக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. ஆனால் காயம் விரைவாகக் குணமடைந்ததை அடுத்து மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடரில் பங்கெடுப்பதற்காக நேற்றுச் சென்றார். விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் இடம்பிடிப்பாரா என்பது தொடர்பில் உறுதிப்படுத்தப்படவில்லை. (ம)

# புனே ஆடுகளம் படுமோசமானது என முறைப்பாடு

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் நடைபெற்ற புனே ஆடுகளம் மிகவும் மோசமானது என்று பன்னாட்டு கிரிக்கெட் சபைக்குக் குறித்த ஆட்டத்தின் தலைமை நடுவர் கிறிஸ் புரோட் முறைப்பாடு வழங்கினார்.
இந்த ஆட்டத்தில் இந்தியாவை வெறும் இரண்டரை நாள்களில் சுருட்டித்தள்ளி 333 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது ஆஸ்திரேலியா. ஆஸ்திரேலிய அணியின் தலைவர் சிமித், இதுபோன்ற ஆடுகளத்தை தான் பார்த்ததில்லை எனக் குறிப்பிட்டிருந்தார். முன்னாள் வீரர்கள் பலரும் ஆடுகளம் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருந்தனர். இந்த நிலையில் இவ்வாறான ஒரு முறைப்பாடு பன்னாட்டு கிரிக்கெட் சபையிடம் பதிவானது. இதனால் அடுத்த 14 நாள்களுக்குள் இந்த முறைப்பாடு தொடர்பில் விளக்கம் வழங்கும் கட்டாயம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு ஏற்பட்டது.
மைதானப் பராமரிப்பில் சதிகளோ அல்லது குறைகளோ உள்ளமை அறியப்பட்டால் பெரும் தொகைப் பணம் தண்டமாக விதிக்கப்பட வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது. (ம)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறந்த ஆட்டத்தாலேயே தொடர்கிறோம் முதலிடத்தில்

## சிடேன் பெருமிதம்



ஆகச் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்துவதால் தான் ரியல் மட்ரிட் அணி முதலிடத்தில் தொடர்கிறது என்று அந்த அணியின் முகாமையாளர் சிடேன் தெரிவித்தார்.

ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலானபழைமைவாய்ந்தலாலிகா தொடரில் நடப்பு வருடத்துக்கான புள்ளிப்பட்டியலில்ரியல்மட்ரிட்முதலிடத்தில் உள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வில்லாரியல் அணிக்கெதிரான ஆட்டத்தில் மட்ரிட் வெற்றிபெற்றது. இதனையடுத்துகருத்துத்தெரிவிக்கையிலேயே சிடேன் இவ்வாறு தெரிவித்தார்.

ஆடுகளத்தில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்துவதன் மூலம் நாங்கள் என்ன சாதிக்க விரும்புகிறமோ அதைப் பெறுகிறோம். ரியல் மட்ரிட் அணி வீரர்களால் நான் பெருமையடைகிறேன். ஏனென்றால் அவர்கள் அனைவரினதும் ஆட்டமும் நாளுக்குநாள்மேம்பட்டுவருகிறது. லூக்காஸ், மொராட்டா போன்ற இளம் வீரர்கள் நம்பிக்கை நட்சத்திரங்களாக மாறியுள்ளனர். எம்முடன் கால்பந்தாட்ட உலகின் ஆகச் சிறந்த வீரர் ரொனால்டோ உள்ளார். சிறந்த தலைமைத்துவம் மிக்க ராமோஸ் உள்ளார். பென்சிமா, பேல் உள்ளனர். ரொனால்டோ, ராமோஸ், பேல் கூட்டணி ஒவ்வொரு ஆட்டத்திலும் ஆதிக்கத்தை நிலைநாட்டத் துடிக்கிறது. இதுவே எமது வெற்றிநடைக்கான முக்கிய காரணம்எனசிடேன்மேலும்தெரிவித்தார். (ம)

கடை வாடகைக்கு
மருதனார் மடம் சந்தியில் ஆஞ்சநேயர் கோயிலுக்கு முன்பாக RDB வங்கிக்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய கடை வாடகைக்கு உண்டு.
0777187108




## வடக்கின் போர் மார்ச் 9 ஆரம்பம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையேயான 111ஆவது வடக்கின் பெரும் துடுப்பாட்டப் போட்டி எதிர்வரும் 9ஆம் 10ஆம் 11ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பான செய்தியாளர் சந்திப்பு நேற்று புதன்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்றது. இதன்போதே மேற்படி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. இந்த 111ஆவது துடுப்பாட்டப்போட்டிக்குமொபிட்டல்நிறுவனம் அனுசரணை வழங்குகின்றது. (வ-23)

# வலுவான நிலைக்கு திரும்புவார் கோக்லி

## ஸ்ராக் கருத்து



இந்தியஅணியின்தலைவரான விராட் கோக்லி மிகவும் வலுவான நிலையுடன் மீண்டு வருவார் என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் மிச்செல் ஸ்ராக்.

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் புனேயில் அண்மையில் நடைபெற்றது. 333 ஓட்டங்களால் ஆஸ்திரேலியாவெற்றிபெற்றது. இந்தஆட்டத்தின் முதல் இன்னிங்ஸின் கோக்லியை ஓட்டமெதனையும் பெறவிடாது இரண்டே பந்துகளில் வீழ்த்தினார் ஸ்ராக். இரண்டாவது இன்னிங்ஸில் 13 ஓட்டங்களையே கோக்லி பெற்றார்.

இந்த ஆட்டத்தில் கோக்லியின் சராசரி 6.5. இந்திய மண்ணில் அவரதுகுறைந்தசராசரிஇதுவே. இந்த நிலையில் அவரின் மீள்வருகை தொடர்பில் கருத்துத் தெரிவித்தார் ஸ்ராக்.

இந்தத் தொடரில் விராட் கோக்லியின் இலக்குத்தான் முக்கிய விடயமாகஇருக்கப்போகிறதுஎன்பது எங்களுக்குதெரியும். இந்ததொடரில் நாங்கள் சிறப்பான இடத்தைப் பிடிக்க இன்னும் 6 முறை அவரை ஆட்டமிழக்கச் செய்ய வேண்டியுள்ளது. அவர் பெரிய அளவில், வலுவானநிலையுடன் திரும்பி வருவார் என்பது எனக்குத் தெரியும். கோக்லி ஓர் உலகத்தரமான வீரர் என்பதை நாங்கள் அறிவோம். இந்தவருடத்தில் மலைபோன்று ஓட்டங்களைக் குவித்துள்ளார். இதனால் அவர் மீதுமுழுஎச்சரிக்கையாகஇருக்க வேண்டும் என ஸ்ராக் மேலும் தெரிவித்தார். (ம)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை O/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், தொழில் தேடுவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
ஆங்கிலத்தில் ஒரெழுத்துத்தெரியாதவர்கள்கூட மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 04.03.2017
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00
4. மாலை 03.00-05.00
1. வாரநாள் பிரிவுகள் : (திங்கள், புதன்) காலை 8-10 காலை 10-12
2. வாரநாள் பிரிவுகள் : (செவ்வாய், வியாழன்) காலை 8-10 காலை 10-12
SAAMSON
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.